விலை : 20.00
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

Valampurii

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 18 வள்ளுவர் ஆண்டு 2048 மாசி 04 வியாழக்கிழமை (16.02.2017) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 059

அன்பு வாசகர்களே...

நாகபடுவானில் கிடைத்த பண்டைத் தமிழரின் பண்பாட்டுச் சான்றுகள்

பேராசிரியர்
ப.புஸ்பரட்ணம்

அவர்கள் எழுதும் விசேட கட்டுரை நாளைய வலம்புரியில்...

## போர்க்குற்ற நீதிமன்றப் பேச்சுக்கள் புதிய அரசியலமைப்பை சிதைத்துவிடும்

## சவால்கள் அதிகம் என்கிறார் சந்திரிகா

(கொழும்பு)

போர்க்குற்ற நீதிமன்றங்கள் அமைப்பது குறித்து இப்போதைய காலகட்டத்தில் பேசுவதற்கு ஆரம்பித்தால் புதிய அரசியலமைப்பு உருவாக்கம் சாத்தியமில்லாமல் போய்விடும் என்று முன்னாள் ஜனாதிபதியும் தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தின் முக்கியஸ்தருமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.



தனது ஆட்சிகாலத்தில் இருந்த அரசாங்கத்திற்கு ஏற்பட்ட சவால்

23ஆம் பக்கம் பார்க்க....

## யாழில் நேற்று திடீர் சோதனை

(யாழ்ப்பாணம்)

விசேட அதிரடிப்படை பொலிஸார், மற்றும் இராணுவத்தினர் நேற்று இரவு வேளையில் யாழில் உள்ள பல்வேறு இடங்களில் திடீரென சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

நீண்ட காலத்திற்கு பின்னர் இராணுவம் சோதனை நடவடிக்

23ஆம் பக்கம் பார்க்க....

# ஜெனிவா பிரேரணையை அமுலாக்க இலங்கைக்கு மேலும் இரு வருட அவகாசம்!

## ஐரோ., ஐ.நா பிரதிநிதிகள் உறுதிப்படுத்தினர்

(யாழ்ப்பாணம்)

ஐ.நா மனித உரிமை பேரவையில் கடந்த 2015-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட இலங்கை குறித்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கத்துக்கு மேலும் இரண்டு வருடங்கள் கால அவகாசம் வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டு வந்த பல்வேறுபட்ட கருத்துக்கள் தற்போது உறுதி செய்யப்பட்டுள்ளன. வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கும் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐ.நா பிரதிநிதிகளுக்கிடையில் நேற்று நடந்த சந்திப்பின் போதே ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐ.நா பிரதிநிதிகளால் இவ்விடயம் உறுதி செய்யப்படுகிறது. (23-ம் பக்.)

## மன்னார் மனிதப் புதைகுழி குற்றப்புலனாய்வு பிரிவுக்கு நீதிமன்றம் கட்டளை பிறப்பிப்பு

(மாந்தை)

மன்னார் திருக்கேதீஸ்வரம் மாந்தை மனித புதைகுழி தொடர்பிலான வழக்கு விசாரணைகள் எதிர்வரும் 27ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

மன்னார் நீதிமன்றம் விசேட குற்றப்புலனாய்வுப் பிரிவிற்கு கட்டளை ஒன்றை பிறப்பித்துள்ளமையினால் குறித்த வழக்கை மன்னார் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ்ராஜா நேற்று ஒத்திவைத்துள்ளார்.

இந்த வழக்கு விசாரணை குறித்து காணாமல்போன குடும்பங்களின் உறவினர்கள் சார்பாக மன்றில

23ஆம் பக்கம் பார்க்க....

## மாத்திரையை தவறி கொடுத்ததில் பச்சிளம் பாலகன் பரிதாப மரணம்

(யாழ்ப்பாணம்)

இரத்த அழுத்த நோய்க்கு பயன்படுத்தப்படும் மாத்திரையை, பிறந்து 14 நாட்களேயான பச்சிளம் குழந்தைக்கு வாய் வழியாக கொடுத்த நிலையில் பிரஸ்தாப குழந்தை பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

இதில் மாவிட்டபுரம்- நல்லிணக்கபுரத்தைச் சேர்ந்த கபில்ராஜ் வயசன் (14 நாட்கள்) என்ற ஆண் குழந்தையே நேற்று முன்தினம் யாழ் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்துள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது.

மாவட்டபுரம் - நல்லிணக்கபுரம் பகுதியை சேர்ந்த தாய் ஒருவருக்கு 8 மாதத்தில் பிறந்த குழந்தை ஒன்றுக்கு உடல் பலவீனத்தைப் போக்குவதற்கான மாத்திரையும், குழந்தையின் தாய்க்கு இரத்த அழுத்த

23ஆம் பக்கம் பார்க்க....

## 24 கிலோ கஞ்சா மீட்பு; ஆட்டோவுடன் மூவர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்புக்கு கடத்தி செல்வதற்காக தயார் செய்யப்பட்டு பொதிகளாக பரிமாறப்படவிருந்த 24 இலட்சம் ரூபாய் பெறுமதியான கேரளா கஞ்சாவினை இளவாலை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

அத்தோடு சம்பவம் தொடர்பில் மூவரையும் பொலிஸார் கைது செய்ததுடன் முச்சக்கரவண்டி ஒன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

நேற்றைய தினம் கேரள கஞ்சா கடத்தல் இடம்பெறுவதாக யாழ். இளவாலை பொலிஸாருக்கு தகவலொன்று கிடைத்துள்ளது. இதனை அடுத்து இக்கடத்தல் நடவடிக்கையை

24ஆம் பக்கம் பார்க்க....

## இரு வருட கால அவகாசத்தில் உலகமே எம்மை மறந்து விடும்


### ஐரோ. பிரதிநிதிகளிடம் விக்னேஸ்வரன் எடுத்துரைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக்கு இரண்டு வருட காலம் அவகாசம் கொடுக்கப்பட்டால் எமது பிரச்சினைகளை உலகம் மறந்து போகும் என தெரிவித்த வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், அவ்வாறு அவகாசம் வழங்குவதாயின் குறுகிய காலமும் ஐ.நாவின் கூடிய மேற்பார்வையும் அவசியம் என ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தூது

23ஆம் பக்கம் பார்க்க....



## வடக்கு - கிழக்கு மக்கள் ஒன்றிணைவது அவசியம்



### வடக்கு முதலமைச்சரின் அழைப்பிற்கு கிழக்கு முதலமைச்சர் நசீர் பதில்

(திருகோணமலை)

அதியுச்ச அதிகார பகிர்வுக்காக வடக்குக் கிழக்கு மக்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாயம். இது தொடர்பில் வடமாகாண முதலமைச்சர் விடுத்த அழைப்பு எந்தளவிற்கு முக்

24ஆம் பக்கம் பார்க்க....

## இலங்கை அரசாங்கத்துக்கு ஐ.நா கால அவகாசம் வழங்கக்கூடாது

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

இறுதி யுத்தத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்கள், மறைத்து வைக்கப்பட்டுள்ள இடங்களையும் அவர்கள் பெயர் விபரங்களையும் வெளியிடக்கோரியும், இலங்கை அரசாங்கத்திற்கு ஐ.நா கால அவகாசம் வழங்கக்கூடாது என்பதை வலியுறுத்தியும் தொடர் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக இறுதி யுத்தத்தில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் தெரிவித்துள்ளனர்.

இம் மாதம் 20 ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் கிளிநொச்சி

24ஆம் பக்கம் பார்க்க....

# ஆசிரியர்களின் கோரிக்கை ஏற்பு

## முடிவுக்கு வந்தது தொடர் போராட்டம்

வெளிமாவட்டத்தில் நிபந்தனைக் காலத்தை பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்குதல் மற்றும் வடக்கு மாகாண கல்வி அமைச்சின் முன்பாக கவனயீர்ப்புப் போராட்டம் நடத்திய மூன்று ஆசிரியர்களின் தற்காலிக பணி நீக்கம் என்பன தொடர்பில் நல்லூர் செம்மணி வீதியில் அமைந்துள்ள வடக்கு மாகாண கல்வி அமைச்சு முன்பாக நடந்த ஆசிரியர்களின் தொடர் போராட்டம் நேற்று முடிவுக்கு வந்தது.

தற்காலிக பணி நிறுத்தம் செய்யப்பட்ட ஆசிரியர்களின் பணி நீக்கத்தை இரத்துச் செய்வது, வெளிமாவட்டத்தில் 6 வருட சேவைக் காலம் முடிந்த ஆசிரியர்களுக்கு இடமாற்றம் வழங்குவது என்பவற்றை வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் ஏற்றுக் கொண்டு எழுத்து மூலமான உறுதிமொழி வழங்கியதை அடுத்து ஆசிரியர்களின் தொடர் போராட்டம் கைவிடப்பட்டது. (ந-9)

## மருத்துவ முகாம்

யாழ்.ஜெய்ப்பூர் வலுவிழந்தோர் புனர்வாழ்வு நிறுவனத்தின் 30 ஆண்டு நிறைவை முன்னிட்டு எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணி வரையும் முல்லைத்தீவு மாஞ்சோலை மாவட்ட வைத்தியசாலையில் இடம்பெறவுள்ள இலவச மருத்துவ முகாமில்,

நடமாடும் உபகரணங்கள் வழங்குதல், செயற்கைக்கால் மற்றும் சார்புறுப்புக்கான அளவெடுத்தல், செயற்கைக்கால் சிறிய திருத்த வேலைகள் செய்தல் போன்ற சேவைகள் இடம்பெறவுள்ளது.

இதில் பங்குபற்றி பயன்பெறக்கூடிய மாற்றுத்திறனாளிகளை தவறாது பங்கு கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (செ)



முதலாம் ஆண்டு

# நினைவஞ்சலி

அமரர்

கந்தையா குணராசா

(சாகித்ய ரத்னா செங்கை ஆழியான்)

பிறப்பு: 25.01.1941 மறைவு: 28.02.2016

*திதி: அபர பக்க ஷஷ்டி*

எங்கள் அன்புத் தெய்வமே
நீங்கள் மறைந்து ஓராண்டு ஓடி விட்டது.
இப்பிரிவை எங்களால்
தாங்க முடியவில்லை.
இப்பிறப்பில் இனி எப்போ
உங்களை மீண்டும் காண்போம்

75/10A, பிறவுண் வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம்.
021-222 2337

உங்கள் பிரிவால் வாடும்: மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மற்றும் உற்றார், உறவினர்கள்

(7969)

# மரண அறிவித்தல்

## கிருஷ்ணன் சிவக்கொழுந்து



*கரணவாய், அண்ணாசிலையடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கிருஷ்ணன் சிவக்கொழுந்து அவர்கள் நேற்று (15.02.2017) காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்ற கிருஷ்ணன் - அசுவதி தம்பதியரின் மகனும் அருளம்மாவின் பாசமிகு கணவனும் மாணிக்கவள்ளி தம்பதிகளின் மருமகனும் சாந்தகலா, காலஞ்சென்ற சந்திரமோகன், சுமதி, அகிலன் (நீர்ப்பாசன திணைக்களம்), பாரதிராஜ் (G.S-கரவெட்டி பிரதேச செயலகம்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற கோபால், காலஞ்சென்ற தர்மரத்தினம் (ஓய்வுபெற்ற நிதி உதவியாளர்), யோகம்மா, தவமணி (ஓய்வுநிலை உத்தியோகத்தர் - உடுப்பிட்டி ப.நோ.கூட்டுறவுச் சங்கம்), இராசேந்திரம் ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற பாஸ்கரன், இந்திராதேவி, சிவராஜா, சுமதி, அனந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும் தயாளன், நிஷாந்தன், சுஜீவன், நிதர்சன், பிரசாந்தன், சிந்து, வதீஸ்ஷா, கார்த்திகா, பிரியங்கன், சிந்துஜன், அப்ஷன், பிரியந்தி, அபிஷானி, ஆருஜா, ஆர்த்தனி, அனஷ்ரிகா ஆகியோரின் பேரனும் கார்த்திகேயனின் பூட்டனும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.02.2017) வியாழக்கிழமை முற்பகல் 11.30 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வெல்லங்கிராய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.*

(C-7561) குடும்பத்தினர்

# வீட்டினுள் நுழைந்த திருடர்களால்

## பணமும் பொருட்களும் திருடப்பட்டன

முல்லைத்தீவு உடுப்புக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை துணிகர திருட்டுச் சம்பவமொன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது ஐம்பத்தி மூவாயிரம் ரூபாய் பணம் உள்ளிட்ட பொருட்கள் பலவும் திருடப்பட்டுள்ளது.

இக்கொள்ளை சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

முல்லைத்தீவு உடுப்புக்குளம் பகுதியில் தனிமையில் வாழும் 51 வயதுடைய பெண்ணொருவரின் வீட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குறித்த பெண் மாலை நான்கு முப்பது மணியளவில் அயல வீடொன்றுக்கு சென்றுவிட்டு மீண்டும் இரவு ஏழு முப்பது மணியளவில் வீடு திரும்பிய போது வீட்டினுடைய கூரை வழியாக ஓட்டை கழற்றி லெவல் சீட் உடைக்கப்பட்டு வீட்டினுள் நுழைந்த திருடர்கள் ஐம்பத்தி மூவாயிரம் ரூபாய் பணம், கையடக்க தொலைபேசி உள்ளிட்ட மேலும் பல பொருட்களை திருடிச் சென்றுள்ளனர்.

இந்த திருட்டுச் சம்பவம் தொடர்பில் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-281)

# வாள்களுடன் அட்டகாசம்

வடமராட்சி வதிரிச் சந்திப் பகுதியில் நேற்று புதன்கிழமை மாலை ரௌடிகளின் அட்டகாசம் காரணமாக பொது மக்கள் பெரும் பீதிக்குள்ளாகியுள்ளனர்.

மாலை 6 மணியளவில் வதிரிச் சந்தி தொடக்கம் நெல்லியடி சந்திக்கு அருகாமை வரையான பகுதிகளில் இலக்கத்தகடுகள் அற்ற மோட்டார் சைக்கிள்களில் வாள்கள், கொட்டன்களுடன் சுற்றித் திரிந்த ரௌடிக் கும்பல் பொது மக்களை அச்சுறுத்தும் விதத்தில் பெரும் அட்டகாசத்தில் ஈடுபட்டது.

இது தொடர்பில் நெல்லியடிப் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் இரண்டு பொலிஸ் அணிகள் சம்பவ இடத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டபோதிலும் ரௌடிக் கும்பல் தப்பிச் சென்றுவிட்டது.

அப்பகுதிக்கு மேலதிக பொலிஸார் அனுப்பப்பட்டுள்ளதுடன் புலன் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (செ-60)

## சங்கானை பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம் (வ/து)

## கிளை நிலையங்கள் கட்டுவதற்குரிய கூலிக்கான கூறுவிலை கோரல்

மேற்படி சங்கத்தின் கிளை நிலையங்களான 58, 60 புதிதாக அமைப்பதற்குரிய கூலிக்கான கூறுவிலையினை சங்க தலைமைக்காரியாலயத்தில் வழங்கப்படும் விண்ணப்பப்படிவத்தினை மீளளிக்கப்படாத . ரூபா. 100.00 செலுத்தி பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 25.02.2017 இற்கு முன்பு சங்க தலைமைக்காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு தெரியப்படுத்திக்கொள்கிறேன்.

**குறிப்பு :- சங்க பணியாளர்கள், சங்க அங்கத்தவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.**

தலைவர்
பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கம்,
பிரதான வீதி,
சங்கானை
(7964)

# INVITATION FOR BIDS

# TEACHING HOSPITAL, JAFFNA

The Chairman of the Regional Procurement Committee, Teaching Hospital, Jaffna, invite sealed bids from eligible and qualified bidders for the construction of lift room and installation of Lift Machine works in the schedule below.

| | Work/Service Details | Non-refundable Deposit (Rs.)(Bid fee) | Security Deposit (Rs.) | Validity Period of Bid Security (Days) | Approximate BOQ of the work (Rs. In million) | Minimum ICTAD Grade |
|---|---|---|---|---|---|---|
| 1. | Construction of Lift Room & Installation of Lift Machine | 500.00 | 135,000.00 | 91 | 6.6 | C7 |

2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure (NCB).

3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of Building Construction for grade given in the schedule or above with the institute for Construction, Training and Development (ICTAD).

4. Interested bidders can inspect bid forms at the Residence Engineer's Office, CECB, Jaffna during office hours, if necessary.

5. A Complete set of Bidding Documents in English Language may be purchased by Interested Bidders from Director, Teaching Hospital, Jaffna upon producing valid registration book and receipt for the cash payment for the bid fee from 16.02.2017 up to 09.03.2017 during office hours. The payment shall be made to the Shroff's Office, Teaching Hospital, Jaffna.

6. Sealed bids shall be delivered to the address below at or before 10.00 hrs on 10.03.2017, late bids will be rejected. Bids will be open at Director's Office, Teaching Hospital, Jaffna soon after closing in the presence of bidders or their representatives who choose to attend.

Director (Chairman),
Regional Procurement Committee,
Teaching Hospital, Jaffna.
16/02/2017.

(C- 7560)

# யாருடைய ஆதரவுமின்றி அ.தி.மு.க. ஆட்சி தொடரும்

## முதலமைச்சர் பன்னீர் உறுதி

(சென்னை)

**யாருடைய ஆதரவும் இல்லாமல் அ.தி.மு.கவின் ஆட்சி தமிழகத்தில் தொடரும் என்று முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் தொண்டர்கள் மத்தியில் உறுதிபடத் தெரிவித்துள்ளார்.**



மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதா மீதான சொத்துக் குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில், நேற்று முன்தினம் காலை உச்சநீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அதில் சிறப்பு நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு உறுதி செய்யப்பட்டது. இதன்மூலம் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோருக்கான தண்டனை உறுதியானது.

இதையடுத்து, சென்னை அடுத்த கூவத்தூரில், எம்.எல்.ஏக்களுடன தங்கியிருந்த சசிகலா, ஆலோசனையில் ஈடுபட்டார்.

அதேநேரம், ஓ.பன்னீர் செல்வமும் தனது ஆதரவாளர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

அதைத் தொடர்ந்து, 'அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் கசப்பான நிகழ்வுகளை மறக்க வேண்டும். ஒற்றுமையுடன் இருந்து அவரவருக்குரிய முக்கியத்துவத்துடன் தொடர்ந்து செயற்படுவதில் எவ்வித தயக்கமும் இருக்காது' என்ற அறிக்கை மூலம் சசிகலா அணியில் உள்ளவர்களுக்கு அழைப்பு விடுத்தார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் பேசியதாவது,

மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் ஆன்மா இன்னும் உயிரோடுதான் இருக்கிறது. அந்த ஆன்மா, நாட்டையும் நாட்டு மக்களையும் உறுதியாக காப்பாற்றி நல்வழிப்படுத்தும். ஜெயலலிதாவின் நல்லாட்சிதான் இப்போதும் நடக்கிறது. தொடர்ந்து, அந்த நல்லாட்சி நடக்கும். ஜெயலலிதாவின் கொள்கைகளை, கோட்பாடுகளை அவரது வழியில் செயற்படும் இந்த அரசு உறுதியாக செயற்படுத்தும். அ.தி.மு.க. சட்டப்பேரவை உறுப்பினர்களின் பெரும்பான்மை ஆதரவுடன், இப் போதைய நல்லாட்சி தொடரும்.

தமிழகத்தில் அமைதியை நிலைநாட்டுவது நமது கடமை. இருக்கும் சூழலை பொறுமையுடன் பார்த்து, ஆட்சியை தொடர எவ்வித இடையூறும் இல்லாமல் சட்டம் ஒழுங்கை காப்பாற்றும் வகையில் நம் செயற்பாடு இருக்க வேண்டும். அமைதி காப்போம். உறுதியாக நம்முடைய தலைமையில் ஆட்சி தொடரும்.

மாற்றுக்கட்சி, எதிர்க் கட்சி என யாருடைய ஆதரவும் இல்லாமல், முழுக்க முழுக்க அ.தி.மு.க. ஆட்சி தொடர வேண்டும் என்பதற்காக 2 ஆவது முறை அ.தி.மு.கவை மக்கள் ஆட்சியில் அமர்த்தினர் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-12)

## சரணடைய கால அவகாசம் கேட்டு சசி விண்ணப்பித்த மனு நிராகரிப்பு



சரணடைய கால அவகாசம் கேட்டு வி.கே. சசிகலா விண்ணப்பித்த மனுவை உச்ச நீதிமன்றம் நிராகரித்தது.

மறைந்த தமிழக முதல்வர் ஜெயலலிதா, சசிகலா உள்ளிட்டோர் மீதான சொத்துக்குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் சசிகலா, இளவரசி, சுதாகரன் உள்ளிட்ட 3 பேரும் குற்றவாளிகள் என உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கியது.

ஜெயலலிதா மரணமடைந்து விட்டதால் வழக்கிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டு விட்டதாகவும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் 4 ஆண்டு சிறைத் தண்டனை விதித்து உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

இதனையடுத்து அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சசிகலா, பெங்களூர் நீதிமன்றத்தில் சரணடைய கால அவகாசம் வேண்டும் என்று உச்ச நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த நிலையில் இது தொடர்பான மனு நேற்று புதன்கிழமை விசாரணைக்கு வந்தது. சசிகலாவின் தரப்பு சட்டத்தரணி கே.டி.எஸ் துளசி சொத்துக்குவிப்பு வழக்கில் தண்டனை பெற்றுள்ள அ.தி. மு.க. பொதுச் செயலாளர் சசிகலா நீதிமன்றத்தில் ஆஜராக அவகாசம் அளிக்க வேண்டும் என்று வாதிட்டார்.

இதற்கு பதிலளித்த உச்ச நீதிமன்ற நீதிபதி பிசி கோஷ், "நாங்கள் உடனடியாக சரணடைய வேண்டும் என்று கூறியுள்ளோம்" என்று கூறி சசிகலாவின் மனுவை நிராகரித்து உத்தர விட்டார். (இ-12)

## அ.தி.மு.கவின் சண்டையில் ஆட்சி அமைக்கும் தி.மு.க.

### செயல் தலைவர் ஸ்டாலின் நம்பிக்கை




முதலமைச்சர் சண்டையில் ஆளும் கட்சியான அ.தி.மு.கவினரே ஆட்சியை கவிழ்ப்பார்கள் எனவும் அதன் மூலம் தி.மு.க. ஆட்சி அமையும் எனவும் தி.மு.க. செயல் தலைவர் மு.க.ஸ்டாலின் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

தி.மு.க. இளைஞர் அணியின் அமைப்பாளர்கள் கூட்டம் நேற்று தமிழ்நாட்டின் கோவை மாவட்டத்தில் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட தி.மு.க. செயல் தலைவர் மு.க. ஸ்டாலின் கூறுகையில், ஆட்சியை தேடி நாம் போகத் தேவையில்லை, அதுவே நம்மைத் தேடி வரும்.

வரக்கூடிய உள்ளாட்சி தேர்தலில் தி.மு.க. அதிக இடங்களை கைப்பற்ற வேண்டும்.

சமூக வலைத்தளங்களை முழுமையாக உபயோகித்து பெண்கள், மாணவர்களை நமக்கான வாக்காளர்களாக மாற்ற வேண்டும்.

எதிர் முகாமில் யார் அடுத்த முதல்வர் என்ற சண்டை நடக்கிறது. இதை தமிழ் நாடே கவனிக்கிறது.

இன்னும் இரண்டு மாதத்தில் அவர்களே ஆட்சியை கவிழ்ப்பார்கள், அதன் மூலம் தி.மு.க. ஆட்சியை அமைக்கும் என ஸ்டாலின் தெரிவித்தார். (இ-12)

## நாமலிடம் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணை

(கொழும்பு)



வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ இலஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழுவில் முன்னிலையாகியுள்ளார்.

மேல் நீதிமன்றம் வழங்கியிருந்த உத்தரவின் பிரகாரம், வாக்குமூலம் ஒன்றை வழங்குவதற்காக நாமல் நேற்று புதன்கிழமை முன்னிலையாகியுள்ளார்.

கடந்த காலத்தில் இடம் பெற்ற ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் ஏற்கனவே நாமலுக்கு எதிராக பல்வேறு வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் விசாரணைகளை புறக்கணித்த குற்றச்சாட்டில் நாமலுக்கு எதிராக உச்ச நீதிமன்றத்தில் கடந்த வருடம் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7)

## ஐ.தே.க.- ஹெல உறுமய இணைந்து போட்டியிடும்

### யாழ்ப்பாணத்தில் பிக்கு போட்டி


(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஜாதிக ஹெல உறுமய, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட உள்ளதாக அந்த கட்சியின் உள்ளூராட்சி சபைகளுக்கான குழுவின் தலைவர் புதுகல ஜினவங்ச தேரர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், வடக்கு, கிழக்கை தவிர ஏனைய 18 மாவட்டங்களில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் வேட்பாளர்களை நிறுத்துவதற்காக விணணப்பங்களை கோரியுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விண்ணப்பங்களை அனுப்பும் வேட்பாளர்களை தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை பத்தரமுல்லை பன்னிப்பிட்டிய வீதியில் அமைந்துள்ள ஜாதிக ஹெல உறுமயவின் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது எனவும் அவர் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கிலுள்ள மாவட்டங்களில் போட்டியிடாத போதிலும் யாழ்ப்பாணத்தில் தமிழ் பௌத்தர் ஒருவர் வேட்பாளராக போட்டியிட விண்ணப்பித்துள்ளதாகவும் ஜினவங்ச தேரர் தெரிவித்தார். (இ-7)







வீணாகான குருபீடத்தின் ஏற்பாட்டில் ஓம் நமசிவாய சிவஆராதனையும் சிவயாத்திரையும் கிளிநொச்சி நகரில் நேற்று காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெற்றது.

வீணாகான குருபீட முதல்வர் சிவஸ்ரீ சாபவாசதேவக்குருக்கள் தலைமையில் ஆரம்பமாகிய இவ் சிவஊர்தியை வடமாகாண சபை உறுப்பினர் சுஜதீபன் சித்தன்கேணி குருபீடத்தில் இருந்து ஆரம்பித்து வைத்தார். தொடர்ந்து சிவஊர்தி கிளிநொச்சி A9 வீதி பிள்ளையார் கோவிலில் இருந்து பாதயாத்திரையாக ஆரம்பமாகி கிளிநொச்சி கந்தசாமி கோவிலில் நிறைவடைந்திருந்தது. இதில் குருமார்களால் வேதபாராயணம் அர்ச்சிக்கப்பட்டதோடு, அரச அதிகாரிகள், வர்த்தக சங்கத்தினர், ஆலய நிர்வாகத்தினர், மாணவர்கள் மற்றும் அடியார்கள் என பலரும் பங்குபற்றியதுடன் திருமுறைப் பாராயணமும் நிகழ்த்தப்பட்டன.

# உபுல் தரங்க, டிக்வெல்ல அதிரடி ஆஸியை வீழ்த்தியது இலங்கை



இலங்கை மற்றும் அவுஸ்திரேலிய பிரதமர் பதினொருவர் அணிகளுக்கிடையிலான இருபதுக்கு-20 போட்டியில் இலங்கை அணி 5 விக்கட்டுகளால் வெற்றிபெற்றுள்ளது.

இந்த போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய பிரதமர் பதினொருவர் அணி 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கட்டுகளை இழந்து 169 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

அவுஸ்திரேலிய பிரதமர் பதினொருவர் அணி சார்பாக வோஜஸ் 54 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார்.

பந்துவீச்சில் விகும் சஞ்சய பண்டார 3 விக்கட்டுகளையும், நீண்ட நாட்களுக்கு பிறகு அணிக்கு திரும்பிய லசித் மலிங்க 1 விக்கட்டினையும் கைப்பற்றினர்.

இந்நிலையில் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 17.1 பந்து ஓவர்கள் நிறைவில் 170 ஓட்டங்களை பெற்று வெற்றியடைந்தது.

இலங்கை அணி சார்பில் டிக்வெல்ல மற்றும் தரங்க தலா 47 ஓட்டங்களையும், டில்ஷான் முனவீர 32 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். (க)

# சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு; ஆஸி வீரர் வோஜஸ் திடீர் அறிவிப்பு



சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து அவுஸ்திரேலிய வீரர் அடம் வோஜஸ் ஓய்வு பெறப் போவதாக அறிவித்துள்ளார்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக அவுஸ்திரேலிய டெஸ்ட் அணியில் விளையாடிய நாட்கள் மிக அருமையாக இருந்தது. ஒவ்வொரு நிமிடத்தையும் நான் ரசித்தேன் என தெரிவித்துள்ளார்.

வோஜஸ் 20 போட்டிகளில் 1485 ஓட்டங்கள் குவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

சொந்த மண்ணில் தென்னாபிரிக்காவிடம் டெஸ்ட் தொடரை அவுஸ்திரேலிய இழந்ததையடுத்து வோஜஸ் டெஸ்ட் அணியில் இருந்து நீக்கப்பட்டார் என்பது நினைவு கூரத்தக்கது. (க)

# சம்பியன்ஸ் லீக் கால்பந்தாட்டம் பாரீஸிடம் வீழ்ந்தது பார்சிலோனா



சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின் குரூப் பிரிவு ஆட்டத்தில், முன்னணி அணியான பார்சிலோனா, பாரீஸ் அணியிடம் 0 - 4 என்ற கணக்கில்படு தோல்வியடைந்தது.

ஐரோப்பிய நாடுகளில் உள்ள கழக அணிகள் பங்கேற்கும் சம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. நேற்று முன்தினம், பாரீஸ் நகரில் நடந்த குரூப் போட்டியில், பாரீஸை சேர்ந்த பி.எஸ்.ஜி அணியும், முன்னணி கால்பந்து அணியான பார்சிலோனா அணியும் பலப்பரிட்சை நடத்தின.

இரண்டு முக்கிய அணிகள் மோதும் போட்டி என்பதால் ரசிகர்கள் கூட்டம் மைதானம் முழுவதும் நிரம்பி வழிந்தது. உலகின் முன்னணி வீரர்களான மெஸ்ஸி, நெய்மர், சுவாரஸ் ஆகியோர் அடங்கிய பார்சிலோனா அணி பெரும் பலத்துடன களமிறங்கியது.

பி.எஸ்.ஜி அணியும் டி மரியா, ஜூலியன் ஆகிய வீரர்களுடன் சமமான பலத்துடன் எதிரணியாக களமிறங்கியது. போட்டி பாரீஸில் நடைபெற்றதால் ரசிகர்கள் ஆதரவும் பி.எஸ்.ஜி அணிக்கு பெரும் துணையாக இருந்தது.

ஆட்டத்தின் தொடக்கம் முதலே பி.எஸ்.ஜி அணியினர் பந்தை தங்களது கட்டுப்பாட்டிலேயே வைத்திருந்தனர். இது எதிரணியினருக்கு எரிச்சலை உண்டாக்கியது. இதனால், அவ்வப்போது சில வீரர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டு வந்தனர். ஆட்டத்தின் 18 வது நிமிடத்திலேயே பி.எஸ்.ஜி வீரர் டி மரியா கோல் அடித்து அசத்தினார். ஆட்டத்தின் 40 வது நிமிடத்தில் பி.எஸ்.ஜி அணி வீரர் ஜூலியன் டிராக்சியர் சிறப்பான கோல் ஒன்று போட மைதானம் முழுவதும் ரசிகர்களின் ஆரவாரத்தால் அதிர்ந்தது. தொடர்ந்து பி.எஸ்.ஜி அணியினரே முதல் பாதி ஆட்டம் முழுவதும் ஆதிக்கம் செலுத்தி வந்தனர்.

இடைவேளை முடிந்து போட்டி தொடங்கியதும் பதிலடி கொடுப்பதற்காக பார்சிலோனா வீரர்கள் சில முயற்சிகளை மேற்கொண்டனர். ஆனால், அது ஏதும் பலிக்கவில்லை. ஆட்டத்தின் 55 வது நிமிடத்தில் பி.எஸ். ஜி வீரர் டி மரியா இரண்டாவது கோல் அடித்து வெற்றிப் பாதைக்கு வித்திட்டார். எதிர்த்துப் போராடிய பார்சிலோனா அணியின் முன்னணி வீரர்களின் முயற்சி எதுவும் எடுபடாமல் போனது.

ஆட்டத்தின் 71 வது நிமிடத்தில் பி.எஸ்.ஜி வீரர் எடிசன் அற்புதமான ஒரு கோல் அடிக்க, பார்சிலோனா அணியின் வீரர்கள் விரக்தியின் உச்சத்திற்கே சென்றனர். இறுதியில் 4-0 என்ற கணக்கில் பி.எஸ்.ஜி அணியானது பார்சிலோனாவை வீழ்த்தியது. ஆட்டநாயகன் விருதை பி.எஸ்.ஜி அணியின் வெற்றிக்கு வித்திட்ட நாயகன் டி. மரியா வென்றார்.

இரண்டு வருடங்களுக்கு பின்னர் பி.எஸ்.ஜி அணியானது பார்சிலோனாவை வீழ்த்தியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# அனுஷ்காக்கு ஹோலியின் காதலர் தின வாழ்த்து

இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் விராட் கோலி தனது காதலி அனுஷ்கா ஷர்மாவுக்கு, காதல் கொஞ்சும் வகையில் காதலர் தின வாழ்த்துக்களை தனது இன்ஸ்டர் கிராம் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.

இந்திய கிரிக்கெட் அணியின் கப்டனாக தற்போது இருப்பவர் விராட் ஹோலி. அதிரடி ஆட்டத்திற்கு பெயர் போன இவர், பொலிவுட் நட்சத்திரம் அனுஷ்கா ஷர்மாவுடன் சில ஆண்டுகளாக காதலில் உள்ளார். இந்த காதல் ஜோடி அவ்வப்போது வெளியில் சுற்றி பரபரப்பை ஏற்படுத்துவது வழக்கம்.

இந்நிலையில், உலகம் முழுவதும் நேற்று முன்தினம் காதலர் தினம் கொண்டாடப்பட்ட நிலையில், விராட் கோலி தனது இன்ஸ்டர் கிராம் பக்கத்தில் தன் காதலியான அனுஷ்கா ஷர்மாவுக்கு, காதலர் தின வாழ்த்துச் செய்தியை பதிவு செய்துள்ளார். அதில் அவர், "நீ என்னுடன் இருந்தால், தினமும் காதலர் தினமே, எல்லா நாட்களையும் ஒன்று போல மாற்றி விடுகிறாய்" என பதிவு செய்து, இருவரும் ஜோடியாக உள்ள படத்தையும் பதிவு செய்துள்ளார்.

விராட் ஹோலியின் இந்த வாழ்த்துச் செய்தி சமூக வலைதளங்களில் வைரலாக பகிரப்பட்டு வருகின்றது. (க)



# தொடர்ந்து விளையாட விரும்பினால் மிஸ்பா கப்டனாக தொடரலாம்

## பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம்



பாகிஸ்தான் அணியில் மிஸ்பா உல்-ஹக் தொடர்ந்து விளையாட விரும்பினால், கப்டனாகவே தொடரலாம் என்று பாகிஸ்தான் கிரிக்கெட் வாரியம் தகவல் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தான் கிரிக்கெட் வாரிய தலைவர் ஷகாரியார் கான் அளித்த ஒரு பேட்டியில், 'பாகிஸ்தான் டெஸ்ட் கப்டன் மிஸ்பா உல்-ஹக்கை டுபாயில் சந்தித்து நீண்ட நேரம் பேசினேன். அப்போது தனது எதிர்காலம் குறித்து முடிவு செய்ய 10 முதல் 15 நாட்கள் வரை அவகாசம் கேட்டுள்ளார்.

2010-ம் ஆண்டுமுதல் பாகிஸ்தான் அணியின் கப்டனாக மிஸ்பா உல்-ஹக் இருந்து வருகிறார். அந்த பணியை அவர் நன்றாக செய்துள்ளார். அவர் தொடர்ந்து விளையாட விரும்பினால், கப்டனாகவே தொடரலாம். அவர் ஓய்வு பெற முடிவு செய்தால், மூன்று வடிவிலான கிரிக்கெட்டுக்கும் ஒரே கப்டனை நியமிப்பதில் முன்னுரிமை கொடுப்போம்' என்றார். (க)

# மக்களுக்கு நன்மைகள் கிடைக்கக்கூடிய செயற்றிட்டங்களை உருவாக்க வேண்டும்

## ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளிடம் முதல்வர் விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

**சட்டங்கள் இயற்றுவதிலோ செயற்றிட்டங்களை அறிவிப்பதிலோ மக்களுக்கு எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை என தெரிவித்த வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், மக்களுக்கு நன்மைகள் கிடைக்கக் கூடிய செயற்றிட்டங்கள் செயலுருவாக்கப்பட வேண்டும் என ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளிடம் சுட்டிக் காட்டியுள்ளார்.**





(படங்கள்: பொ.சோபிகா)

ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் தும்லை மார்க்மற்றும் ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதி மக்கோலே ஆகியோருக்கும் வடமாகாண முதலமைச்சருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் வடமாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்றது.

அக்கலந்துரையாடலின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

ஐரோப்பிய ஒன்றியம்மற்றும் ஐக்கிய நாடுகள்ஒன்றிணைந்து வடக்கில் மேற்கொள்ளும் செயற்றிட்டங்கள்தொடர்பாகவும் தற்போது இங்குள்ள அரசியல் நிலைமைகள் தொடர்பாகவும் அறிந்து கொள்வதற்காக குறித்த பிரதிநிதிகள் வந்திருந்தனர்.

அந்தவகையில்எமது பிரதேசத்தில் பல செயற்றிட்டங்கள் நல்லிணக்கம் தொடர்பாக எடுக்கப்பட்டாலும் வட மாகாணம்மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கு உரிய முறையில் சென்றடைகின்றனவா? என பார்க்க வேண்டும் என அவர்களிடம் கோரியிருந்தேன்.

காணாமல் போனவர்கள் தொடர்பான அலுவலகம் அமைக்கும் விடயத்தில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு அதற்கென சட்டத்தையும் கொண்டு வந்த பின்னர் அதனை இதுவரை நடைமுறைப்படுத்தவில்லை என குறிப்பிட்டுள்ளதுடன் சட்டங்கள் இயற்றுவதிலோ செயற்றிட்டங்களை அறிவிப்பதிலோ எந்த நன்மையும் மக்களுக்கு கிடைக்கப் போவதில்லை, மக்களுக்கு நன்மைகள்கிடைப்பது போன்ற செயற்றிட்டங்கள் செயலுருவப் படுத்தப்பட வேண்டும் என குறிப்பிட்டேன்.

மேலும் அரசியல் ரீதியான பல நடவடிக்கைகள்எடுத்தாலும் அவற்றில் முன்னேற்றம் காண முடியவில்லை என அவர்களிடம்தெரிவித்த போது அங்குள்ள அரசியல் நிலைமை மற்றும் கட்டுப்பாடுகள் இருப்பதாக உயர்ஸ்தானிகர் தெரிவித்தார். நான் அதை ஏற்றுக்கொண்டேன். ஆனால் 69 வருடங்களாக ஒவ்வொரு காரணத்தை கூறி தீர்க்கப்படாத விடயங்களை இனியும் தீர்க்காது இருந்தால் மக்கள் மிகவும் வேதனைப்படுவார்கள். பிரச்சினைகள் கூடும் எனவும் குறிப்பிட்டேன்.

பல பிரச்சினைகள் அரசியல் ரீதியாக இருப்பினும் திட்டங்கள் செயற்படுத்தப்படும் போது அனைத்து மக்களுக்கும் நன்மை பயக்கும் முகமாக எடுக்கவுள்ளதாகவும் அதற்கு அனுசரணை வழங்க வேணடும் என கோரியிருந்தார் கள். அதற்கு எமது ஆதரவும் ஒத்துழைப்பும் இருக்கும் என தெரிவித்தேன்.

இருப்பினும் சில சமயங்களில் வடமாகாணத்தில் அபிவிருத்தி நடவடிக்கைகள் செயற்படுத்தப்படும் போது அரச அதிபர், பிரதம செயலாளர்களுக்கு மாத்திரம் தெரிவிக்கப் படுகிறது. அவர்கள் அரச ஊழியர்கள். ஆனால்அரச அலுவலருக்கு தெரிவிப்பதும் மக்கள் பிரதிநிதிக்கு தெரிவிக்கும் முறையில் வித்தியாசம் உள்ளது.

அது எமக்கு பிரச்சினை என குறிப்பிட்டுள்ளேன். இனி வரும் காலங்களில் தெரியப்படுத்துவதாக கூறியுள்ளார்கள்.

அத்துடன் தொழில்நுட்ப விதமாக நடவடிக்கை என்பதால் தாம் அலுவலர்களுடன் பேசுவதாக தெரிவித்தார்.

திட்டங்களை செயற்படுத்துவதற்கு முன் கொள்கை ரீதியான தீர்மானம் எடுக்க வேண்டும். எனவே அதை தெரியப்படுத்துங்கள். தொழில் நுடப ரீதியில் மாற்றம் செய்ய வேண்டும் என்றால் அதற்கு அனுமதி அளிக்க வேண்டும் என நான் கோரியிருந்தேன். அதற்கு சம்மதம் தெரிவித்துள்ளார்கள். எனவே இந்த விடயத்தல் எமக்குள் புரிந்துணர்வு ஏற்பட்டுள்ளது.

பல விடயங்கள்சம்பந்தமாக பின்னணிக் கருத்துக்கள் வெளிப்பட்டதால்இது நன்மை பயக்கும் கலந்துரையாடல் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## இராசி பலன்

16.02.2017

(மாசி 04, வியாழக்கிழமை)

சூரிய உதயம் காலை 6.34 மணிக்கு

பஞ்சமி முற்பகல் 8.49 மணிவரை

சித்திரை பிற்பகல் 3.02 மணிவரை

சுபநேரம் 8.03-9.33 மணிவரை

இராகுகாலம் 2.03-3.33 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| செவ் சுக் | | | |
| சூரி புதன் கேது | கிரகநிலை சந்திராஷ்டமம் பூரட்டாதி, உத்தரட்டாதி | | |
| | | | ராகு |
| | சனி | குரு சந் | |

**மீனம்:** காரிய வெற்றிக்கு கடவுளை வழிபட வேண்டிய நாள், திடீர் செலவுகள் ஏற்படலாம், தொழில் ரீதியிலான பயணங்களின் போது கவனம் தேவை.

**மேடம்:** நண்பர்கள் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்குவர், வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும்,உடல்நலம் சீராகும், பொன்னான நாள்.

**இடபம்:** எடுத்த முயற்சியிலிருந்த குழப்பங்கள் அகலும், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், கௌரவமான நாள்.

**மிதுனம்:** பிரியமான சிலருடன் மனம் விட்டு பேசுவீர்கள், பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், பிள்ளைகளால் உதிரி வருமானங்கள் வந்து சேரும்.

**கும்பம்:** முன்னேற்றம் காண்பதற்கு முயற்சி எடுக்கும் நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், உடல்நலம் சீராகும், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்:** புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், பெற்றோர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் எளிதில் கைகூடும், தேவைகள் பூர்த்தியாகும்.

**மகரம்:** வருமானம் திருப்திகரமானதாக அமையும், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உங்கள் செயற்பாடுகளில் தீவிரம் காட்டுவீர்கள்.

**சிம்மம்:** ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணிபுரிவீர்கள், சிந்திக்காமல் செய்த காரியங்களில் கூட சிறப்படையும் நாள், கௌரவம், அந்தஸ்து உயரும்.


**தனுசு:** நினைத்தது நிறைவேறி நிம்மதி காணும் நாள், பொருளாதார நிலையில் முன்னேறம் உண்டு, குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்:** குடும்பத் தேவைகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சுப செய்திகள் வந்து சேரலாம், ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சஞ்சலங்கள் கூடும்.

**துலாம்:** பயணங்களால் பலனுண்டு, கற்பனை மிகுதியான நாள், புதிய பொறுப்புக்களை யோசித்து ஏற்பது நல்லது, உறவினர்கள் தொடர்பான சில காரியங்களுக்காக அலைய நேரிடலாம்.

**கன்னி:** சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், தொழில் ரீதியான புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள், வாக்கு மேன்மையுண்டு.

# ஐயனார் கோவில் வீதியை உரிய முறையில் புனரமைத்து உயிர்ச் சேதங்களை தடுக்கவும்



(படங்கள்: சோபிகா)

யாழ்ப்பாணம் ஐயனார் கோவில் வீதியை சீரான முறையில் புனரமைத்து உயிர்ச்சேதங்களை தடுக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணம் தட்டா தெருச் சந்திக்கு அருகில் உள்ள ஐயனார் கோவில் வீதியால் அதிகளவான பொது மக்கள் போக்குவரத்து செய்து வருகின்றனர். சிறிது நேரம் மழை பெய்தாலும்கூட குறித்த வீதியில் வெள்ளம் தேங்கி நிற்கிறது.

வெள்ளம் தேங்கி நிற்காத வகையில் தற்போது அப்பகுதியில் கருங்கற்கள் போடப்படிருப்பதாகவும் அது மேலும் ஆபத்தான பகுதியாக மாறியுள்ளதாகவும் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த வீதியானது கே.கே.எஸ்.வீதி மற்றும் மானிப்பாய் ஆகிய வீதிகளை இணைக்கும் வீதியாக இருப்பதால் அதிகமானோர் இந்த வீதியையே போக்குவரத்துக்கு பயன்படுத்துகின்றனர். எனவே மாநகரசபை இது தொடர்பில் கவனம் செலுத்தி குறித்த வீதியை சீரான முறையில் விரைவாக புனரமைக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொண்டுள்ளனர். (இ-9)

## தாய்மொழி நாள் விழாவும் நூல் வெளியீட்டு விழாவும்

இலங்கை குமரித் தமிழ்ப் பணிமன்றமும் யாழ். இந்தியத் தூதரகமும் இணைந்து நடத்தும் உலகத் தாய்மொழி நாள் விழாவும் கிறிஸ்தவர்களின் தமிழ்க் கொடை நூல் வெளியீட்டு விழாவும் எதிர்வரும் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.45 மணிக்கு நெடுந்தீவு பிரதேச சபைப் பண்பாட்டு மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

செந்தமிழன் நா.வை.குமரிவேந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் விருந்தினர்களாக யாழ். இந்தியத் துணைத்தூதுவர் ஆ.நடராஜன், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன், வடமாகாண கல்வி பண்பாட்டு விளையாட்டுத்துறை அமைச்சர் த. குருகுலராசா, வடமாகாணசபை உறுப்பினர்களான சு.பசுபதிப்பிள்ளை, இ.இந்திரராசா, கே.என். விந்தன் கனகரத்தினம், வை. தவநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். மேலும் மன்னார் தமிழ்ச்சங்கத் தலைவர் அருட்திரு தமிழ்நேசன் அடிகளார், வடமாகாண ஆளுநர் அலுவலகத்தின் துணைச்செய லாளர் போ.சோ.செல்வநாயகம், நெடுந்தீவு பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் இ.சர்வேந்திரன், நெடுந்தீவு பிரதேச சபைச் செயலாளர் கு. இரத்தினராசா, புலவர் அ.வெ. அரியநாயகம், யாழ். இந்துக்கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராசா, நெடுந்தீவு கோட்டக்கல்விப் பணிப்பாளர் சா.கிருஷ்ணதாஸ், நெடுந்தீவு அரச பொது வைத்தியசாலை வைத்தியர் தி. பாலமுருகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். இந்நிகழ்வில் ஹரிகணன் பதிப்பக உரிமையாளரால் நாவலர் திருவுருவச் சிலை அன்பளிப்பு செய்யப்படவுள்ளது. மேலும் பல்கலைக்கழக புகுமுக மாணவர்களுக்கு நிதி அன்பளிப்புக்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## வயோதிபப் பெண் விபத்தில் காயம்

மோட்டார் சைக்கிளின் பின் இருக்கையிலிருந்து தவறி விழுந்த வயோதிபப் பெண் ஒருவர் படுகாயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் செவ் வாய்க்கிழமை பிற்பகல் நெல்லியடி நகர்ப்பகுதியில் நடைபெற்ற இச்சம்பவத்தில் வரணியைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் கங்காதேவி (வயது -60) எனும் மூதாட்டி படுகாயங்களுக்கு உள்ளான நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-3-60)

## சாயி சமர்ப்பண உரை

யாழ்ப்பாணம் சத்தியசாயி சேவா நிறுவனத்தின் பொன்விழா ஆண்டையொட்டி நடத்தப்படும் சாயி சமர்ப்பண உரை நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணிமுதல் 6 மணிவரை இராமநாதன் வீதி திருநெல்வேலி எனும் முகவரியில் அமைந்துள்ள சத்திய சாயி சேவா நிலையத்தில் இடம்பெறும். இந்நிகழ்வில் ஓய்வுநிலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகமும் இலங்கை சத்திய சாயி சர்வதேச நிறுவனத்தின் முன்னாள் தலைவருமான டாக்டர் வி. ஜெகநாதனின் சாயியுடனான அனுபவப் பகிர்வும் இடம்பெறும். (இ-3)

## இலட்சார்ச்சனை

இணுவில் திருப்பதி அருள்மிகு திருவேங்கடேஸ்வரர் ஆலய இலட்சார்ச்சனை விழா நேற்று புதன்கிழமை ஆரம்பமானது. இவ் இலட்சார்ச்சனை எதிர்வரும் 24ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை மாலை 4.30 மணிக்கு முதல் இரவு 7.30 மணிவரை நடைபெறவுள்ளது. மேலும் இரவு 7.30 மணி தொடக்கம் 8 மணிவரை தெய்வீகச் சொற்பொழிவு இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-3)

## மாணவர் பாராளுமன்ற கன்னியமர்வு



வதிரி திரு இருதய கல்லூரி மாணவர் பாராளுமன்ற கன்னியமர்வு நேற்று புதன்கிழமை மு.ப.10 மணியளவில் பாடசாலையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமராட்சி பிரதிக்கல்வி பணிப்பாளர் அபிராமி பார்த்தீபன் கலந்து கொண்டார். இந்நிகழ்வில் சபாநாயகர் சத்தியப்பிரமாணம் செய்ததைத் தொடர்ந்து மாணவ அமைச்சர்கள் சத்தியப் பிரமாணத்தை மேற்கொண்டனர். (இ-60)

## சைவத்திருமுறை விழா

ஆனைக்கோட்டை இந்து சமய விருத்திச் சங்கத்தின் சைவத் திருமுறை விழா, பரிசளிப்பு விழா என்பன எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு ஆனைக்கோட்டை மூத்தநயினார் ஆலய இரட்ணசபாபதி திருமண மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.வ.கணேசலிங்கம் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஓய்வு நிலை தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸ், சிறப்பு விருந்தினராக இந்து கலாசார அமைச்சின் உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன், சண்டிலிப்பாய் பிரதேச செயலக இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கயிலநாயகி பரந்தாமன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-12)

## மினி பஸ்-மோ.சைக்கிள் விபத்து இளைஞன் தலையில் படுகாயம்

மினி பஸ்-மோட்டார் சைக்கிள் மோதியதில் இளைஞர் ஒருவர் தலையில் படுகாயமடைந்துள்ளார். இச்சம்பவம் நேற்று புதன்கிழமை காலை 8மணியளவில் மந்திகைப் பகுதியில் இடம்பெற்றது. இச்சம்பவம் பற்றி மேலும் தெரிவருவதாவது, பருத்தித்துறை மந்திகையிலிருந்து வீதியை நோக்கி வந்து கொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் எதிரே வந்த மினி பஸ் மோதியதில் இளைஞர் தலையில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச்சம்பவத்தில் பருத்தித்துறையைச் சேர்ந்த விநாயகர் இலங்கேஸ்வரன் (வயது 22) என்னும் இளைஞனே படுகா யமடைந்தார். இச்சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (இ-12-30)

## இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ். வட்டு சுப்பிரமணிய வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் இடம் பெறும். பாடசாலை அதிபர் ஜெ. கோகுலவாசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக பி.கே.பி. பாலசங்கர் (கோப்பாய் பிரதேச செயலகம்), சிறப்பு விருந்தினராக கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அ. கிருபாகரன், கௌரவ விருந்தினராக முன்னாள் அதிபர் மா. செல்வராசா ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## தேர்த்திருவிழா இன்று

தெல்லிப்பழை மேற்கு-விழிசிட்டி -விழிசிட்டி (வித்தகபுரம்) சிவகுருநாதசுவாமி ஆலய தேர்த்திருவிழா இன்று வியாழக்கிழமை இடம்பெறும். தேர்த்திருவிழாவைத் தொடர்ந்து நாளை வெள்ளிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும் நாளை மறுதினம் சனிக்கிழமை திருக்கல்யாண பூங்காவனத் திருவிழா வும் இடம்பெறும். (இ-3)

## பொதுக்கூட்டம்

இலங்கை மனித உரிமைகள் சம்பந்தமான பொதுக் கூட்டம் (காணாமல் போனோருக்குரிய) எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மீசாலை வடக்கு பிரம்மஸ்ரீ சரவண பவக் குருக்களின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. இலங்கை மனித உரி மைகள் குழுவின் யாழ். மாவட்டப்பணிப்பாளர் திருமதி க. சந்திரிக்கா தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்விற்கு கொழும்பிலிருந்து மனித உரிமைப் பேராளர்கள் கலந்து கொள்ள இருப்பதனால் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலதிக தகவல்களுக்கு 077 651 0690 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-29)

## 10வது ஆண்டு நினைவாக புதிய கட்டடத் திறப்பு விழா

தொல்புரம் (சுழிபுரம்) சிவபூமி முதியோர் இல்லத்தின் 10ஆவது ஆண்டு நினைவாக அமைக்கப்பட்ட புதிய கட்டடத் திறப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் இடம்பெறும்.

செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக அவுஸ்திரேலியா மெல்போர்ன் நகரைச் சேர்ந்த திருமதி ஜெயலக்ஷ்மி சாரட், சிறப்பு விருந்தினராக நீர்கொழும்பைச் சேர்ந்த எஸ்.பி.ஏஞ்சல் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

## போதையில் செய்த வேலை 200 மணித்தியாலயங்கள் சமூக சேவைக்குப் பணிப்பு

மதுபோதையில் வேறு துவிச்சக்கரவண்டியினை எடுக்க முற்பட்ட நபரை 200 மணித்தியாலங்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறு பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி நளினி கந்தசாமி நேற்று முன்தினம் உத்தரவிட்டார். கள்ளச் சாவியைப் போட்டு துவிச்சக்கரவண்டி எடுக்க முற்பட்டதாக நெல்லியடிப் பொலிஸாரால் நாக்கல் செய்யப்பட்ட வழக்கில் மதுபோதை காரணமாக தான் அவ்வாறு செய்ததாகவும் மன்றில் தெரிவித்ததையடுத்து அவரை 200 மணித்தியாலங்கள் சமூக சேவையில் ஈடுபடுமாறு நீதிபதி உத்தரவிட்டார். (இ-3-60)

# துரோகம், சூழ்ச்சியிலிருந்து மீண்டுவருவேன்

# ஜெயலலிதா சமாதியில் சசிகலா சபதம்





போயஸ் தோட்ட இல்லத்திலிருந்து நேற்று பிற்பகல் கார் மூலம் பெங்களூர் புறப்பட்ட சசிகலா ஜெயலலிதா நினைவிடத்தில் சமாதி மீது அடித்து சபதம் செய்துள்ளார்.

சசிகலாவின் கால அவகாசத்திற்கு மறுப்பு தெரிவித்த உச்சநீதிமன்றம், உடனே நீதிமன்றத்தில் ஆஜராகும் படி உத்தரவிட்டது.

இதனையடுத்து போயஸ் தோட்ட இல்லத்திலிருந்து புறப்பட்ட அ.தி.மு.க. பொதுச் செயலாளர் வி.கே.சசிகலா, மெரினாவில் உள்ள மறைந்த முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவின் நினைவிடத்தில் மலர் தூவி அஞ்சலி செலுத்தினார்.

துரோகம், சூழ்ச்சியிலிருந்து மீண்டு வருவேன் என ஜெயலலிதா சமாதி மீது கையால் அடித்து சபதம் செய்தார். பின்னர், அங்கிருந்து ராமாபுரம் உள்ள எம்.ஜி.ஆர். இல்லத்திற்குச் சென்ற சசிகலா, எம்.ஜி.ஆர். சிலைக்கு மரியாதை செலுத்தி, எம்.ஜி.ஆர். படத்திற்கு அருகே அமர்ந்து சிறிது நேரம் தியானம் செய்தார்.

இதனையடுத்து அவர் வீதி மார்க்கமாக பெங்களூர் பயணித்தார். (இ-12)






## வெளிவாரி பட்டதாரி கற்கை நெறிகளை வரையறுக்க வேண்டியது அவசியமானது

வெளிவாரி பட்டக் கற்கை நெறிகளை வரையறுக்க வேண்டியது அவசியமானது என ஊழல் ஒழிப்பு குரல் அமைப்பின் உறுப்பினர் பேராசிரியர் நிர்மல் ரஞ்சித் தேவசிறி தெரிவித்துள்ளார்.

ராஜகிரியவில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

பல்கலைக்கழக பேராசிரியர்கள் சிலருக்கு பாரியளவு பணத்தை ஈட்டித் தரும் வெளிவாரி பட்டக் கற்கை நெறிகள் வரையறுக்கப்பட வேண்டியது அவசியமானது.

தரமான வெளிவாரி பட்டக் கற்கை நெறிகளைக் கொண்ட பல்கலைக்கழகங்கள் சில இலங்கையில் சேவை வழங்கி வருகின்றன.

எனினும் இலகுவில் சித்தியடையக்கூடிய தரம் குறைந்த கற்கை நெறிகளை வழங்கும் பல்கலைக்கழகங்களுக்கே அதிகளவு மதிப்பு காணப்படுகின்றது.

மேலும் அரச பல்கலைக் கழகங்களின் தரத்தை மேம்படுத்திக் கொள்வது மிகவும் கடினமான நிலையில் தனியார் பல்கலைக்கழகங்களை கொண்டு நடத்துவது சிரமமான காரியமாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

## மருத்துவச் சபையின் தகுதிகாண் பரீட்சைக்கு முகம்கொடுக்க சைற்றம் பட்டதாரிகள் இணக்கம்

சைற்றம் பட்டதாரிகள் இலங்கை மருத்துவப் பேரவையில் பதிவு செய்வதற்காக நடத்தப்படும் தகுதிகாண் பரீட்சைக்கு முகம்கொடுப்பதற்குத் தயார் என அந்நிறுவனத்தின் தலைவர் நெவில் பிரணாந்து தன்னிடம் தெரிவித்ததாக, உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல அறிவித்துள்ளார். மாணவர்களின் இந்த உடன்பாடு தொடர்பில் வைத்திய சபை தனது கவனத்தைச் செலுத்தி தீர்மானமொன்றை வெளியிடும் என எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தங்களது மாணவர்கள் எந்தவொரு பரீட்சைக்கும் முகம்கொடுப்பதற்குத் தயார் நிலையில் உள்ளதாக சைற்றத்தின் தலைவர் கூறியிருந்ததாகவும் அமைச்சர் நினைவு கூர்ந்துள்ளார். (இ-7)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: சித்திரை
உயரம்: 5'11"
தகைமை/தொழில்: பட்டதாரி/ தனியார் தொழில்
தொ.இ: B/6931

பிறப்பு: 1984 இந்து
நட்சத்திரம்: திருவோணம்
கி.பா: செவ் 12 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:A/L/சொந்த தொழில்
தொ.இ: B/6932

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: சூரிசெவ் 8 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்:O/L/அரசதொழில்
தொ.இ: B/6933

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 60 சூரிசெவ் 2 இல்
உயரம்: 5'9"
தகைமை/தொழில்:A/L/ அரசதொழில்
தொ.இ: B/6935

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1986 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி
கி.பா: செவ் 8 இல்
தகைமை/தொழில்: பட்டதாரி/அரச தொழில்
தொ.இ: G/6958

பிறப்பு: 1983 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 59
உயரம்: 5'
தகைமை/தொழில்:O/L
தொ.இ: G/6963

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: அனுசம்
கி.பா: 7
உயரம்: 5'
தகைமை/தொழில்:A/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/6964

பிறப்பு: 1989 இந்து
நட்சத்திரம்: கேட்டை
கி.பா: 16 சூரிசெவ் 12 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்:A/L
தொ.இ: G/6965

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.
ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.

## புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக

# இரண்டாவது நாளாகவும் நேற்று சுழற்சி முறையில் உணவுத் தவிர்ப்பு



(பனிக்கன்குளம்)

புதுக்குடியிருப்பில் நிலை கொண்டிருக்கும் இராணுவத்தை வெளியேறக் கோரியும் கேப்பாப்பிலவு - பிலவுக் குடியிருப்பு மக்களுக்கு ஆதரவாகவும் கடந்த 13 நாட்களாக போராட்டத்தில் ஈடு பட்டு வரும மக்கள் காணி விடுப்பு தொடர்பில் தீர்வு எதுவும் கிடைக்காத நிலையில் நேற்று முன்தினம் முதல் ஆரம்பித்த சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்பு போராட்டம் நேற்று இரண்டாவது நாளாகவும் தொடர்ந்தது.

இந்த சுழற்சி முறையிலான உணவுத் தவிர்ப்பு போராட்டமானது 48 மணித்தியாலங்களுக்கு ஒருதடவை உணவு தவிர்ப்பில் ஈடுபடுபவர்கள் மாற்றம் செய்யப்படுவார்கள்.

இந் நிலையில் நேற்று முன்தினம் உணவு இன்றி நீராகாரம் அருந்தாது போராட்டத்தில் ஈடுபட்டவர்களே நேற்றைய தினமும் ஈடுபட்டிருந்தனர். (2-28)

## வாகனத்தைப் பயன்படுத்தி மாணவர்கள் தொழில்நுட்ப ரீதியில் முன்னேறவேண்டும்

### வவுனியா, மன்னார் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

எம்மால் வழங்கப்பட்ட வாகனத்தைப் பயன்படுத்தி மாணவர்கள் தொழில்நுட்ப ரீதியில் முன்னேற வேண்டும் என வன்னி பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் தொழில்நுட்ப ஆய்வு கூடத்திற்கு ஜீப் வாகனம் கையளிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார். அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

எம்மால் வழங்கப்பட்ட வாகனத்தின் பெறுமதி ஆறு இலட்சம் ரூபாவாகும். இன்றைய காலத்தைப் பொறுத்த வரையில் ஆறு இலட்சம் என்பது மிகப்பெரிய பணமல்ல. இந்த வாகனத்தைப் பயன்படுத்தி பயணம் செய்வதற்காக இதை நாம் வழங்கவில்லை.

வாகனத்தைப் பயன படுத்தி தொழில்நுட்ப ரீதியில் மாணவர்கள் முன்னேற வேண்டும் என்பதற்காகவே வழங்கியுள்ளோம். எம்மால் வழங்கப்பட்ட வாகனம் பெறுமதியற்றதாக இருந்தாலும் மாணவர்களுக்கு கல்வி கற்பதற்கு இலகுவாக இருக்கும் என்று நான் நினைக்கின்றேன். இப் பாடசாலையின் பழைய மாணவர்கள் தொழில்நுட்பப் பரீட்சைக்கு மாணவர்களைத் தயார்ப்படுத்துவதற்கு வாகனம் ஒன்று இல்லை என்று எம்மிடம் கேட்டிருந்தார்கள்.

இதை எனக்கு எழுத்து மூலமாக தரும்படி நான் கோரியிருந்தேன். அதன்படி பொலிஸ்மா அதிபரிடம் பாடசாலை அதிபர் கேட்டிருந்த காரணத்தினாலும் எனக்கு சட்டரீதியிலான அனுமதியியை பொலிஸ்மா அதிபர் வழங்கியிருந்தார். அதன்படி ஜீப் வாகனம் வழங்கப்பட்டுள்ளது என்றார். (2-250)




## பொறியியல் தொழில்நுட்ப பாடத்தை கற்கும் மாணவர்களுக்கு ஜீப் வண்டி அன்பளிப்பு

(மல்லாவி)

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தில் க.பொ.த.உயர் தரப்பிரிவில் பொறியியல் தொழில்நுட்பம் பாடத்தை கற்கும் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் வவுனியா மாவட்ட பொலிஸாரால் ஜீப் வண்டி ஒன்று அன்பளிப்பாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வு நேற்று புதன் கிழமை காலை பாடசாலை வளாகத்தில் பாடசாலை அதிபர் க.அமிர்தலிங்கம் தலைமையில் நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,



வவுனியா தெற்கு கல்வி வலயத்தின் கீழ் உள்ள வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயத்தில் பொறியியல் தொழில்நுட்பம் பாடத்தை கற்கும் மாணவர்களின் கற்றல் செயற்பாட்டை முன்னெடுப்பதற்கு வாகனம் ஒன்று இல்லாது கற்றல் செயற்பாட்டை மட்டும் மேற்கொண்டு வந்தனர்.

படிப்பதை பரீட்சித்துப் பார்ப்பதற்கு வாகனம் இல்லாத நிலையை பாடசாலை அதிபர் பலதரப்பினரிடமும் தெரியப்படுத்தி இருந்த நிலையில் வவுனியா மாவட்ட பொலிஸ் பொறுப்பதிகாரி காரிகள் இது தொடர்பில், பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தரவின் கவனத்திற்கு கொண்டு சென்றதை அடுத்து பொலிஸ்மா அதிபரின பணிப்புக்கமைய வவுனியா, மன்னார் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனினால் ஜீப் வண்டி ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

இயங்கு நிலையில் உள்ள இந்த ஜீப் வண்டியின் தற்போதைய பெறுமதி சுமார் 6 இலட்சம் ரூபாவுக்கு மேல் உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கையளிப்பு நிகழ்வில் வவுனியா, மன்னார் மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சிசிரகுமார, வவுனியா பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி குமாரசிங்க, போக்குவரத்து பிரிவு உதவிப் பொலிஸ் பரிசோதகர் அனுராசாந்த ஆகியோர் இணைந்து கையளித்துள்ளனர்.

இந் நிகழ்வுக்கு பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழைய மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொணடு சிறப்பித்துள்ளார்கள். (2-250-15)

## வடக்கு மாகாண சபை உறுப்பினரால் கிராம பொது அமைப்புகளுக்கு உதவி

(மல்லாவி)



வடக்கு மாகாண சபை உறுப்பினர் வைத்திய கலாநிதி ஜீ.குணசீலனுக்கு வடக்கு மாகாண சபையினால் வழங்கப்பட்ட குறித்தொதுக்கப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் இருந்து பல் வேறு உதவிகளை கிராம மட்ட பொது அமைப்புக்களிற்கு வழங்கி வைத்துள்ளார்.

இந் நிகழ்வு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடை பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மன்னார் கீரி கந்தர் ஆலயத்தின் கட்டடப்பணிக்கான ஒரு தொகை பணத்தை காசோலையாக ஆலய நிர்வாக சபையிடம் கையளித்துள்ளார்.

மேலும் கீரி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு ஒரு தொகுதி கதிரைகளை சங்க பிரதிநிதிகளிடம் கையளித்ததோடு, எழுத்தூர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்திற்கு ஒரு தொகுதி சமையல் பாத்திரங்களையும் வழங்கி வைத்துள்ளார். (2-15)

### கழிவு முகாமைத்துவத் தொகுதி கையளிக்கும் நிகழ்வு இன்று

வவுனியா பொது வைத்தியசாலையின் கழிவு முகாமைத்துவ தொகுதி கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றுள்ளது. வவுனியா பொது வைத்திய சாலையின் கழிவுகளை சுகாதார முறைப்படி அகற்றும் விதமாக யுனொப்ஸ் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைக்கப்பட்ட "கழிவு முகாமைத்துவ தொகுதி" கையளிக்கும் நிகழ்வு இன்று காலை 9.25 மணிக்கு வவுனியா பொது வைத்தியசாலையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் வடக்கு மாகாண சகாதார அமைச்சர், ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான உயர் ஸ்தானிகர், ஐக்கிய நாடுகள் அமைப்பின் முக்கியஸ்தர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (2)

## விசேட தேவைக்குட்பட்டவர்களின் தகவல் சேகரிக்கும் திட்டம் ஆரம்பம்

### வவுனியா மாவட்டத்தில் 20 ஆம் திகதி நடைபெறும்

(குருமன்காடு)

வடக்கு மாகாண சுகாதார அமைச்சினால் மாகாணத்திலுள்ள விசேட தேவைக்குட்பட்டவர்களின் விபரம் சேகரிக்கும் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கணனி மயப்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பாதிக்கப்பட்டவர்களின் விபரங்கள் சேகரிக்கப்படவுள்ளன.

ஏற்கனவே கிளிநொச்சி மாவட்டத்தில் இந்தச் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் வவுனியா மாவட்டத்திற்கான தகவல் சேகரிக்கும் அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி திங்கட்கிழமை வவுனியா பிராந்திய சகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கேட்போர் கூடத்தில் காலை 9.30 மணிக்கு சுகாதார அமைச்சரின் தலைமையில் ஆரம்பிக்கப்படவுள்ளது. (2-250)

# பன்றிக்காய்ச்சல் நோய் கண்டறியப்பட்டு சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன

## அறிகுறிகள் தென்பட்டால் வைத்தியசாலைக்கு செல்லுங்கள்

## வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் அறிவுறுத்து

வன்னியில் 3 சிறார் களுக்கு பன்றிக் காய்ச்சல் நோய்த் தொற்று ஏற்பட்டுள் ளமை கண்டறியப்பட்டு அவர்களுக்கு வைத்தியசாலை யின் தனிப் பிரிவில் வைத்துச் சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. இந்த நோய்த்தொற்று அச்சுறுத்தல் வடக்கு மாகாணம் முழுவதும் உள்ளது என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்ட போதே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்தும் தெரிவித்ததாவது,

கடந்த 2008 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு மாகாணத்தில் பன்றிக் காய்ச்சல் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து வைத்தியசாலைகளுக்கும் இது பற்றிய எச்சரிக்கை தகவல் வழங்கப்பட்டுள்ளது. அனைத்து அரச வைத்தியசாலைகளிலும் இந்த நோய்த் தொற்றுக்கான சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள முடியும். காய்ச்சலினால் பீடிக்கப்பட்டவர்களுடன் வருபவர்களுக்குச் சிறப்புக் கவனம் செலுத்துமாறு பணிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சி, சம்புக்குளம் ஆகிய இடங்களிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு, றெட்பானா, மாங்குளம் ஆகிய இடங்களில் 5 வயதுக்குட்பட்ட 3 பேர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் 3 பேருக்கும் கடந்த ஒரு வாரகாலமாக சிகிச்சை வழங்கப்படுகிறது. சிறுவர்களின் நோய்த் தொற்றுத் தொடர்பான மேலதிக பரிசோதனைக்கு அவர்களின் குருதி மாதிரிகள் மருத்துவ ஆய்வு நிலையத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

அத்துடன், ஆய்வு நிலையத்தால் அண்மையில் அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையில் 3 சிறார்களுக்கும் எச்1என்1 வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

கிளிநொச்சி வைத்தியசாலையில் அவர்கள் தனியான இடத்தில் வைத்துச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர். இந்த நோய் காற்று மூலமாகப் பரவும் வாய்ப்பு உள்ளதனால் தனியான பிரிவில் வைத்துச் சிகிச்சை வழங்கப்படவேண்டும்.

ஏனையவர்களைவிட கர்ப்பிணிகள் மற்றும் சிறார்களுக்கு இந்தத் தொற்று ஏற்பட்டால் சிறப்புக் கவனம் செலுத்திச் சிகிச்சை வழங்க வேண்டும் என்றும் சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர். இந்த நோய்க்கான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக சிகிச்சை பெற வேண்டும்.

காலத்துக் காலம் இவ்வாறான வைரஸ் காய்ச்சல் பரவுவதுண்டு. சில வேளைகளில் தாக்குதிறன் கூடிய வைரஸ் வகைகள் தொற்றும் போது கடுமையான விளைவுகள் மனிதருக்கு ஏற்படும்.

இது கர்ப்பிணித் தாய்மார், குழந்தை பிரசவித்து சில நாட்களான தாய்மார், இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள், 65 வயதுக்கு மேற்பட்ட வயோதிபர், முட்டு வருத்தம், நீரிழிவு உள்ளவர்கள் ஆகியோரை தாக்கும் திறன் அதிகம்.

இந்த நோயை ஆரம்பத்தில் கண்டுபிடித்து உரிய நேரத்தில் உரிய சிகிச்சை வழங்கினால் தேவையற்ற தாய், சேய் உயிரிழப்பை தடுக்கலாம்.

சளிக்காய்ச்சல், தடிமன், தொண்டைப் புண், தலையிடி, உடல் வலி என்பன காணப்படுவதோடு, நோயின் அபாய அறிகுறிகளாக அதி கூடிய காய்ச்சல், மூச்சுவிட முடியாமை, நெஞ்சுநோ, மறதிக்குணம், நெஞ்சுப்பட படப்பு, வலிப்பு, வயிற்றோட்டம் ஆகியவை இருக்கும். இந்த அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக அரச வைத் தியசாலையை நாடி உரிய சிகிச்சை பெற்றுக் கொள்ள வேண்டும்.

மேலும் சாதாரண வைரஸ் காய்ச்சலிலிருந்து எச்1என்1 வைரஸ் காய்ச்சலினை வேறு பிரித்து அறிவது கடினம். தகுந்த ஆய்வுகூட மற்றும் நிபுணத்துவ சேவையும் சிறப்பு மருத்துவ நிபுணர்களது கண்காணிப்பும் இதற்குத் தேவை என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளார். (2-250)

## மனிதவுரிமைகளை மதிக்கின்றவர்கள்

# சொந்த நிலத்தில் மக்களை குடியேற்ற முன்வரவேண்டும்

## சிறிதரன் எம்.பி. வேண்டுகோள்



கேப்பாப்பிலவு–பிலவுக் குடியிருப்பு விமானப் படையினர் முகாம் முன்பாக காணி விடுவிப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வரும் மக்களை சந்திப்பதற்காக நேற்று முன்தினம் மாலை 6 மணியளவில் வருகை தந்த யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மக்களுடன் கலந்துரையாடினார்.

சம்பவ இடத்தில் இருந்து எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனுடன் தொலைபேசி ஊடாகத் தொடர்பு கொண்டு கள நிலைமைகளை எடுத்துக் கூறினார். அதனைத் தொடர்ந்து அங்கிருந்த வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரனுடன் கலந்துரையாடியதுடன் நிலைமைகள் தொடர்பில் ரவிகரனும் எதிர்க்கட்சித் தலைவருக்கு எடுத்துரைத்தார்.

அதன் பின்னர் கருத்துத் தெரிவித்த சி.சிறிதரன் எம்.பி,

எதிர்க்கட்சித்தலைவர் இரு தடவைகள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் தொடர்பு கொண்டு இது தொடர்பில் கலந்துரையாடியதாகவும் எந்தவிதமான சாதகமான பதில் வழங்கப்படவில்லையெனவும் தான் ஜனாதிபதியுடன் கலந்துரையாடுவதாக கூறியதாகவும் தொடர்ந்து காணி விடுவிப்பு தொடர்பில் அழுத்தம் வழக்குவதாகவும் தெரிவித்ததாகவும் கூறினார்.

அதன் பின்னர் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் முன்பாக சுழற்சிமுறையில் உணவுத்தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வரும் மக்களையும் அவர் சந்தித்து கலந்துரையாடினார்.

இதேவேளைநாட்டினுடைய ஜனாதிபதி, பிரதமர், மனித நேயத்தை மதிக்கின்றவர்கள். உலகத்தில் வாழ்கின்ற மனித வுரிமைகளை மதிக்கின்றவர்கள் ஆகியோர் உடனடியாகத் தலையிட்டு இம்மக்களைசொந்த நிலத்தில் குடியேற்ற முன்வர வேண்டுமெனவும் வேண்டுகோள் விடுத்தார். (2-281)




# வாக்குறுதிகளுக்கு தலைசாய்த்து உணவுத்தவிர்ப்பை கைவிடவேண்டாம்

## காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் வலியுறுத்து



(மல்லாவி)

புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்திற்கு முன்பாகபொது மக்கள்தமது நிலங்களை விடுவிக்கக்கோரி சுழற்சி முறையில் உணவுத்தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 5மணியளவில் காணாமல் போனோரின் உறவினர்களை உள்ளடக்கிய அணியினர் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்தின் முன்பாக சுழற்சி முறையிலான முதலாம் நாள் உணவுத்தவிர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ள மக்களுக்கு ஆதரவு வழங்கும் நோக்கில் கலந்து கொண்டு கலந்துரையாடினர். இதன் போது அம்மக்கள் தெரிவிக்கையில், நாங்கள் கடந்த மாதம் வவுனியாவில் தொடர்ச்சியான உண்ணாவிரத போராட்டத்தினை முன்னெடுத்திருந்தோம்.

பின்னர் உயர் அதிகாரிகளினால் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமைவாக எங்களது உண்ணாவிரத போராட்டத்தை கைவிட்டோம்.

எனினும் எமக்கு காணாமல் போனவர்கள் தொடர்பில் இதுவரை எவ்வித முடிவுகளும் கிடைக்கவில்லை. எமது உண்ணாவிரத போராட்டத்தை முறியடித்து எம்மை உயர் அதிகாரிகள் ஏமாற்றிவிட்டனர். எனவே அதிகாரிகளினால் வழங்கப்படும் வாக்குறுதிகளுக்கு தலைசாய்த்து இந்த உண்ணாவிரத போராட்டத்தினை கைவிட வேண்டாம் என்று புதுக்குடியிருப்பு உணவுத் தவிர்ப்பில் ஈடுபட்டுள்ள வர்களிடம் அறிவுறுத்தியுள்ளனர்.

இந்த நிலையில் குறித்த போராட்டத்திற்கு தமது ஆதரவை வழங்கினர். (2-15-250)

# வீதி சீரின்மையால் இடைநிறுத்தப்பட்ட பேருந்துச் சேவை மீண்டும் ஆரம்பம்

(குருமன்காடு)

மடுக்கரையிலிருந்து நானாட்டான் வரையான வீதியானது ஏறக்குறைய 8 கிலோ மீற்றர் வீதியாகும். இதில் ஏறக்குறைய 2 கிலோமீற்றர் தூரமான வீதிகள் தார் இடப்பட்டுள்ள நிலையில் மீதமுள்ள வீதிகள் குன்றும் குழியுமாக மிகவும் மோசமான நிலையில் காணப்படுகின்றமையினால் அங்கு சேவையில் ஈடுபட்டுவந்த இலங்கை போக்குவரத்து சபை பேருந்துகள் கடந்த ஒரு வாரகாலத்திற்கு மேலாக தமது சேவையினை இடைநிறுத்தியிருந்தன.

குறிப்பாக மடுக்கரையில் இருந்து சுமார் 80 இற்கு மேற்பட்ட மாணவர்கள் மேற்படி பாடசாலையில் கல்வி கற்பதாகவும், பேருந்து சேவை இடை நிறுத்தப்பட்டமையினால் அம்மாணவர்களின் கல்வி கற்றல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டியிருந்தார்.

இதனை கருத்திற்கொண்டு நேற்று முன்தினம் வடக்கு மாகாண போக்குவரத்து அமைச்சர் அப்பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் நோக்கோடு குறித்த வீதிக்கு சென்றிருந்தார்.

அவ்வீதியின் தற்போதைய நிலைமையையும் நேரடியாக பார்வையிட்டிருந்தார்.

மேலும் இலங்கை போக்குவரத்து சபை மன்னார் சாலை முகாமையாளர் வழங்கிய பணிப்புரைக்கு அமைவாக இடைநிறுத்தப்பட்டிருந்த பேருந்து சேவை உடனடியாகவே ஆரம்பிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. (2-250)

# யாழ்ப்பாணம் கடத்தப்படவிருந்த 13 முதிரை மரக்குற்றிகள் கைப்பற்று

## சாரதியும் கைதானார்



(மல்லாவி)

வன பரிபாலனத் திணைக்களத்தின் வவுனியா மாவட்ட பிரிவின் கீழ் உள்ள ஓமந்தை வட்டார வன பரிபாலனத் திணைக்கள அலுவலகத்திற்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்து, ஓமந்தை பெரியமடு அரச காட்டுப் பகுதியில் இருந்து சட்டவிரோதமாக வெட்டப்பட்ட சுமார் 3 இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகளை பிக்கப் வாகனத்தில் ஏற்றி கனகராயன் குளம் நோக்கி கடத்திச் சென்ற போது அதிரடிப் படையினரின் உதவியுடன் வனவள பாதுகாப்பு திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளதாக தெரிவித்துள்ளார்கள்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலையடுத்து விசேட அதிரடிப் படையினரின் உதவியுடன் 13 முதிரை மரக் குற்றிகளை ஏற்றிப் பயணித்த பிக்கப் வாகனம் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் சந்தேகத்தின் பேரில் அதன் சாரதியையும் கைது செய்துள்ளனர்.

கைதான சந்தேக நபரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆரம்ப கட்ட விசாரணைகளின் போது ஓமந்தை பெரியமடு பகுதியிலிருந்து கனகராயன் குளத்திற்கு கொண்டு சென்று பின்னர் கனகராயன் குளத்திலிருந்து கனரக வாகனத்தின் மூலம் யாழ்ப்பாணம் நோக்கி கொண்டு செல்ல இருந்ததாக தெரிவித்துள்ளார்.

இச்சம்பவத்தில் கைதான சந்தேக நபர் வவுனியா நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (2-15-250)

# எங்கே போகும் பன்னீர் பாதை?

பழைய பன்னீர்செல்வமாக அல்ல... 'புது பன்னீர்செல்வமாக வந்திருக்கிறார் ஓ.பி.எஸ். 'மாண்புமிகு சின்னம்மா' எனச் சொல்வதற்கு இத்தனை நாட்கள் தயங்காதவர்... அ.தி.மு.கவின் பொதுச்செயலாளராக சசிகலாவை நியமித்த தீர்மானத்தோடு சென்று, அவருடைய காலில் விழுந்து பணிந்தவர்... அவருக்காக முதல்வர் பதவியை இராஜினாமா செய்தவர்... எம். எல். ஏக்கள் கூட்டத்தில் அந்தப் பதவிக்கு சசிகலா பெயரை முன்மொழிந்தவர்... இத்தனை நாட்கள் கழித்து ஏன் கலகம் செய்கிறார்? அவரைப் பின்னால் இருந்து இயக்குவது யார்? அவரோடு இருப்பவர்கள் எல்லோரும் அப்பழுக்கு அற்றவர்களா?

கேள்விகள் பல எழுந்தாலும், அ.தி.மு.கவின் எதிர்காலம் பன்னீரோடு பிணைந்திருக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை.

'அ.தி.மு.கவில் யாருக்கு எத்தனை எம்.எல்.ஏக்களின் ஆதரவு' என்ற நம்பர் விளையாட்டு, 'ஆட்சி யாருக்கு' என்பதை நிர்ணயிக்க வேண்டுமானால் உதவலாம். 'செங்குத்தான பிளவு', 'வட்டமான பிளவு' என வர்ணிக்க வாய்ப்பில்லாமல போயிருக்கலாம். ஆனால், பதவியில் இருப்பவர்கள் ஒரு பக்கமாகவும், தொண்டர்கள் இனனொரு பக்கமாகவும் திரண்டிருப்பது மறுக்க முடியாத உண்மை. ஒரு கட்சியின் பெரும்பான்மைத் தொண்டர்களாலும், எல்லா தேர்தல்களிலும் அந்தக் கட்சிக்கு வாக்களிக்கும் அனுதாபிகளாலும் நிராகரிக்கப்படும் ஒருவரே அந்தக் கட்சியின் பொதுச்செயலாளராகவும், சட்டமன்றக் கட்சித் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்படுவதுதான் ஜனநாயகத்தின் விசித்திரம்.

காரணம் எனக் குறிப்பிட்டு எதையும் சொல்லத் தெரியாமலேயே, நிறைய பேர் சசிகலாவை வெறுக்கிறார்கள். தமிழகத்தில் எந்த ஓர் அரசியல் கட்சித் தலைவருக்கும் இவ்வளவு எதிர்ப்பு இருந்ததில்லை என கருத்துக் கணிப்புகள் சொல்கின்றன.

இதற்குப் பல வகைகளில் ஜெயலலிதாவே காரணம். தோல்விகளின்போதும், பிரச்சினைகள் எழும்போதும் பழி போடுவதற்கு ஜெயலலிதாவுக்குக் காரணங்கள் தேவைப்பட்டன. 'நான் நம்பி என்னோடு வைத்திருந்தவர்கள் தவறு செய்துவிட்டார்கள்' என்று சசிகலாவையும் மன்னார்குடி உறவுகளையும் குற்றம்சாட்டி இரண்டு முறை ஒதுக்கிவைத்தார் வழக்குகள் பாய்ந்தன. பல கைது நடவடிக்கைகளும் நிகழ்ந்தன. 'ஜெயலலிதா நல்லவர்தான். அவருடைய பெயரைச் சொல்லி, தவறுகளை எல்லாம் செய்தது சசிகலாவும் மன்னார்குடி குடும்பமும் தான்' என்று ஜெயலலிதா 'புனிதர்' ஆக்கப்பட்டார். வில்லன் வேடத்தில் நடித்தவர் திடீரென ஹீரோ ஆவது எப்படி சாத்தியமில்லையோ, அந்தக் கதைதான் சசிகலாவுக்கும்!

பொதுவாக நிழல் அரசியல் செய்பவர்கள் நேரடியாக வெளிச்சத்துக்கு வருவதை மக்கள் விரும்புவதில்லை. மறைமுகமாக அதிகாரத்தைப் பிரயோகிப்பவர்கள், அதறகாக எந்த எல்லைக்கும் சென்று அச்சுறுத்தல் நிகழ்த்துபவர்கள், ஆட்சி அதிகாரத்தில் அமர்ந்தால் அதன் விளைவுகள் பயங்கரமாக இருக்கும் என மக்கள் அஞ்சுவது இயல்பு. கோடிகளில் புரள்பவர்களை, எளிய மனிதர்கள் தேர்தல்களில் தோற்கடிப்பதற்குக் காரணம் இதுதான்.

ஊருக்கு ஊர் 'தீபா பேரவை' என பலர் ஆரம்பித்தார்கள். ஜெயலலிதாவின் படத்தோடு தீபா படத்தைப் போட்டு பிளக்ஸ் வைத்தார்கள். இவர்களில் பலரும் தீபாவைப் பார்த்தவர்கள் கிடையாது. தீபா அரசியலுக்கு வருவாரா என்பதும் இவர்களுக்குத் தெரியாது. சொல்லப் போனால், தீபாவுக்கே 'இவ்வளவு பெரிய வரவேற்பு நமக்குக் கிடைக்கும்' என்ற எதிர்பார்ப்பு இருந்திருக்காது. ஆனால், இதெல்லாம் தீபாவுக்குக் கிடைக்கும் ஆதரவு இல்லை. சசிகலாவை எதிர்ப்பவர்கள் தங்களுக்கு ஒரு தலைமை வேண்டும் என தீபாவை அந்த இடத்தில் வைத்துக்கொள்கிறார்கள்.

இப்படி சசிகலாவுக்கு எதிரான மனநிலையோடு உதிரி உதிரியாக இருந்தவர்களை இணைக்கும் ஒரு மையப்புள்ளியாக பன்னீர்செல்வம் ஆகியிருப்பதும், அதற்கு ஜெயலலிதாவை அவர் துணைக்கு அழைப்பதும்தான் இந்த ஆட்டத்தை மேலும் சுவாரஸ்யம் ஆக்கியிருக்கிறது. "யாருடன் இருக்க வேண்டும், யாருடன் இருக்கக்கூடாது என்பதை அம்மா நமக்கு உணர்த்தியிருக்கிறார்" என்கிறார். 'சசிகலாவோடு இணைந்து இருப்பது என்பது, ஜெயலலிதாவின் விருப்பத்துக்கு எதிரான செயல்' என்பதை அவர் உணர்த்துகிறார். 'சசிகலாவோடு இருப்பவர்கள் அனைவரும் அ.தி.மு.க வினராலும், மக்களாலும் நிராகரிக்கப்பட வேண்டியவர்கள்' என்பதுதான் அவர் சொல்ல வருவது! அநேகமாக அ.தி.மு.கவினருக்கு இனி தீபாவின் தேவை இருக்காது.

இன்றைக்கு சந்தேகம் இல்லாமல், தமிழகத்தின் மிகப்பெரிய கட்சி அ.தி.மு.க.தான். இதை, அடுத்தடுத்து இரண்டு தேர்தல்களில் தனித்து நின்று, அசாதாரணமான வெற்றிகளைப் பெற்று அந்தக் கட்சி நிரூபித்து இருக்கிறது. ஊழலையும் குடும்ப அரசியலையும் எதிர்த்து எம்.ஜி.ஆர் கட்டமைத்த கட்சி இது. ஏழைகள் மீது அக்கறையுள்ள அரசாக எம்.ஜி.ஆர் தன்னுடைய ஆட்சியை உணர்த்தியதால், பெரும்பாலும் கிராமப்புற மக்களும் நகர்ப்புற அடித்தட்டு மக்களுமே அ.தி.மு.கவின் வாக்கு வங்கியாக இருக்கிறார்கள். எம்.ஜி.ஆர்.மந்திரமும் ஜெயலலிதாவின் வசீகரமுமே அ.தி.மு.கவின் ஆதாரங்களாக இருக்கின்றன.

ஜெயலலிதா இல்லாத அ.தி.மு.க என்ன ஆகும்? 'இதைச் சிதறாமல் காப்பாற்றும் சக்தி, சசிகலாவைவிட பன்னீர்செல்வத்துக்குக் கூடுதலாக இருக்கிறது' என்பது மறுக்க முடியாத உண்மை. தீவிர அரசியலில் இறங்கிய நாளிலிருந்து, ஜெயலலிதாவின் நம்பிக்கைக்குரிய தளபதிகள் காலங்கள்தோறும் மாறிக்கொண்டே இருந்தார்கள். திருநாவுக்கரசர், கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன், எஸ். டி.சோமசுந்தரம், செல்வகணபதி, அழகு திருநாவுக்கரசு, கண்ணப்பன், செங்கோட்டையன், நத்தம் விசுவநாதன், தம்பிதுரை, கே.பி. முனுசாமி, வைத்திலிங்கம் என பலரும் மாறினாலும் ஒதுங்கினாலும், மாறாத விசுவாசியாகத் தொடர்ந்தார் பன்னீர். இரண்டு முறை ஜெயலலிதா முதல்வர் பதவியை இழந்தபோதும், அந்தப் பதவி மீண்டும் அவர் கைக்கே வந்தது. முதல்முறை ஒரு ஜூனியர் அமைச்சராக இருந்து, முதல்வர் நாற்காலியில் உட்கார்ந்தபோது "பன்னீர் செல்வம் இனிஷியலாக இருப்பது 'ஓ'வா? 'ஜீரோ'வா?" என பலரும் கிண்டல் செய்தார்கள். ஆனால், சீக்கிரமே பல சீனியர் களைப் பின்னுக்குத் தள்ளிவிட்டு நம்பர் 2 இடத்தை அடைந்தார். ஜெயலலிதாவின் மரணம் வரையில் இந்த இடத்தைவிட்டு அவர் இறங்கியதில்லை. மாறாத விசுவாசத்தின்



அடையாளமாகவே அவர் கருதப்படுகிறார்.

ஜெயலலிதா இல்லாத கடந்த இரண்டு மாதங்களில் அவர் எதையும் தலைகீழாக மாற்றி சாதித்துவிடவில்லை. ஆனால், பிரச்சினைகளைக் காது கொடுத்துக் கேட்டார். சில தீர்வுகளை வாங்கித் தந்தார். இதையே பெரிய சாதனையாகக் கருதும் சூழலில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அதனால்தான் அவரை இளைய தலைமுறை புகழ்ந்தது. நகரத்துப் படித்தவர்கள் மத்தியில் அவர் ஆராதிக்கப்பட்டார். அவரை கிண்டல் செய்து மீம்ஸ் போட்டவர்கள்கூட, சசிகலாவை அவர் ஆதரிப்பதால் எழுந்த கோபத்தில்தான் அதைச் செய்தார்கள். சசிகலாவை அவர் எதிர்த்ததும், 'ஜல்லிக் கட்டுக்காக திரண்டது போல ஓ.பி. எஸ்ஸை ஆதரித்து திரள்வோம்' என்பது போன்ற பார்வேர்டு மெசேஜ்கள் வாட்ஸ்அப்பில் தறி கெட்டுப் பறந்தன. வழக்கமாக சீரியல் பார்க்கும் பெண்கள் திடீரென செய்தி சனல்களைப் பார்க்கிறார்கள். தங்கள் எம்.எல்.ஏ-க்களுக்குத் தயங்காமல் வாக்காளர்கள் போன் செய்து, ஓ.பி. எஸ்ஸை ஆதரிக்கச் சொல்லிக் கேட்கிறார்கள்.

எம்.ஜி.ஆரின் மறைவுக்குப் பிறகு ஜானகி அணி, ஜெயலலிதா அணி எனக் கட்சி உடைந்தபோது, செல்வாக்கான தலைவர்கள் பலரும் ஜானகி அணியில் இருந்தாரகள்.ஆனால், தொண்டர்கள் ஜெயலலிதா பக்கம் இருந்தார்கள். ஒரே தேர்தலில் இதைப் புரிந்துகொண்டு ஜானகி ஒதுங்கினார். அவரை நம்பிப் போன தலைவர்கள் பலரும் செல்வாக்கு இழந்து செல்லாக்காசு ஆனதுதான் மிச்சம். இப்போது ஜெயலலிதா இல்லாத சூழலில், அ.தி.மு.கவின் வாக்கு வங்கி அனைவரையும் சபலம் கொள்ளச் செய்யலாம். ஆனால், சிறுசிறு கட்சிகள் பலவும் சோர்ந்து செயலிழந்து இருக்கும் நிலையில், வரும் உள்ளாட்சித் தேர்தல் வரையிலாவது இது களவுபோகாமல் இருக்கும் என்பது நிச்சயம்.

ஆனால், அதை வாங்கும் நபராக யார் இருப்பார்கள்? ஆட்சியும், கட்சியும் சசிகலாவின் கைக்குப் போனால், இரட்டை இலையும் அவரிடம்தான் இருக்கும். அதை மீறி பன்னீர் என்ன செய்ய முடியும்? காங்கிரஸ் கட்சிக்கு 'நுகத்தடியில் பூட்டிய காளைகள்'தான் சின்னம். இந்தியா முழுக்க மக்கள் மனதில் ஆழப் பதிந்திருந்தது அது. கட்சி முதல்முறை உடைந்தபோது அதற்குப் பதிலாக 'பசுவும் கன்றும்' சின்னம் கிடைத்தது. தகவல் தொடர்பு வசதிகள் ஏதுமில்லாத 1971ஆம் ஆண்டில் இந்தச் சின்னத்தை அறிமுகம் செய்து இந்திராகாந்தி ஜெயித்தார்.

அடுத்த முறை கட்சி யில் குழப்பம் வந்தபோது, அதற்குப் பதிலாக 'கை' சின்னம் வந்தது. அதையும் வைத்து ஜெயித்தார் இந்திரா. சின்னம் பெரிதில்லை மக்கள் எண்ணத்தில் இடம் பிடிப்பது முக்கியம். இந்தியாவிலேயே தேர்தலில் அதிகம் பணம் புழங்கும் மாநிலமாக தமிழகம் இருந தாலும், அதையும் மீறி சில அதிசயங்கள் இங்கு நிகழவே செய்கின்றன. பன்னீர் தூக்குப் பிடித்தால்... சசிகலாவை வைக்கும் அதே தூரத்தில் தி.மு.கவையும் வைத்து அரசியல் செய்தால்... அவருக்கு எல்லாம் வசமாகக்கூடும்.

பன்னீருக்கும் அ.தி.மு.க தேவை. அ.தி.மு.க-வுக்கும் பன்னீர் தேவை.

ஜூனியர் விகடன்

# நாங்கள் சிந்திய இரத்தமும் இழந்த உறவுகளும் போதும்

## எமது நிலங்களை எங்களால் மட்டுமே மீட்கமுடியும்




யுத்தம் முடிந்து 7 வருடங்கள் கடந்த நிலையிலும் மக்களின் காணிகள் வழங்கப்படாது தொடர்ந்தும் இராணுவ ஆக்கிரமிப்புக்களில் இருந்து வரும் நிலையில் முல்லைத்தீவு கேப்பாபுலவு மக்கள் தமது காணிகளை தமக்கே வழங்கக்கோரி தமது காணிகளில் அமைக்கப்பட்டுள்ள விமானப்படை முகாமிற்கு முன்னால் நில மீட்பிற்கான சத்வீக போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களுடன் வட்டு இந்து வாலிபர் சங்க உறுப்பினர்கள் பங்கு பற்றியதுடன்.

தமிழ் புலம்பெயர் அமைப்பான லண்டனைச் சேர்ந்த எதிர்காலத்திற்கான பாதை என்ற அமைப்பு வட்டுகோட்டை இந்து வாலிபர் சங்கத்தின் ஊடாக கேப்பாபுலவு, பிலவுக் குடியிருப்பு மக்களுடன் அவர்களின் போராட்டத்திற்கு வலுச் சேர்க்கும் வகையில் உணவு பொதிகளை மருத்துவ பொருடகள் மற்றும் அடிப்படை தேவையான பொருட்கள் என்பனவற்றை வழங்கி வைத்தார்.

அனைவரையும் நம்பியது போதும் எமது நிலத்தை தாமே மீட்க முடியும் என்ற மன நிலையில் தொடரச்சி பிலவு உறவுகளுக்கு பலதரப்பட்ட அமைப்புக்கள் மற்றும் பல வழிகளில் ஆதரவு கிடைத்து வரும் நிலையில் தாமாகவே முன்வந்து இவ் மக்களின் நிலையை புரிந்து எமது தாயக உறவுகளுக்கு ஆதரவினை வழங்கினர்.

இம் மக்களின் நில மீட்பிற்கான சத்வீக போராட்டம் வெற்றி பெறவேண்டும் என்ற நிலைப்பாட்டுடன் தொடரச்சியாகவுள்ளனர்.

எமது மக்களின் தாயக பூமிகளை வலுக்கட்டயமாக ஆக்கிரமித்திருக்கும் படைத்தரப்புக்கள் வெயியேற இவ் சத்வீக போராட்டம் முன்னுதராணமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

இதுவரை காலமும் நாங்கள் சிந்திய இரத்தமும் இழநத உறவுகளும் போதும் எமது மக்களின் நிலங்களை மீட்க உறவுகளே நீங்களாக முன் வந்து உங்களின் நிலங்களுக்கு முன்னால் சத்வீக வழியில் இம் மக்களுடன் இணைந்து செயற்படுவதற்கான காலம் இது எமது நிலங்களை எங்களால் மட்டுமே மீட்க முடியும் மக்களாகிய நாங்கள் சிந்தித்து செயற்படுவதற்கு சரியான காலம் இதுவாக அமையட்டும் என அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.(2-4)

# கொள்ளையர்களால் விற்பனை செய்யப்பட்ட 12 பவுண் நகைகள் வவுனியாவில் மீட்பு



வவுனியா மாவட்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரிவுக்குப்பட்ட வவுனியா பொலிஸ் நிலையப் பிரிவில் வவுனியா நகரப் பகுதியிலுள்ள நகைக்கடையொன்றில் கொள்ளையர்களால் விறபனை செய்யப்பட்ட 12, பவுண நகைகள் மீட்கப்பட்டுள்ளதாக குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றுள்ளது. இது தொடர்பில மேலும் தெரிய வருவதாவது.

நாட்டில், பல்வேறு பிரதேசஙகளில் கடந்த 2013 ஆம் ஆண்டு முதல் கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 4 சந்தேக நபர்கள் கடந்த வருடம் நவம்பர் மாதம் 17 ஆம் திகதி வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸாரினால் கைது செய்யப்பட நிலையில் அவர்களிடம் இருந்து கொள்ளை நடவடிக்கைகளின் போது பயன் படுத்திய ஆயுதங்களும் கைபற்றப்பட்டிருந்தன.

கைதான சந்தேக நபர்களிடம் நடைபெற்ற தொடர் விசாரணைகளின் போது தாங்கள், சிலாவத்துறை, ஒட்டுசுட்டான், அடம்பன், மன்னார், மாங்குளம், கனகராயன்குளம், புளியங்குளம், செட்டிகுளம், வவுனியா ஆகிய பகுதிகளில் நடைபெற்ற கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுள்ளதாகவும் தொடர்கொள்ளைகள், வழிப்பறிகள், கப்பம் வேண்டுதல் உட்பட பல குற்றச் செயல்களில் ஈடுபட்டு வந்ததாகவும் வாக்கு மூலத்தில் தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து கைப்பற்றப்பட்ட தடயப் பொருட்களுடன் சந்தேக நபர்களை வவுனியா நீதிமன்றில் ஆஜர் படுத்தி பொலிஸார் சந்தேக நபர்களிடம் விசாரணைகள் தொடர வேண்டியுள்ளதாக முன்வைத்த கோரிக்கையையடுத்து பொலிஸ் தடுப்புக் காவலில் சந்தேக நபர்களை எடுத்து விசாரிக்க நீதிமன்றம் அனுமதி வழங்கிய நிலையில் விசாரணைகளை முனனெடுத்துள்ளனர்.

இதன் போது சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் மன்னாரில் களவாடப்பட்ட நகைகளை வவுனியாவில உள்ள நகைக் கடையொன்றில் விற்பனை செய்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து, வவுனியா சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி நிசிர குமார மற்றும் உப பொலிஸ் அத்தியட்சகர் பியசிரி பர்னாந்து ஆகியோரின் வழிகாட்டலில் பிராந்திய தீர்க்கப்படாத குற்றத் தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பொ.ப.இரத்ணதிலக மற்றும் பொலிஸ் கொஸ்தாபல்களான, ஜேசுதாசன்(4252), ஜீவானந்தன்(45401), கருணாதிலக (52391), ரணதுங்க (29246), சாலிய (74331), ஷேன(78448),சங்க(12159), பிரசன்ன (81200), அதுல (80891) ஆகியோர் அடங்கிய பொலிஸ் அணியினர் குறித்த தங்க நகை வாணிப நிலையத்திலிருந்து 12 பவுண் நகைகளை மீட்டுள்ளனர்.

இதன் போது கைப்பற்றப் பட்டுள்ள தடயப்பொருட்களை விசாரணைகளின் பின்னர் வவுனியா மாவட்ட நீதிமன்றில் முன்னிலைப் படுத்தவுள்ளதாக வவுனியா குற்றத் தடுப்பு பொலி ஸார் தெரிவித்தனர். (2-15-250)




# மோ.சைக்கிளை மோதி தள்ளி தப்பியது பிக்கப்

## பெண் காயம்

(பரந்தன்)

கிளிநொச்சி டிப்போ சந்தியில் வீதி விதிமுறைகளை மீறியவாறு வேகமாக டிப்போ சந்தியை கடந்து செல்ல முற்பட்ட மகேந்திரா பிக்கப் ஒன்று எதிரே வந்த மோட்டார் சைக்கிளை மோதித் தள்ளிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இச்சம்பவம் நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் நடை பெற்றுள்ளது.

மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த பெண் காயமடைந்த நிலையில் கிளிநொச்சி போது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். விபத்து குறித்தும் தப்பிச்சென்ற வாகனம் தொடர்பிலும் கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2-312)

# சிவராத்திரியை முன்னிட்டு நல்லூரில் இருந்து பாதயாத்திரை

மன்னார் திருக்கேதீஸ்சரம் சிவத்தலத்திற்கு நல்லூரில் இருந்து சென்ற ஆண்டு பாதயாத்திரை ஆரம்பமாகி நடைபெற்றது.

அதேபோன்று இவ்வாண்டு எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று நல்லூரில் இருந்து காலை 7.30 மணிக்கு பாதயாத்திரை ஆரம்பமாகவுள்ளது.

இப் பாதயாத்திரை செம்மணி, நாவற்குழி, தச்சன் தோப்பு, தனங்கிளப்பு, கேரதீவு, பரம்பன்கிராய், பூநகரி, முழங்காவில், வெள்ளாங்குளம், மூன்றாம் பிட்டி, இலுப்பைக்கடவை, கட்டாடு வயல், ஆத்திமோட்டை, கோயில்குளம், புதுக்குளம், கள்ளியடி, கூராய், தீப் விநாயகர் ஆலயம் பள்ளமடு, பாப்பாமோட்டை, மாளிகைத் திடல், வேட்டையாமுறிப்பு, திருக்கேதீஸ்வரம் சென்றடைய சிவனருள் புரிந்துள்ளார்.

எனவே பாதயாத்திரையாக செல்ல விரும்பும் சிவனடியார் திருக்கூட்டத்தை பாதயாத்திரையில் இணைந்து கொள்ளுமாறு உலக சைவத திருச்சபை அமைப்பாளர் கேட்டுள்ளார்.

விபரம் தேவைப்படுவோர் 0775835372 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக தொடர்புகள் ஏற்படுத்தலாம் என அவர் அறிவித்துள்ளார். (2)

# கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிக்க வெளிநாட்டு தூதரகங்களின் அழுத்தம் அவசியம்

## ஜப்பானிய தூதுவராலயத்தின் ஆலோசகரிடம் அமைச்சர் டெனீஸ்வரன் வேண்டுகோள்



(மன்னார்)

ஒவ்வொரு வெளிநாட்டு தூதரகங்களும் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள காணிகளை விடுவிப்பதற்கு மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு உறுதி மற்றும் அரசால் வழங்கப்பட்ட காணிகளைஉடனடியாக மக்களுக்கு மீண்டும் வழங்க அழுத்தத்தைக் கொடுக்க வேண்டும் என்றவேண்டுகோளை வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் விடுத்துள்ளார்.

ஜப்பானிய தூதுவராலயத்தின் ஆலோசகர் மரிக்கோ யமாமோட்டோவுக்கும் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனுக்கும் இடையிலான விசேட சந்திப்பு நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நண்பகல் மன்னாரில் உள்ள அமைச்சரது உப அலுவலகத்தில் இடம்பெற்றது.

குறித்த விசேட சந்திப்பில் பல விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது

விசேடவிதமாக கடந்த ஆண்டு ஜப்பானிய தூதுவரோடு அமைச்சர் டெனீஸ்வரன் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோர் இணைந்து நடத்திய விசேட சந்திப்பில் புனர்வாழ்வு பெற்ற போராளிகளது வேலைத்திட்டத்தை முன்னெடுத்து செல்வதற்கான நிதி கோரிக்கை முன் வைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் நேற்று முன்தினம் நடைபெற்ற விசேட சந்திப்பில் குறித்த நிதிக்கோரிக்கை தொடர்பாக கலந்தாலோசிக்கப்பட்டதுடன் நாட்டின் தற்போதைய அரசியல் நிலைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப் பட்டது.

கடந்த 15 நாட்களாக புதுக்குடியிருப்பு மற்றும் கேப்பாப்பிலவு மக்கள் இராணுவம் கையகப்படுத்தியுள்ள தமது காணிகளை தமக்கு வழங்குமாறு கோரி போராட்டம் நடத்துவது தொடர்பாகவும் அதற்கு வலுச்சேர்க்கும் வகையில் ஒவ்வொரு வெளிநாட்டு தூதரகங்களும் ஆதரவு வழங்கி, இது தொடர்பாக மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு எமது மக்களது உறுதி மற்றும் அரசால் வழங்கப்பட்ட காணிகளை உடனடியாக மக்களுக்கு மீண்டும் கொடுக்க வேண்டும் என்ற அழுத்தத்தை தெரிவிக்கவேண்டும் என்ற விசேட கோரிக்கையை அவ்.ஆலோசகரிடம் அமைச்சர் முன்வைத்துள்ளார்.

அத்தோடு நீண்ட காலமாக சிறையில் இருக்கும் எமது தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பாகவும் ஓர் அழுத்தத்தை சகல தூதரகங்களும் அரசுக்கு கொடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து வடக்கு மாகாணத்தில் இன்னும் எவ்வளவோ அபிவிருத்திகளை நாம் செய்ய வேண்டிய கட்டாய தேவை இருக்கிறது. மாகாணத்துக்கு கொடுக்கப்படும் குறித்தொதுக்கப்பட்ட நிதிகள் போதாமல் உள்ளதாகவும் அந்த வகையில் இவ்வாறான தூதரகங்களது உதவியுடனேயே அபிவிருத்தி வேலைத்திட்டங்களை முன்னெடுக்கமுடியும்.

ஆகவே ஜப்பானிய தூதரகம் மூலமும் எமது மாகாணத்தின் ஒரு சில அபிவிருத்திகளை செய்வதற்கு நாங்கள் முன் வருவீர்கள் என்று எமது மாகாண மக்கள் எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (2-9)

# ஆட்சி அமைப்பதற்கு யாருக்கு அழைப்பு?



(சென்னை)

ஆட்சி அமைக்க அழைப்பு விடுவது தொடர்பாக ஆளுநர் எந்த நேரத்திலும் உரிய முடிவை அறிவிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அவர் 5 வகையான முடிவுகளை எடுப்பதற்கு வாய்ப்பு உள்ளதாக சட்ட நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

அ.தி.மு.க. சட்டமன்ற கட்சித் தலைவராக தேர்வு செய்யப்பட்ட சசிகலாவுக்கு சிறைத்தண்டனை வழங்கப்பட்டு இருப்பதால் அவர் முதலமைச்சராக முடியாத நிலை ஏற்பட்டது.

இதையடுத்து அமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி சட்டமன்ற குழு தலைவராக தேர்வு செய்யப்பட்டுள்ளார். அவர் ஆட்சி அமைக்க உரிமை கோரி ஆளுநரிடம் கடிதம் கொடுத்துள்ளார்.

அதே நேரத்தில் முதலமைச்சர் பன்னீர்செல்வம் தனக்கும் பெரும்பான்மை இருப்பதாக கூறி ஆட்சி அமைக்க உரிமை கோரி வருகிறார். இவர்கள் இருவரில் ஒருவரை ஆட்சி அமைக்க அழைக்க வேண்டிய கட்டாயம் ஆளுநருக்கு ஏற்பட்டுள்ளது.

ஏற்கனவே சசிகலாவும், ஓ.பன்னீர்செல்வமும் உரிமை கோரிய நேரத்தில் ஆளுநர் இது சம்பந்தமாக முடிவு எடுக்க முடியாமல் திணறி வந்தார். சசிகலா மீதான வழக்கில் தீர்ப்பு வருவதால் தான் அவர் இதில் முடிவு எடுக்காமல் தள்ளிப்போடுவதாக கூறப்பட்டது.

ஆனால், இப்போது தீர்ப்பு வழங்கப்பட்டதை தொடர்ந்து சசிகலா தரப்பில் இருந்து புதிய சட்டமன்ற தலைவரையும் தேர்வு செய்து விட்டனர். எனவே, எந்தக் குழப்பமும் இல்லை. 10 நாட்களாக நீடித்து வந்த இந்த பிரச்சினைக்கு ஆளுநர் தீர்வு காண வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

ஆளுநர் இது சம்பந்தமாக எந்த நேரத்திலும் உரிய முடிவை அறிவிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. அவர் 5 வகையான முடிவுகளை எடுப்பதற்கு வாய்ப்புள்ளதாக சட்ட நிபுணர்கள் கூறியுள்ளனர்.

1. எடப்பாடி பழனிச்சாமி தனக்கு போதிய ஆதரவு எம்.எல்.ஏக்கள் இருப்பதாக கடிதம் கொடுத்து இருப்பதால் அதில் ஆளுநர் திருப்தி அடைந்து எடப்பாடி பழனிச்சாமியை ஆட்சி அமைக்க அழைக்கலாம். அதன்படி எடப்பாடி பழனிச்சாமி உடனடியாக பதவி ஏற்கலாம்.

2. அ.தி.மு.க. எம்.எல். ஏக்கள் சிறை வைக்கப்பட்டு இருப்பதாக ஓ.பன்னீர்செல்வம் தரப்பினர் புகார் கூறுவதால் அதையும் ஆளுநர் கவனத்துக்கு எடுத்து கொள்ளலாம். ஆனாலும், இதுவரை ஓ.பன்னீர்செல்வம் தனக்கு போதிய எம்.எல். ஏக்கள் ஆதரவு இருப்பதை காட்டாததால் எடப்பாடி பழனிச்சாமியை ஆட்சி அமைக்க அழைத்து பதவி ஏற்றதும் உடனடியாக சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபிக்கும் படி கூறலாம்.

3. எடப்பாடி பழனிச்சாமி சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபிக்க தவறினால் அதே நேரத்தில் ஓ.பன்னீர்செல்வம் தனக்கு 117 எம்.எல்.ஏக்கள் ஆதரவு இருப்பதாக ஆதரவு கடிதம் கொடுத்தால் ஓ.பன்னீர்செல்வத்தை ஆட்சி அமைக்க அழைக்கலாம்.

4. எடப்பாடி பழனிச்சாமி, ஓ.பன்னீர்செல்வம் இருவருமே பெரும்பான்மையை நிரூபிக்க தவறிவிட்டால் அதே நேரத்தில் பன்னீர்செல்வம் அணியினர் தி.மு.க.வுக்கு ஆதரவு தெரிவிப்பதாக கூறி அதன் எண்ணிக்கை பாதி அளவுக்கு மேல் இருந்தால் தி.மு.க.வை ஆட்சி அமைக்க அழைக்கலாம்.

5. எடப்பாடி பழனிச்சாமி, ஓ.பன்னீர்செல்வம் இருவரும் பெரும்பான்மையை நிரூபிக்க தவறி விடும் அதே நேரத்தில் தி.மு.கவுக்கும் அவர்கள் ஆதரவு தெரிவிக்காவிட்டால் ஆளுநர் 365 விதியின்படி இடைக்காலமாக ஜனாதிபதி ஆட்சியை அமுல்படுத்தலாம். 6 மாதத்துக்கு ஜனாதிபதி ஆட்சி இருக்கும். அதற்குள் ஏதாவது ஒரு கட்சி பெரும்பான்மை எம்.எல்.ஏவை காட்டினால் அவர்கள் ஆட்சி அமைக்கலாம். அப்படியும் ஆட்சி அமையவில்லை என்றால் ஆளுநர் சட்டசபையை கலைக்க உத்தரவிடுவார். அதன் பிறகு தமிழ்நாட்டில் புதிதாக சட்டசபை தேர்தல் நடத்தப்படும். (இ-12)




# வருவாய்க்கு மீறி 211 சதவீத சொத்து சசிகலா தரப்பால் குவிக்கப்பட்டது

## நீதிபதிகளின் தீர்ப்பில் சுட்டிக்காட்டு

(டில்லி)

வருவாய்க்கு மீறி 211 சதவீத சொத்து குவிக்கப்பட்டு இருப்பது ஒன்றே, சசிகலா உள்ளிட்ட 3 பேரின் தண்டனையை உறுதி செய்ய போதுமானது என்று உச்ச நீதி மன்ற நீதிபதிகள் தாங்கள் தீர்ப்பில் தெரிவித்துள்ளனர்.

சொத்துக் குவிப்பு மேல் முறையீட்டு வழக்கில், மொத்தம் 570 பக்கங்கள் அடங்கிய தீர்ப்பில் வழக்கை விசாரித்த நீதிபதி பினாகி சந்திர கோஷ் தன்னுடைய தீர்ப்பில் கூறியதாவது,

இந்த வழக்கில் மேல்முறையீட்டு மனுக்கள் அனுமதிக்கப்படுகின்றன. இந்த வழக்கில் இறுதி விசாரணை முடிவடைந்த நிலையில் பதில் மனுதாரர் ஜெயலலிதா மரணம் அடைந்ததால் சட்டப்படி அவர் இந்த வழக்கில் இருந்து விலக்கப்படுகிறார்.

இந்த வழக்கில் ரூ.66 கோடிக்கு வருவாய்க்கு மேல் சொத்து சேர்த்ததாக தனி நீதி மன்று கணக்கிட்டுள்ளது.

இதனை கர்நாடக உயர் நீதிமன்று தன்னுடைய தீர்ப்பில் ரூ.2 கோடியே 82 இலட்சத்து 36 ஆயிரத்து 812 என்று கணக்கிட்டுள்ளது. இதன் அடிப்படையில் அளவுக்கு மீறிய சொத்து 8.12 சதவீதம் என்று வருகிறது.

இந்தக் கணக்கு தவறானதாகும். இந்தத் தவறை சரி செய்தாலே வருவாய்க்கு மீறிய சொத்து கணக்கு ரூ.16 கோடியே 32 இலட்சத்து 36 ஆயிரத்து 812 என்று வருகிறது. இது 76.7 சதவீதமாகும்.



உச்ச நீதிமன்று ஆராய்ந்து பார்த்த சொத்து, வருவாய், செலவுக் கணக்கின் அடிப்படையில் குற்றம் சாட்டப்பட்டவர்களின் வருவாய்க்கு மீறிய சொத்து 35 கோடியே 73 இலட்சத்து 4 ஆயிரத்து 6 ரூபாய் வருகிறது. இது 211.09 சதவீதமாகும்.

இந்தக் கணக்கீடு மட்டுமே இந்த வழக்கில் குற்றவாளிகளுக்கு தண்டனையை உறுதி செய்யப் போதுமானது.

இதனடிப்படையில் தனி நீதிமன்று மிக சரியாக கணக்கீடு செய்து தீர்ப்பு வழங்கியுள்ளது என்று தெரிய வருகிறது.

ஆகவே தனி நீதிமன்று வழங்கிய தீர்ப்பு உறுதி செய்யப்படுகிறது. (இ-12)

# ஜெயலலிதா சொத்து யாருக்குச் சொந்தம்



சொத்துக்குவிப்பு வழக்கில் உச்சநீதிமன்றத் தீர்ப்பில் கீழ்நீதிமன்ற தீர்ப்பு முற்றிலும் உறுதி செய்யப்பட்டதால், ஜெயலலிதாவின் சொத்துக்களை மாநில அரசு பறிமுதல் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டம் கொட நாட்டில் உள்ள 800 ஏக்கர் பரப்பளவிலான எஸ்டேட் மற்றும் பங்களாவை வருவாய் மீட்புச் சட்டத்தின்கீழ் மாநில அரசு தன்வசப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியுள்ளது.

கொடநாடு சொத்து மதிப்பு மட்டும் பல நூறு கோடி ரூபாய் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

இதை பறிமுதல் செய்து அரசின் தேவைக்குப் பயன்படுத்தவோ அல்லது ஏலம் மூலம் விற்பனை செய்து அதில் கிடைக்கும் தொகையை கருவூலத்தில் சேர்க்கவோ அரசுக்கு உரிமை உள்ளது.

1991 முதல் 1996 வரை இதுபோல சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோரால் பினாமி பெயர்களில் பதிவு செய்யப்பட்ட, வழக்கில் தொடர்புடைய மேலும் பல சொத்துக்களையும் பறிமுதல் செய்ய நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதுதவிர ஜெயலலிதா உள்ளிட்ட 4 பேருக்கு மொத்தம் 130 கோடி ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது.

அவற்றைச் செலுத்தத் தவறினால் வழக்கில் பறிமுதல் செய்ய உத்தரவிட்ட சொத்துக்கள் தவிர்த்து மீதமுள்ள சொத்துக்களை ஏலம் விட்டு அபராதத் தொகை வசூலிக்கப்படும் எனத் தெரிய வருகிறது. (இ-12)

# சசிகலாவின் 20 ஆண்டு கால முயற்சி தோல்வி- தி.மு.க. மகிழ்ச்சி



சொத்துக் குவிப்பு வழக்கு தொடங்கிய நாளில் இருந்து 20 ஆண்டு காலம் இந்த வழக்கை எடுத்துக்காட்டி குற்றமற்றவர் என நிரூபிக்க சசிகலா எடுத்த முயற்சிகள் எல்லாம் தோல்வி அடைந்துள்ளது என தி.மு.க. பொதுச் செயலாளர் அன்பழகன் கூறியுள்ளார்.

சசிகலா சொத்துக் குவிப்பு வழக்கு மீதான உச்ச நீதிமன்ற தீர்ப்புக் குறித்து தி.மு.க. பொதுச் செயலாளர் க.அன்பழகன் நிருபர்களிடம் கூறியதாவது,

இந்த வழக்கு தொடங்கிய நாளில் இருந்து 20 ஆண்டு காலம் பல்வேறு மன்றங்களில் இந்த வழககை எடுத்துக்காட்டி குற்றமற்றவர் என பெறுவதற்கு அவர் (சசிகலா) முயற்சி செய்த அந்த முயற்சிகள் எல்லாம் தோல்வி அடைந்துள்ளது. இப்போது உச்ச நீதிமன்றில் தீர்ப்பு வந்துள்ளது.

அந்த தீர்ப்பின் படி, இன்றைக்கு இருக்கிற குற்றவாளிகளான சசிகலா மற்றும் அவரை சார்ந்தவர்களும் குற்றவாளிகள் தான் என்று அவர்களுக்கு 4 ஆண்டு காலம் சிறைத்தண்டனையை உறுதி செய்து தீர்ப்பு அளித்து இருக்கிறார்கள்.

அந்த உறுதி செய்த தண்டனையில் இருந்து எந்த காரணத்தைக் கொண்டும் தப்ப முடியாது என நான் உளமாற கருதுகிறேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-12)

# ஜெயாவின் நினைவிடத்தில் ஓ.பி.எஸ்.- தீபா அஞ்சலி



சென்னை மெரினாவிலுள்ள ஜெயலலிதா நினைவிடத்தில் முதமைச்சர் ஓ.பி.எஸ்.,ஜெயலலிதாவின் அண்ணன் மகள் தீபா ஆகியோர் நேற்று முன்தினம் இரவு அஞ்சலி செலுத்தினர்.

முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் கிரீன்வேஸ் வீதியில் உள்ள தனது இல்லத்தில் இருந்து திடீரென மெரினா கடற்கரையில் உள்ள ஜெயலலிதா நினைவிடத்துக்கு சென்றார்.

உடன் மைத்ரேயன் எம்.பி., அமைச்சர் க.பாண்டியராஜன், எம்.பி.க்கள், எம்.எல்.ஏ.க்கள் மற்றும் ஓ.பன்னீர்செல்வம் ஆதரவாளர்கள் திரளாக வந்தனர்.

அப்போது ஜெயலலிதாவின் அண்ணன் மகள் ஜெ. தீபாவும் அவரது ஆதரவாளர்களுடன் அங்கு வந்தனர்.

ஓ.பன்னீர்செல்வத்துக்கு ஜெ.தீபா எங்கு, எப்போது ஆதரவு தெரிவிப்பார்? என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட நிலையில் இருவரும் ஜெயலலிதா நினைவிடத்தில் திடீரென சந்தித்தது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

ஜெயலலிதா நினைவிடத்தில் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வமும், ஜெ.தீபாவும் அஞ்சலி செலுத்தினர்.

அதைத்தொடர்ந்து ஜெ.தீபா நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறும்போது,

"எனது அரசியல் பிரவேசம் இன்று முதல் தொடங்கியது. நானும் ஓ.பன்னீர்செல்வமும் இருகரங்களாக இணைந்து செயற்படுவோம்.

முதலமைச்சர் ஜெயலலிதா விட்டுச்சென்ற பணியை நாங்கள் தொடர்ந்து செய்வோம். அவரும், நானும் நியாயம் கேட்டோம். இருவரது நோக்கமும் ஒன்றாக இருக்கிறது.

அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கூவத்தூர் விடுதியில் தங்கியிருப்பது நியாயமல்ல. சசிகலா இருக்க வேண்டிய இடத்துக்குத்தான் செல்கிறார் என்று நான் ஏற்கனவே சொல்லியுள்ளேன்" என்றார்.

கடந்த சில தினங்களுக்கு முன்பு முதலமைச்சர் ஜெயலலிதாவின் அண்ணன மகள்ஜெ.தீபாவுடன் இணைந்து செயற்படுவீர்களா என்று முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வத்திடம் நிருபர்கள் கேட்டதற்கு, முதலமைச்சர் ஜெயலலிதாவின் அண்ணன் குடும்பத்தினர் மீது எங்களுக்கு மிகுந்த மரியாதை உள்ளது.

முதலமைச்சரின் அண்ணன் மகள் ஜெ.தீபாவுடன் நாங்கள் இணைந்து பணியாற்றுவோம்" என்று ஓ.பன்னீர்செல்வம் தெரிவித்திருந்தார்.

இதேவேளை கிரீன்வேஸ வீதியில் உள்ள ஓ.பி.எஸ். வீட்டுக்கு தீபா சென்றார்.

அவரை ஓ.பி.எஸ்ஸின் மனைவி விஜயலட்சுமி ஆரத்தி எடுத்து வரவேற்றார்.

அப்போது அங்கிருந்தவர்கள் முதல்வரையும் தீபாவையும் வாழ்த்தி கோஷமிட்டனர். பின்னர் வீட்டுக்குள் சென்ற தீபா, முதல்வர் ஓ.பி.எஸ். மற்றும் நிர்வாகிகளுடன் ஆலோசனை நடத்தினார். (இ-12)

# அ.தி.மு.க. துணை பொதுச் செயலர் டி.டி.வி.தினகரன்- சசிகலா அறிவிப்பு

சொத்துக் குவிப்பு வழக்கில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சசிகலாவுக்கு தண்டனை உறுதி செய்யப்பட்டதைத் தொடர்ந்து அ.தி.மு.கவின் துணை பொதுச் செயலாளராக டி.டி.வி. தினகரன் அறிவிக்கப்பட்டுள்ளார்.

முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவால் அ.தி.மு.கவில் இருந்து நீக்கப்பட்ட டி.டி.வி. தினகரன், வெங்கடேசன் ஆகியோர் மீண்டும் கட்சியில் சேர்க்கப்பட்டுள்ளனர். பொதுச் செயலாளர் சசிகலாவிடம் நேரிலும், கடிதம் மூலமாகவும் மன்னிப்பு கோரியதை தொடர்ந்து அவர் மீண்டும் கட்சியில் சேர்க்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அ.தி.மு.கவிலிருந்து நீக்கப்பட்ட டி.டி.வி தினகரன் கட்சியில் மீண்டும் சேர்க்கப்பட்டதோடு அவர் கட்சியில் துணை பொதுச் செயலாளராகவும் அறிவிக்கப்பட்டுள்ளார். டி.டி.வி. தினகரன் மற்றும் வெங்கடேசன் ஆகியோர் மீண்டும கட்சியில் சேர்க்கப்பட்டிருப்பது குறித்து எம்.ஜி.ஆர் நாளிதழில் செய்தி வெளியாகியுள்ளது.

தினகரனுக்காக அ.தி.மு.கவில் மீண்டும் துணை பொதுச் செயலாளர் பதவி உருவாக்கப்பட்டுள்ளது. 2011 ஆம் ஆண்டு டி.டி.வி. தினகரன் அ.தி.மு.கவில் இருந்து நீக்கப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சசிகலா, சொத்துக்குவிப்பு வழக்கில் தண்டனை உறுதி செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அ.தி.மு.கவில் இந்த பதவி உருவாக்கப்பட்டு டி.டி.வி. தினகரனுக்கு வழங்கப்பட்டுள்ளதாக கூறப்

# போயஸ் கார்டன் தீபக்கிடம்

மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெயலலிதாவின் அண்ணன் மகன் தீபக்கிடம் போயஸ் கார்டன் இல்லத்தை நிர்வகிக்கும் பொறுப்பு வழங்கப்படும் எனத் தெரிய வருகிறது.

ஜெயலலிதாவின் அண்ணன் மகன் தீபக், சசிகலாவுக்கு ஆதரவாகவே இருந்து வருகிறார். சகோதரி தீபாவை அவர் ஆதரிக்கவில்லை. ஜெயலலிதாவின் இறுதிச் சடங்கில் கலந்து கொண்ட போது தான் தீபக் யார் என்பது வெளி உலகுக்கு தெரிய வந்தது.

தற்போது சொத்துக் குவிப்பு வழக்கில் சசிகலா சிறைக்கு செல்வதால் போயஸ்கார்டனில் பாதுகாப்புக்கு இருந்த பொலிஸ் அதிகாரிகள் அனைவரும் வாபஸ் பெறப்பட்டனர். எனவே போயஸ்கார்டன் இனி யாருடைய கட்டுப்பாட்டுக்கு வரும் என்ற கேள்வி எழுந்துள்ளது.

ஓ.பன்னீர்செல்வம் தரப்பினர் போயஸ்கார்டனை ஜெயலலிதாவின் நினைவு இல்லமாக மாற்ற வேண்டும் என்று கையெழுத்து இயக்கம் தொடங்கியுள்ளனர்.

இந்த நிலையில் தீபக் நேற்று முன்தினம் பிற்பகலில் கூவத்தூரில் உள்ள சொகுசு விடுதிக்குச் சென்றார். போயஸ்கார்டன் வேறு யாருக்கும் சென்று விடாமல் தடுக்கும் வகையில் தீபக் வரவழைக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது.

தீபக்குக்கு அ.தி.மு.க.வில் முக்கிய பொறுப்பு வழங்கப்பட உள்ளதாகவும், போயஸ் கார்டன் இல்லத்தை நிர்வகிக்கும் பொறுப்பும் அவரிடம் வழங்கப்படும் என்றும் கூறப்படுகிறது. (இ-12)

# கருப்பசாமி இராஜினாமா!

பெங்களூர் சிறையில் சரணடைவதற்காக சசிகலா புறப்பட்டுச் சென்ற நிலையில், அ.தி.மு.கவின் அமைப்புச் செயலாளர் கருப்பசாமி பாண்டியன் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சசிகலாவை சட்டமன்றக் கட்சி தலைவராக தேர்ந்தெடுத்த எம்.எல்.ஏக்கள், கூவத்தூரில் உள்ள தனியார் நட்சத்திர விடுதியில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

சசிகலாவுக்கு எதிராக களம் இறங்கியுள்ள் முதலமைச்சர் பன்னீர்செல்வம் அணியிலும் முக்கிய நிர்வாகிகள், எம்.எல்.ஏ.க்கள், எம்.பிக்கள் உள்ளனர். பல்வேறு பகுதிகளில் இருந்து ஆதரவாளர்கள் வந்தவண்ணம் உள்ளனர்.

இதற்கிடையே சசிகலாவுக்கு சொத்துக்குவிப்பு வழக்கில் தண்டனை உறுதி செய்யப்பட்டது. இதனால், முதல்வர் பதவிக்கு அமைச்சர் எடப்பாடி பழனிச்சாமியை தேர்வு செய்ததுடன், கட்சிப் பணியை கவனிப்பதற்காக டி.டி.வி. தினகரன் கட்சியில் சேர்க்கப்பட்டு துணை பொதுச் செயலாளர் பதவியை வழங்கியிருக்கிறார்.

பின்னர் நீதிமன்றத்தில் சரணடைவதற்காக பெங்களூர் புறப்பட்டுச் சென்றுள்ளார்.

இந்நிலையில், அ.தி.மு.க. அமைப்புச் செயலாளர் பதவியில் இருந்து கருப்பசாமி பாண்டியன் திடீரென இராஜினாமா செய்துள்ளார். தனது இராஜினாமா குறித்து செய்தியாளர்களிடம் பேசிய கருப்பசாமி பாண்டியன், டி.டி.வி. தினகரனை துணை பொதுச் செயலாளராக நியமித்ததற்கு எதிர்ப்புத் தெரிவித்து தனது பதவியை இராஜினாமா செய்திருப்பதாக கூறினார்.

"ஜல்லிக்கட்டு போராட்டம், வர்தா புயலின்போது முதலமைச்சர் ஓ.பன்னீர் செல்வம் சிறப்பாக செயற்பட்டார்.

குடிநீர் பிரச்சினை வந்த போது ஆந்திரா சென்று முதலமைச்சரை சந்தித்துப் பேசி ஏற்பாடு செய்தார். மக்களால் ஏற்றுக்கொண்டவர்களிடம் இருந்து அழைப்பு வந்தால் செல்வேன்" என கருப்பசாமி பாண்டியன் தெரிவித்தார். (இ-12)

## தப்பி வந்த சரவணன் எம்.எல்.ஏ.

# சசிகலா,பழனிச்சாமி மீது ஆட்கடத்தல் வழக்குப் பதிவு

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் வி.கே.சசிகலா மற்றும் அ.தி.மு.க. சட்டமன்ற குழுத் தலைவர் எடப்பாடி பழனிச்சாமி மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மதுரை தெற்கு தொகுதி எம்.எல்.ஏ. சரவணன் கொடுத்த புகாரின் பேரில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

கூவத்தூர் விடுதியிலிருந்து மாறு வேடத்தில் தப்பி வந்து ஓ.பி.எஸ். அணியில் சேர்ந்த சரவணன், சசிகலா மற்றும் எடப்பாடி பழனிச்சாமி எம்.எல்.ஏக்களை கடத்தியதாக கூவத்தூர் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

இதனையடுத்து சசிகலா மற்றும் எடப்பாடி பழனிச்சாமி மீது ஆள் கடத்தல் உட்பட 3 பிரிவுகளின் கீழ் கூவத்தூர் பொலிஸ் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது (இ-12)

# இலங்கையில் சிங்கள, தமிழ் தேசியங்களின் வளர்ச்சியும் அதன் விளைவுகளும்



சேர்.பொன். அருணாசலம்

எமது அயல் நாடாகிய இந்தியாவின் பல் இன, மத, கலாசாரங்களைக் கொண்ட மக்கள் ஒற்றுமையுடன் பிரித்தானிய காலனித்துவத்திற்கு எதிராகப் போராடி சுதந்திரம் பெற்று இந்தியத் தேசியத்தை உருவாக்கினார்கள். இந்தியத் தேசியம் என்பது அடிப்படையில் இந்திய தேசிய முதலாளித்துவத்தையே குறிக்கும். தேசியம் என்பது நிரந்தரமான ஒன்றல்ல. அது பல பாகங்களாக பிரியலாம். அல்லது சேரலாம். தேசியம் என்பது ஆபத்தான ஒன்றே என ரவீந்திரநாத் தாகூர் குறிப்பிடுகின்றார்.

இவ்வாறே இலங்கையின் தேசிய விடுதலைக்காகப் போராட இலங்கை தேசிய காங்கிரஸ் 1919 இல் சேர்.பொன் அருணாசலம் தலைமையில் உருவாக்கப்பட்டது. பின்னாளில் சிங்களத் தலைவர்களுடன் ஏற்பட்ட முரண்பாட்டை அடுத்து காங்கிரஸில் இருந்து விலகிய அருணாசலம் 'தமிழ் லீக்' எனும் அமைப்பை உருவாக்கினார். இவ்வாறே சுதந்திரப் போராட்டத்தின் போக்கு அமைந்தது. 1924 இல் உருவாகிய யாழ்ப்பாண இளைஞர் காங்கிரஸ் இலங்கையின் முழுமையான சுதந்திரத்தை வலியுறுத்தியதோடு நேரு, பண்டாரநாயக்க, சரோஜினிநாயுடு போன்ற தலைவர்களை வரவழைத்து அரசியல் விழிப்புணர்வை ஊட்டியமை குறிப்பிடத்தக்கது. 1931 டொனமூர் அரசியல் சீர்திருத்தத்தின் பிரகாரம் சர்வஜன வாக்குரிமை வழங்கப்பட்டது. இதனால் வாக்காளர் எண்ணிக்கை பல மடங்காக பெருகியது.

அரசியல் அதிகாரம், ஒற்றையாட்சிக்குள் பெரும்பான்மையினர் வசமாவதை உணர்ந்த சிங்களத் தலைவர்கள் சிலர் கிறிஸ்தவத்தில் இருந்து பௌத்தத்தை பின்பற்றத் தொடங்கினர். 1936 இல் டொனமூர் சட்ட சபையில் தனிச் சிங்கள மந்திரி சபை அமைக்கப்பட்டது. இவ்வாறாக பௌத்தத்திற்கு மாறிய S.W.R.D. பண்டாரநாயக்க 1936 இல் சிங்கள மகா சபையை உருவாக்கினார்.

சிங்கள பௌத்த தேசியவாதம் தீவிரமடைந்த வேளையில் 1935இல் அமைக்கப்பட்ட லங்கா



ஜி.ஜி. பொன்னம்பலம்

சமசமாஜக்கட்சி இலங்கையின் முழுமையான சுதந்திரத்திற்காக தொழிலாளர் வர்க்கத்தை அணிதிரட்டியது. 1944 இல் ஜி.ஜி. பொன்னம்பலத்தால் உருவாக்கப்பட்ட அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ், சோல்பரி அரசியல் யாப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்ததோடு 50:50 கோரிக்கையை முன்வைத்தது.

1944 இல் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி தமிழ் மக்களை ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொண்டு அதன் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்தது. சோல்பரி அரசியல் யாப்பின் கீழ் 1947 இல் நடத்தப்பட்ட முதலாவது பாராளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தை அமைத்ததோடு லங்கா சமசமாஜக் கட்சி எதிர்க்கட்சியாகவும் அதன் தலைவர் டாக்டர். N.M. பெரேரா எதிர்க்கட் சித் தலைவராகவும் தெரிவு செய்யப்பட்டனர். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தில் இணைந்த அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் ஒற்றையாட்சி அமைப்பை ஏற்றுக் கொண்டதோடு மந்திரிப் பதவியையும் பெற்றுக் கொண்டார்கள்.

அடுத்த ஆண்டிலேயே மலையகத் தோட்டத் தொழிலாளர்களின் பிரஜாவுரிமையை பறிக்கும் சட்டத்தை பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றினார்கள். அதனை தமிழ்க்காங்கிரஸ் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம், இலங்கை - இந்திய காங்கிரஸ் உடன் செய்த ஒப்பந்தத்தை மீறி ஆதரித்தார். இச்சட்டத்தை லங்கா சமசமாஜக் கட்சி, தமிழ்க் காங்கிரஸில் இருந்த S.J.V. செல்வநாயகம் குழுவினர் எதிர்த்தனர். இதனால் மலையகத் தமிழர்களை பிரதிநிதித்துவப்படுத்திய ஏழு பாராளுமன்ற உறுப்பினர்களையும் அடுத்த தேர்தலில் இழக்கும் நிலையேற்பட்டது.

S.J.V.செல்வநாயகமும் அவர் தம் குழுவினரும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸிலிருந்து பிரிந்து சமஷ்டிக் கட்சியை 1949 இல் உருவாக்கினார்கள். இக்கட்சி தனது கொள்கைப் பிரகடனத்தில் தேசியம், தாயகம், சுய நிர்ணயம் என்பவற்றின்



தந்தை செல்வா

அடிப்படையில் தமிழர்களுக்கான சமஷ்டிக் கோரிக்கையை முன்வைத்தது. இக்கட்சியின் பெயர் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இலங்கை தமிழரசுக்கட்சி என அழைக்கப்பட்டது. இவ்வாறே S.W.R.D.பண்டாரநாயக்க ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து பிரிந்து ஸ்ரீலங்கா சுதந் திரக்கட்சியை 1951 செப்டெம்பர் 2 ஆம் திகதி உருவாக்கினார். இவ்விரு கட்சிகளும் 1952 தேர்தலில் தோல்வியுற்றன. அரிசி மற்றும் ஏனைய பொருட்களின் விலை உயர்வினால் ஐக்கிய தேசியக்கட்சி அரசுக்கு எதிராக இடதுசாரிகளால் மாபெரும் ஹர்த்தால் 1953 ஒகஸ்ட் 12ஆம் திகதி நடத்தப்பட்டது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இலங்கை தமிழரசுக்கட்சி இதற்கு ஆதரவு வழங்கியது. சிங்கள பௌத்த தேசிய வாதத்திற்கும் தமிழ்த் தேசிய வாதத்திற்கும் இடையேயான முரண்பாட்டிற்கும் வளர்ச்சிக்கும் அடிப்படைக்காரணம் பொருளாதார பிரச்சினையேயாகும் ஒரு முறை S.W. R.D. பண்டாரநாயக்க பாராளுமன்றத்தில் 'தென்னிலங்கையில் நகரங்கள், பட்டினங்கள், கிராமங்கள் தோறும் பெரிய வியாபார நிறுவனங்கள் தொடக்கம் சிறிய கடைகள் வரை தமிழர்கள் வசமேயுள்ளன' எனக் குறிப்பிட்டார்.1929 களில் யாழ்ப்பாணத்தில் 64 தரமான ஆங்கிலப் பாடசாலைகளும் 400 இற்கு மேற்பட்ட தமிழ் பாடசாலைகளும் இருந்தன. இவை ஏனைய பிரதேசங்களை விட அதிகமாகும். இதனால் ஆங்கிலம் உட்பட ஏனைய விஞ்ஞானப் பாடங்களைக் கற்பதற்கு தமிழர்களுக்கு அதிக வாய்ப்பு கிடைத்தது. 1833 தொடக்கம் ஆங்கிலம் அரச கரும மொழியாக இருந்தமையால் சிங்களவரை விட தமிழர்கள் உயர்கல்வி வாய்ப்புக்கள்,அரச வேலை வாய்ப்புக்களை கூடுதலாகப் பெற்றார்கள். இவற்றைத் தமிழ் மக்கள் தமது முயற்சியினாலும் திறமையினாலுமே பெற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவை யாவற்றையும் உணர்ந்த பண்டாரநாயக்க காலனித்துவத்திற்கு எதி



சரோஜினி நாயுடு

ரான கொள்கைகளை முன்வைத்து 1956 தேர்தலில் ஆட்சியை கைப்பற்றி பிரதமரானார். அவ்வாறே வடக்கு, கிழக்கில் இலங்கை தமிழரசுக்கட்சி அதிக ஆசனங்களை பெற்று வெற்றியீட்டியது. இக் கட்சி கிழக்கு மாகாணத்தில் தமிழ் மக்களுடன் முஸ்லிம் மக்களையும் ஒன்றிணைத்து செயற்படுத்துவதில் வெற்றி கண்டது.

பிரதமரான பண்டாரநாயக்க வாக்குறுதி அளித்தபடி சிங்களம் மாத்திரம் அரசகரும மொழி சட்டத்தை 1957 ஜூன் 5 ஆம் திகதி நிறைவேற்றினார். இச்சட்டத்தை பாராளுமன்றத்தில் லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, இலங்கைத் தமிழரசுக்கட்சி என்பன எதிர்த்தன.டாக்டர் கொல்வின் ஆர்.டீ.சில்வா 'ஒரு மொழி யென்றால் இருநாடு; இருமொழி யென்றால் ஒரு நாடு' என தீர்க்க தரிசனமாகக் கூறினார். லங்கா சமசமாஜக். கட்சி கொழும்பு மாநகரசபை மண்டபத்தில் எமது சம அந்தஸ்து தொடர்பான கூட்டத்தை நடத்திய போது அது குழப்பத்தில் முடிந்தது. இலங்கை தமிழரசுக் கட்சியினர் காலிமுகத்திடலில் சத்தியாக் கிரகப் போராட்டத்தில் ஈடுபட்ட போது தாக்குதலுக்கு உள்ளாகி காயமடைந்தார்கள். இவ்வாறு இவர்களின் சத்தியாக்கிரகப் போராட்டம் வடக்கு, கிழக்கு எங்கும் பரவியது.

வாகனங்களுக்கான சிங்கள 'ஸ்ரீ' எதிர்ப்புப் போராட்டமும் சூடுபிடித்தது. இந்நிலையில் பிரதமர் பண்டாரநாயக்க, S.J.V. செல்வநாயகத்தை அழைத்து பிரசித்தி பெற்ற பண்டா- செல்வா ஒப்பந்தத்தை எழுதினார். பிராந்திய சபைகள் தொடர்பான இவ் ஒப்பந்தத்தை தற்காலிகமாக ஏற்ற தமிழரசுக் கட்சியினர் தமது போராட்டங்களை நிறுத்தினர்.

இதுதான் தருணம் என ஐக்கிய தேசியக் கட்சி ஒப்பந்தத்திற்கு எதிராக பாத யாத்திரையை மேற் கொண்டார். பிக்குமார் பண்டாரநாயக்காவின் வீட்டின் முன்னால் சத்தியாக்கிரகம் செய்தார்கள். அதன் விளைவு பண்டாரநாயக்க ஒப்பந்தத்தை கிழித்தெறிந்தார்.

(தொடரும்)

பி.முத்துலிங்கம்
ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்
தென்மராட்சி.

# “திரும்பி வாருங்கள்” ஆஸி முகாம்களிலுள்ள இலங்கையர்களுக்கு பிரதமர் ரணில் அழைப்பு

(மெல்பேர்ன்)

**அவுஸ்திரேலியாவின் குடிவரவுத் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை நாட்டுக்கு திரும்புமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.**

அவுஸ்திரேலியாவுக்கு அதிகாரபூர்வ பயணத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று கன்பராவில், அவுஸ்திரேலியப் பிரதமர் மல்கம் ரேன்புல்லைச் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின் போதே, அவுஸ்திரேலியப் பிரதமருக்கு அருகே நின்று பிரதமர் ரணில் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.



அவுஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்லவதற்காக இலங்கையர்கள் சட்டத்தை மீறியுள்ளனர். ஆனால், நாடு திரும்பினால், சட்டநடவடிக்கைகளை எதிர்கொள்ளமாட்டார்கள்.

திரும்பி வாருங்கள், எல்லாம் மன்னிக்கப்பட்டு விட்டது என்று பிரதமர் ரணில் அழைப்பு விடுத்துள்ளார். (இ-7)

# இலங்கை அரசியல்வாதியின் காதலர் தின ரோஜா அழிப்பு

(கொழும்பு)

இலங்கை அரசியல்வாதி ஒருவரால் காதலர் தினத்தை முன்னிட்டு இறக்குமதி செய்யப்பட்ட 53 கிலோ ரோஜா மலர்கள் மற்றும் 2000 ஏனைய மலர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன.

தாய்லாந்தில் இருந்தும், இந்தியாவில் இருந்தும் இரண்டு பொதிகளில் கடந்த சனிக்கிழமை இந்த மலர்கள் விமானம் மூலம் எடுத்து வரப்பட்டிருந்தன.

இவற்றை அரசியல்வாதி ஒருவரே இறக்குமதி செய்திருந்தார் என்று விமான நிலைய அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்தப் பொதிகளை பொறுப்பேற்க வந்திருந்தவரிடம் விசாரணை நடத்திய போது, அரசியல்வாதி ஒருவரே தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசியுள்ளார்.

இந்த இரண்டு பொதிகளிலும் எடுத்து வரப்பட்ட மலர்களில் பூச்சிகள் மற்றும் ஏனைய உயிரினங்கள் இருக்கலாம் என்று கருதி தேசிய தாவரவியல் அதிகாரிகள் இவற்றைக் கைப்பற்றினர்.

இதையடுத்து இந்த ரோஜா மலர்களை எரித்து அழிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (இ-7)

# சைற்றம் மருத்துவக் கல்லூரியின் பிரதானி வாக்குமூலத்தில் முரண்பாடு

தொழில்நுட்பம் மற்றும் மருத்துவத்துக்கான தெற்காசிய நிறுவகத்தின் (சைற்றம்) பிரதம நிறைவேற்று அதிகாரி டாக்டர் சமீர சேனாரட்னவின் கார் மீது நடத்தப்பட்டதாகக் கூறப்படும் துப்பாக்கிச்சூடு தொடர்பில் அவர் வழங்கிய வாக்குமூலங்களில் முரண்பாடு காணப்படுவதாக பொலிஸார் தெரிவித்தனர்.



இந்தச் சம்பவம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டில், சந்தேகம் காணப்படுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலைமை தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர், இச்சம்பவம் தொடர்பாக அரச பகுப்பாய்வாளரின் அறிக்கைக்குக் காத்திருப்பதாகவும், அந்த அறிக்கையின்றி எதையும் கூற முடியாதெனவும் தெரிவித்தார்.

எனினும், டாக்டர் சேனாரட்னவால் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட வாக்குமூலங்களில் உறுதியற்ற தன்மைகள் காணப்படுவதாக அவர் தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பான கண்காணிப்புக் கமராவின் காட்சிகளை பொலிஸார் இன்னமும் ஆராய்ந்து வருவதாகத் தெரிவித்த அவர, இதுவரையில் எவரும் கைது செய்யப்பட்டிருக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

இதற்கிடையில் கருத்துத் தெரிவித்த அரச பகுப்பாய்வுத் திணைக்களம், இச்சம்பவம் தொடர்பான அறிக்கை, இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் வழங்கப்படுமெனத் தெரிவித்தது. அறிக்கையைச் சமர்ப்பிப்பதற்கு முன்பாக, சில ஆதாரங்களைப் பெற வேண்டியுள்ளதாகத் தெரிவித்த திணைக்களத்தின் அதிகாரியொருவர், அவற்றைக் கையளிக்குமாறு பொலிஸாரிடம் கேட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

டாக்டர் சேனாரட்னவின் கார் மீது, மோட்டார் சைக்கிளில் வந்த இருவர், இம்மாதம் 6ஆம் திகதி நடத்திய தாக்குதலில், அவருக்குக் காயம் ஏற்படவில்லை. எனினும், காரின் முன்பக்கக் கண்ணாடிக்குச் சேதம் ஏற்பட்டிருந்தது. இதைத் தொடர்ந்து, அவரது காரும் அவரது உடைகளும், அரச பகுப்பாய்வுத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்பட்டதோடு, டாக்டர் சேனாரட்னவுக்குப் பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

## இன்று ஒரு தகவல்

### திருப்தியாகச் சொல்வதுண்டா?

என் உறவினர் இல்லாத திருமணத்தில் கலந்து கொண்டு விட்டு ஓய்வாகச் சாய்ந்திருந்த போது சில சிறுவர்கள் என்னிடம் வந்தார்கள். மாமா! ஒரு நாடகம் நடத்துகிறோம். பார்க்கிறீங்களா? என்றார்கள் தாராளமா? என்றேன்.

நாடகம் முடிந்ததும் போல் பொயின்ட் பேனாக்களை வாங்கி வரவழைத்துப் பரிசாகக் கொடுத்தேன். நான்கு வார்த்தை நன்றாகச் சொன்னேன். பக்கத்திலிருந்த உறவினர் என்னத்தைப் பெரிசா டிராமா போட்டுட்டானுங்கன்னு இவ்வளவு ஆர்ப்பாட்டம் பண்றீங்க? என்று கேலிப் புன்னகையுடன் கேட்டார்.

அப்படியில்லை. அவங்களோட ஆர்வத்தை நாம் பாராட்டணும். கூச்சமில்லாம நாலு வார்த்தை பேசினாங்களே, அதை நாம் அவசியம் ஊக்கப்படுத்தணும். சிறு பரிசுகளைக் கொடுத்து திறமைகளைத் தூண்டணும். திருப்திபட்ட விஷயங்களை மட்டும்தான் சொல்லணும். குறைகளை மட்டும் சொல்லி மலரத் துடிக்கின்ற இந்த மொட்டுகளின் மீது நெருப்புத் துண்டங்களை வீசக் கூடாது பாருங்க! என்றேன்.

அவர்கள் குட்டி லெக்சரைக் கேட்டு சிந்தனையில் மூழ்கிப் போனார்.

வாழ்க்கையில் மட்டுமென்ன? ரோஜாவைப் பார்த்து ரசிக்காமல் அதன் முள்ளை பார்த்து முகம் சுளிக்கிறவர்களே பலராவர்.

தொழில் எப்படி நடக்குதுங்க?

ஐயோ! அதையேன் கேக்குறீங்க!ன்னு ஆரம்பித்து அதில் உள்ள கஷ்டங்களை மட்டும் சொல்லுவார்கள். சிலர் ஒப்பாரியே வைத்து விடுவார்கள்

பையன் 100 இற்கு 85 மார்க் வாங்கியிருந்தால், மார்க்காடா இது? ஹரியைப் பாருடா! 100 இற்கு 100 வாங்கியிருக்கான் என்பார்கள்.

நல்லாப் படிக்குறே வெரிக்குட்! இன்னுங்கூட அதிகமா எடுக்க முயற்சி பண்ணு! என்று சொல்லவே தெரியாது.

பத்து வேலைகளைச் சொல்லியிருப்பார்கள். அவரிடம் வேலை செய்பவரோ அதில் ஆறைத் திருப்தியாகவும் இரண்டை அரைகுறையாகவும் இரண்டைச் செய்யாமலும் விட்டிருப்பார். இந்த நான்கைத் தான் மனிதர் பிடித்துக் கொள்வார். கழட்டு கழட்டு என்ற வைது கழட்டுவார். அந்த ஆறுக்குத் திருப்தி தெரிவிப்பதுதான் தன் வழக்கமே இல்லை என்று வைத்துக் கொண்டிருக்கிறாரோ?

காசு பணம் வேண்டாம் நல்ல வார்தையாக நான்கு சொல்லக்கூடாதா?

திருப்தியான சமையல் தான். ஆனால் மனிதர் சாம்பாரில் உப்பு கூடி விட்டதைத் தான் பெரிதாகச் சொல்லிக் கொண்டிருப்பார். சமையல் ரொம்பப் பிரமாதம். சாம்பார்ல மட்டும் இலேசா உப்பு அதிகம் என்று சொல்லும் பாணி இவருக்குத் தெரியாது.

குறை காண்பதே வேலை என்றால், இவரோடு காலம் தள்ளுபவர்களுக்கு எப்படி இருக்கும்.

ஐயோ? அந்தாளா? அவரு என்ன செஞ்சாலும் திருப்தியாச் சொல்லமாட்டாருங்க! எதுக்கு நாம வீணாச் சிரமப்படணும்? என்று ஓய்ந்துதான் போவார்கள். திறமைகளை வெளிக் கொணரவும் அவற்றைப் பளிச்சிடச் செய்யவும் நல்லுறவைக் காப்பாற்றிக் கொள்ளவும் அதிருப்தி தெரிகின்ற முறை ஒருபோதும் உதவாது. தலையில் குட்டுவதை விட்டுவிட்டு இவர்கள் முதுகில் தட்டிக் கொடுக்கக் கற்றுக் கொள்ளட்டும்.

**லேனா தமிழ்வாணன்**

# மாசி மாதத இராசி பலன்கள்

## 13.02.2017-13.03.2017

ஜோதிடக் கலாமணி
சிவல்புரி சிங்காரம்



*முடிவுகளை தீர்க்கமாக எடுக்கும் மேட இராசி அன்பர்களே!*




உங்களின் மாசி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்திலேயே உங்கள் இராசிநாதன் செவ்வாய், விரய ஸ்தானத்தில் தனாதிபதி சுக்ரனோடு இணைந்து சஞ்சரிக்கிறார். இது நீங்கள் செய்த பாக்கியம். செவ்வாய் மட்டும் விரய ஸ்தானத்தில் இருந்தால், செலவு கட்டுக்கடங்காமல் போய், மனநிம்மதியை இழக்கச் செய்யும். ஆனால் உங்களுக்கு ஒரு நல்ல நேரம். மாதம் தொடங்கி 13 நாட்கள் சுக்ரனோடு செவ்வாய் இணைந்திருக்கிறது. அதன் பிறகு பெப்ரவரி 26ஆம் திகதி வரை செவ்வாய், உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போகிறார். இந்த நேரத்தில் உற்சாகமும், தன்னம்பிக்கையும் அதிகரிக்கும். ஒவ்வொரு செயல்களிலும் சிந்தித்து செயற்படுவீர்கள்.

காலாகாலத்தில் நடைபெற வேண்டிய காரியங்கள் நடைபெறவில்லையே என்ற கவலை மாறும். சகோதர ஒற்றுமை பலப்படும். குருவின் பரிபூரண பார்வை உங்கள் இராசியில் பதிவதால், இதுவரை இருந்த தடைகளும் தாமதங்களும் விலகும். பாராட்டு மழையில் நனைவீர்கள்.

மாதத் தொடக்கத்தில் உலாவரும் கிரகங்களில், குறிப்பாக பஞ்சமாதிபதி சூரியன் 11ஆம் இடத்தில் சஞ்சரிப்பது யோகம்தான். அரசியல் மற்றும் பொதுநலத்தில் இருப்பவர்களுக்கு பதவிகள் கிடைக்கலாம். தொழில் பிரச்சினைகளைச் சமாளிப்பீர்கள். அஷ்ட மத்துச் சனியின் ஆதிக்கத்தால் இதுவரை பட்ட துயரங்களுக்கு நல்ல வழி பிறக்கப் போகிறது. விரக்திகள் மாறும். விருப்பங்கள் நிறைவேறும். 6இற்கு அதிபதி புதன் வலுவிழந்திருப்பதால், வாங்கிய கடனைக் கொடுத்து மகிழ்வீர்கள். சிவராத்திரி அன்று சிவனை நினைத்து வழிபட்டால் சிறப்பான எதிர்காலம் அமையும். கவலைகள் விலகும்.

**கும்ப புதனும், மீன புதனும்!**

பெப்ரவரி 16ஆம் திகதி கும்ப இராசிக்குப் புதன் செல்கிறார். 3, 6இற்கு அதிபதி இலாப ஸ்தானத்திற்கு வரும்பொழுது, உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு பதவி உயர்வு, ஊதிய உயர்வு கிடைக்கக் கூடும். அதிகாரிகள் உங்களுக்கு அனுகூலமாக நடந்து கொள்வர். மார்ச் 5ஆம் திகதி மீனத்தில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். அங்கு புதன் நீசம் பெறுகிறார். உடன்பிறப்புகளின் ஒத்துழைப்புக் குறையலாம். ஒரு சிலருக்கு ஊர் மாற்றங்களும், வீடு மாற்றங்களும் வந்து சேரும். வீட்டிற்குத் தேவையான விலையுயர்ந்த பொருட்களை வாங்குவதில் அக்கறை காட்டுவீர்கள்.

**குருவின் வக்ர இயக்கம்!**

பெப்ரவரி 22ஆம் திகதி துலாம் இராசியில் குரு வக்ரம் பெறுகிறார். அதன்பிறகு மார்ச் 10ஆம் திகதி கன்னி இராசிக்கு வக்ரம் பெற்றுச் செல்கிறார். துலாத்தில் குரு வக்ரம் பெறும் பொழுது ஓரளவு நன்மைகளைச் செய்வார். கன்னி இராசக்குள் வக்ரம் பெறும் பொழுது, அதிகபட்சமான நன்மைகளை வழங்குவார். குறிப்பாக தந்தை வழி உறவில் ஏற்பட்ட விரிசல் அகலும். தன்னிச்சையாகச் செயற்பட்டு சாதனை படைப்பீர்கள். பூர்வீக சொத்துகள் கைக்கு வந்து சேரலாம். பயணங்களால் பலன் கிடைக்கும். திருமண முயற்சியில் இருந்த தடை அகலும்.

**மேட செவ்வாயின் சஞ்சாரம்!**

பெப்ரவரி 26ஆம் திகதி உங்கள் இராசி நாதன் செவ்வாய், உங்கள் இராசியிலேயே சஞ்சரிக்கப் போகிறார். இதனால் மதிப்பும் மரியாதையும் உயரும். மக்கள் செல்வாக்கு மேலோங்கும். அதிகாரப் பதவியில் உள்ளவர்களின் அனுகூலத்தோடு, தொழில் வளர்ச்சி காண்பீர்கள். வீடு கட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சி வெற்றிதரும். சொத்துக்களால் நன்மையும், சொந்தபந்தங்களால் அனுகூலமும் கிடைக்கும். இம் மாதம் ஞாயிறுதோறும் சிவனை வழிபட்டு வருவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

குரு பார்வையால் குழப்பங்கள் அகலும். உடன் இருப்பவர்களால் நன்மை கிடைக்கும். உறவினர்களின் பாராட்டுகளால் உள்ளம் மகிழ்வீர்கள். கணவன்- மனைவிக்குள் ஒற்றுமை பலப்படும். பிள்ளைகளின் முன்னேற்றம் கண்டு பெருமைப்படுவீர்கள். உடன் பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். மருத்துவச் செலவு குறையும். இல்லத்தில் தள்ளிப்போன சுபகாரிய நிகழ்வுகள், இப்பொழுது நடைபெறுவதற்கான சூழ்நிலை உருவாகும். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு சம்பள உயர்வு, இடமாற்றம் கிடைக்கலாம். செவ்வாய் பலம்பெறும்போது உங்கள் பெயரிலேயே சொத்துகள் வாங்கவும். தொழில் அமைக்கவும் குடும்பத்தினர் சம்மதிப்பார்கள். பண வரவு திருப்தி தரும். சிவாலய வழிபாடு சிறப்பை வழங்கும்.

# மகிழ்ச்சி அதிகரிக்கும் நேரம்!



அனுசரித்துச் சென்று காரியங்களைச் சாதிக்கும் ரிஷப இராசி அன்பர்களே!




மாசி மாதத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதன் சுக்ரன், இலாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். அவரோடு சப்தம விரயாதிபதியான செவ்வாயும் சேர்ந்திருக்கிறார். எனவே வருமானப் பற்றாக்குறை அகலும். போதுமான அளவிற்கு பொருளாதார நிலை உயரும். அதே நேரத்தில் குடும்பச் செலவுகளும் அதிகரிக்கலாம். செலவைச் சமாளிக்க புதிய முயற்சிகளிலும் ஈடுபடுவீர்கள்.

பொதுவாகவே விரயாதிபதி இலாப ஸ்தானத்தில் இருப்பது ஒருவழிக்கு நன்மைதான். விரயத்திற்கேற்ற இலாபம் வந்துகொண்டேயிருக்கும். வீடு கட்டும் முயற்சிக்கு கடன் உதவியை எதிர்பார்த்துக் காத்திருப்பவர்களுக்கு கேட்ட இடத்தில் உதவி கிடைக்கும். பிள்ளைகளின் கல்யாணத்தை முடிக்க தொகை இல்லையே என்று கவலைபட்டவர்களுக்கு, பணம் வந்து சேர்ந்து விடும்.

குருபகவான் தற்சமயம் 5ஆம் இடத்திலிருந்து 6ஆம் இடத்திற்கு வந்திருக்கிறார். இந்த இயக்கத்தால் பலமாறுதல்களும் உங்களுக்கு நடக்கலாம். வியாபாரப் போட்டிகள் படிப்படியாக விலகும். புதிய வாய்ப்புகள் தேடிவரும். 8,11இற்கு அதிபதியாக விளங்கும் குரு. 6இல் சஞ்சரிக்கும் பொழுது, உத்தியோகத்தில் இடமாற்றங்கள் வரலாம். சிலருக்கு கூடுதல் பொறுப்புடன், சம்பள உயர்வு கிடைக்கலாம். தனாதிபதி புதன் வலிமை இழந்து இருப்பதால் ஒருதொகை செலவழிந்த பிறகே அடுத்த தொகை வந்துசேரும்.

பஞ்சமாதிபதியாகவும் புதன் விளங்குவதால் பிள்ளைகள் வழியில் விரயங்கள் ஏற்படலாம். குழந்தைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்வது நல்லது. ஒரு சிலர் தங்கள் பிள்ளைகள் விருப்பப்படியே வாகனங்கள் வாங்கி கொடுப்பீர்கள். அவர்களின் ஜாதகப்படி அஷ்டமத்துச் சனி, அர்த்தாஷ்டமச் சனி, ஏழரைச் சனி போன்றவற்றின் ஆதிக்கம் நடைபெற்றால், அவர்களை வாகனம் செலுத்தும் போது கவனமாக இருக்கச் சொல்லவும்.

இந்த மாதம் சிவனுக்கு உகந்த சிவராத்திரி விழா வருவதால், அன்றைய தினம் நமசிவாய பதிகம் பாடி சிவனை வழிபட்டால் நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும்.

**கும்ப புதனும், மீன புதனும்!**

பெப்ரவரி 16ஆம் திகதி கும்ப இராசிக்குப் புதன் செல்கிறார். தன பஞ்சமாதிபதியான புதன் 10ஆம் இடத்தில் சஞ்சரிக்கும் பொழுது தொழில் வளர்ச்சி மேலோங்கும். புதிய முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு மகிழ்வீர்கள். மார்ச் 5ஆம் திகதி மீனத்தில் புதன் சஞ்சரிக்கும் பொழுது, தன பஞ்சமாதிபதியான புதன் நீசம் பெறுகிறார். எனவே பொருளாதாரப் பற்றாக்குறை ஏற்படும். உறவினர் பகை உருவாகலாம். வீட்டில் நடைபெறவிருந்த சுபகாரியங்களில் தடைகள் வரலாம். மாமன், மைத்துனர் வழியில் திடீர் செலவுகள் ஏற்படக் கூடும்.

**குரு வக்ர இயக்கம்!**

பெப்ரவரி 22ஆம் திகதி துலாம் இராசிக்குள் குரு வக்ரம் பெறுகிறார். அதன்பிறகு மார்ச் 10ஆம் திகதி கன்னி இராசிக்கு குரு வக்ரம் பெற்றுச் செல்கிறார். இது போன்ற வக்ர காலங்கள் உங்களுக்கு யோகம் தரும் காலமாகவே அமையும். உங்கள் இராசிப்படி அஷ்டமாதிபதியாகவும், குரு விளங்குவதால் அதுவக்ரம் பெறும் நேரத்தில். திட்டமிடாது செய்யும் காரியங்கள் கூட வெற்றியாகும். குழந்தை இல்லையே என்று வருந்தியவர்களுக்கு புத்திர பாக்கியம் கிடைக்கும். அடகுவைத்த நகைகளை மீட்பீர்கள். தொழில் தொடங்கும் முயற்சியில் வெற்றி கிடைக்கும்.

**மேட செவ்வாயின் சஞ்சாரம்!**

பெப்ரவரி 26ஆம் திகதி மேடத்திற்கு செவ்வாய் செல்கிறார். இந்தக் காலத்தில் சொத்துகளால் ஆதாயம் கிடைக்கும். வீடு விற்பனையால் கிடைத்த இலாபத்தைக் கொண்டு புதிய சொத்துகள் வாங்க முற்படுவீர்கள். பயணங்களால் பலன் கிடைக்கும். வெளிநாட்டு அழைப்புகளை ஏற்றுக் கொள்ள ஒருசிலர் முன்வருவர். இந்த மாதம் கண்டகச் சனியின் ஆதிக்கத்தால் கவலை ஏற்படாமலிருக்க சனிக்கிழமை தோறும் அனுமனை வழிபட்டு வாருங்கள்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்!**

வசதிவாய்ப்புகள் பெருகும் மாதம் இது. விபரீத ராஜயோக அடிப்படையில், நடைபெறாத சில காரியங்கள் நடைபெற்று மகிழ்ச்சியை வழங்கும். தங்கம், வெள்ளி வந்துசேரும். மங்கள நிகழ்ச்சி பணையில் நடைபெறும். கணவன் -மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் அகலும். ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்பட்டு புதிய பாதையை அமைத்துக்கொள்வர்.

பிள்ளைகளின் வெளிநாட்டு முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். ஆரோக்கியத் தொலைக்கு மாற்று மருத்துவத்தை மேற்கொள்வது நல்லது. உத்தியோகத்தில் உள்ள பெண்களுக்கு உயரதிகாரிகளின் ஒத்துழைப்போடு நல்ல வாய்ப்புகள் வந்துசேரும். நீண்ட நாள் பிரார்த்தனைகள் நிறைவேறும். சனி வழிபாடு சந்தோஷம் வழங்கும்.


# நினைத்துப் பார்க்காத நிகழ்வுகள் நடக்கும் நேரம்!

(தொடரும்)

# நாவற்குழியில் வீட்டுத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுமா?

## யாழ். மாவட்ட செயலகத்தில் ஆர்ப்பாட்டம்





(படங்கள்: பொ.சோபிகா)

நாவற்குழி வீட்டுத் திட்டத்துக்கான பணத்தினை வழங்கக்கோரி நாவற்குழி ஐயனார் குடியேற்றத்திட்ட மக்கள் நேற்றைய தினம் யாழ். மாவட்டச் செயலகத்தினுள் ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

யாழ்.மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் வீடின்றி வாழ்ந்துவந்த சில குடும்பங்கள் கடந்த 2010 ஆம் ஆண்டிலிருந்து குறித்த நாவற்குழி பகுதியில் வீடமைப்பு அதிகாரசபைக்குச் சொந்தமான காணியில் அத்துமீறி வாழ்ந்து வருகின்றனர்.

இந்த நிலையில் தேசிய வீடமைப்பு அதிகாரசபையால் அப்பகுதியில் 200 தமிழ் குடும்பங்களுக்கும் 50 சிங்களக் குடும்பங்களுக்குமான காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு 5 இலட்சம் ரூபாய் பெறுமதியுடைய வீட்டுத்திட்டத்துக்கான அடிக்கல் நாட்டு விழா கடந்த ஜனவரி மாதம் 30 ஆம் திகதி இடம்பெற்றது. அவர்களுக்குரிய வீட்டுத்திட்டத்துக்கான பணம் நன்கொடையாகவும் கட்டம் கட்டமாக வழங்கப்படுவதாகவும் அதிகாரிகளால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் குறித்த வீட்டித்திட்டத்துக்கான அத்திபாரக் குழிகள் வெட்டப்பட்டுள்ள போதிலும் முதலாம் கட்ட பணத்தினை இதுவரை மக்களுக்கு வழங்கவில்லை. கடந்த 10 ஆம் திகதி வழங்கப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்த போதும் அவை வழங்கப்படாததனை கண்டித்து தமக்குரிய பணத்தினை வழங்க்க கோரியே நேற்றைய தினம் யாழ்.மாவட்ட செயலகத்தை முற்றுகையிட்டு போராட்டம் நடத்தியதுடன் மகஜர் ஒன்றினையும் யாழ்.மாவட்ட செயலரிடம் கையளித்திருந்தனர்.

இவ்விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையில்,

நாம் 7 வருடங்களுக்கு முன்னர் வீதிகளில் வாழ்ந்து வந்தோம். எமக்கான காணிகள், வீடுகள் எவையும் இல்லை. எம்மை யாரும் கண்டு கொள்ளவும் இல்லை. அதன் பின்னர் இப்பகுதியில் வந்து குடியமர்ந்தோம். யாரும் எந்தவிதமான உதவிகளும் எமக்கு செய்யவில்லை.

தற்போது இந்த விட்டுத் திட்டம் தருவதாகக் கூறி அத்திபாரக் குழிகளை வெட்டுமாறு அதிகாரிகள் தெரிவித்தனர்.

அதனை நம்பி நாங்கள் அத்திபாரக் குழியை வெட்டியிருந்தோம். தற்காலிகமாக இருந்த வீடுகளையும் அகற்றியே எமது வீட்டுக்கான அத்திபாரக் குழிகளை வெட்டியுள்ளோம். கட்டம் கட்டமா பணம் தருவதாக கூறியிருந்த போதும் எமக்கான பணம் வழங்கப்படவில்லை. கடன் பட்டே அத்திபாரக் குழிகளை வெட்டியிருந்தோம்.

இந்த நிலையில் குறித்த வீட்டுத்திட்டம் இடைநிறுத்தப்படப்போகிறது என செய்திகள் பரவலாக பேசப்படுகின்றன. இதை அறிந்த எமக்கு கடன் கொடுத்தவர்கள் வந்து வீட்டுத்திட்டம் நடைபெறுவதில் நம்பிக்கையில்லை. கடனை ததிருப்பித்தருமாறு கேட்கின்றனர்.

எமக்கு வேறு வழியில்லை. இரவில் மழை. பகலில் வெயிலுக்குள் இருந்த இருப்பிடத்தையும் குலைத்துவிட்டு நடுத்தெருவில் நிற்கிறோம். எமக்குரிய வீட்டுத் திட்டம் நடைபெறுமா? எமக் கான பணம் கிடைக்குமா? என கேட்பதற்காக வந்துள் ளோம்.

ஒரு வாரத்துக்குள் பணம் தருவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளவதாக அரச அதிபர் தெரிவித்துள்ளார். எனவே அவருடைய உறுதி மொழியை நம்பி இப்போராட்டத்தை நிறுத்துகிறோம். அது நடைபெறாத பட்சத்தில் மீண்டும் மாவட்ட செயலகத்தை முற்றுகையி டுவோம் என தெரிவித்தனர். (இ-9)

---

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 988

Search for people, places and things — Nagendram Home


### பரன்

அட பன்னாட ... வெட்கப்பட வேண்டியது பல்லைக் காட்டுது. பல்லைக் காட்ட வேண்டியது வெட்கப்படுது! என்னடா நடக்குது!!!



### சசி

எந்தவொரு பெண்ணாவது நீங்க கட்டின வேட்டி, சேட்டோட வாங்க நான் உங்களை கண் கலங்காமல் காப்பாற்றுவேன்னு சொன்ன சரித்திரம் இருக்கா?



### நதி




### ரேணு



பசியோடு இருப்பவர்களுக்கு உணவு கொடுத்துப்பார்... நீ இறந்த பின் காணும் சொர்க்கத்தை ஒரு நொடிப் பொழுதில் நீ காண முடியும்.

### சங்கர்

முதல்வர் பதவியைவிட ஆளுநர் பதவி ரொம்பப் பெருசா இருக்கும்.



போடி. இது முன்னாடியே தெரிந்திருந்தா "ஜெ" வுக்கு பதிலா ஆளுநரை போட்டுத்தள்ளி இருக்கலாம்.

### கயல்

டேய் இவனை ஏன்டா தூக்கிட்டு வந்தீங்க?



நீங்கதானே ஐயா குண்டர்களை அரெஸ்ட் பண்ணச் சொன்னீங்க...

நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஆசிரியர் சேவை; நெருக்கடிக்குத் தீர்வுகாண அமைச்சரவைப்பத்திரங்களுக்கு அங்கீகாரம்


## கல்வி அமைச்சர் காரியவசம் தகவல்

இலங்கை ஆசிரியர் சேவையுடன் தொடர்புடைய நெருக்கடிகளுக்கு தீர்வு காணபதற்கென சமர்ப்பிக்கப்பட்ட பல்வேறு அமைச்சரவைப் பத்திரங்களுக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதாக கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தன்னார்வ, ஒப்பந்த அடிப்படைகளில் பணியாற்றும் சிவில் பாதுகாப்புத் துறை அதிகாரிகளையும் ஆசிரியர் சேவையில் இணைத்துக் கொள்ள அங்கீகாரம் கிடைத்துள்ளது.

ஆசிரியர் ஆலோசனை சேவையை ஏற்படுத்துவதற்கான பிரமாணமும், விளையாட்டு மற்றும் ஆசிரியர்களின் வெற்றிடங்களை பூர்த்தி செய்ய 3868 விளையாட்டுப் பயிற்றுவிப்பாளர்களும் இணைத்துக் கொள்ளப்பட்டமை இதில் முக்கிய அம்சமாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-7)

# சட்டமா அதிபர் மீது படையினர் புகார்



சட்டமா அதிபர் பக்கச்சார்பாக செயற்பட்டு வருவதாக கூறி தாய்நாட்டுக்கான படையினர் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் ஓய்வுபெற்ற மேஜரான சட்டத்தரணி அஜித் பிரசன்ன உயர்நீதிமன்றத்தில் நேற்று முன்தினம் மனுவொன்றை தாக்கல் செய்துள்ளார்.

இந்த மனு தொடர்பான விசாரணைகளை மே மாதம 17 ஆம் திகதி நடத்துவதாக உயர்நீதிமன்ற நீதியரசர்கள் தெரிவித்தனர்.

அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுபபினர் பதவி வழங்கப்பட்டதை இரத்துச் செய்து உத்தரவிடுமாறு கோரி அஜித் பிரசன்ன தாக்கல் செய்துள்ள இந்த மனுவில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர், தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர், அமைச்சர் சரத் பொன்சேகா மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கடந்த பொதுத் தேர்தலில் வேறு ஒரு கட்சியில் போட்டியிட்டு தோல்வியடைந்த பொன்சேகாவை ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக நியமித்தமை மூலம் மக்களின் சுயாதிபத்தியத்திற்கு பங்கம் ஏற்பட்டுள்ளதாக அஜித் பிரசன்ன தனது மனுவில் தெரிவித்தார். (இ-7)

## மெமோ இயந்திரம் இறக்குமதி

மார்பகப் புற்றுநோய் தொடர்பில் பரிசோதனை செய்யும் மொபைல் மெமோ இயந்திரத்தை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்து, ஒவ்வொரு கிராமத்துக்கும் இலவசமாக வழங்குவதற்குத் தீர்மானித்துள்ளதாக, சபாநாயகர் கரு ஜயசூரிய தெரிவித்துள்ளார்.

நோயாளர்களுக்கு உதவுதற்கு, இலவசமாக நேரடி அழைப்பு இலக்கமான 011 - 236 3211 என்ற இலக்கத்தினூடாக பெற்றுக்கொள்ள முடியும் என்றும் எதிர்காலத்தில் குழந்தைகளுக்கான பாதுகாவலர்களை அமைக்கும் முகமாக பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வருவதாகவும் அவர் தெரிவித்தார். (இ-7)

## சிவப்புக்கோட்டையும் தாண்டிவிட்டோம்

"கொலன்னாவை, மீதோட்டமுல்லை குப்பைப் பிரச்சினை சம்பந்தமாக மகா சங்கத்தினரதும் பொது மக்களினதும் பொறுமை தற்போது எல்லை கடந்து விட்டது. பொறுமை காத்து இப்போது சிவப்புக் கோட்டையும் தாண்டி விட்டோம். பெப்ரவரி மாதத்தின் பின்கொழும்பின் குப்பைகளை இனி எந்த வகையிலும் கொலன்னாவையில் கொட்ட இடமளிக்கப் போவதில்லை" என்று கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

கொலன்னாவை குப்பைப் பிரச்சினை சம்பந்தமாக, மகாசங்கத்தினருடன் இணைந்து கொலன்னாவையில் நடத்திய விசேட ஊடகவியலாளர் மாநாட்டில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். (இ)

# வெளிநாட்டில் சிக்கிய ஆறு இலங்கையர்கள்

## நாடு கடத்துமாறு நீதிமன்றம் உத்தரவு

இலங்கையை சேர்ந்த ஆறு பேருக்கு ஐந்து ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளதாக டுபாய் ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த ஆறு இலங்கையர்கள் பெறுமதியான பொருட்களை கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டதையடுத்தே சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது. இந்த சம்பவம கடந்த 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி இடம் பெற்றுள்ளது.

ஆறு இலங்கையர்களும் 26 முதல் 40 வயதுக்கு உட்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைத் தண்டனை காலம் நிறைவடைந்த பின்னர் குறித்த ஆறு பேரையும் நாடு கடத்த வேண்டும் என்றும் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இலங்கையை சேர்ந்த சாரதி மற்றும் தொழிலாளர்களுக்கு இந்த தண்டனை வழங்கப்பட்டுள்ளதாக டுபாய் ஊடாக Khaleej Times செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# ஐ.எஸ். கொடூரம் தொடர்கிறது



இரண்டு சிறுவர்களை தற்கொலை தாக்குதலுக்கு உட்படுத்திய வீடியோவை ஐ.எஸ். தீவிரவாதிகள் வெளியிட்டு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளனர்.

இரண்டு சிறுவர்களுக்கு பயிற்சி அளித்து அவர்களை தற்கொலை தாக்குதலுக்கு உட்படுத்தியுள்ளனர். அந்த வீடியோவையும் வெளியிட்டுள்ளனர்.

அதில் இரண்டு சிறுவர்கள் முதலில் பயிற்சி செய்கிறார்கள், அதன் பின் கார் செலுத்தியும் பயிற்சி செய்கிறார்கள்.

இதைத் தொடர்ந்து ஒரு சிறுவன் ஈராக்கின் Sinjar பகுதியில் இருந்து பயங்கர வெடிபொருட்கள் நிரம்பிய வாகனத்தை தங்களுடைய எதிரிகள் இருக்கும் தெருவிற்கு ஓட்டிச் செல்கின்றான். அங்கு சென்றவுடன் கார் வெடித்துச் சிதறுகிறது. இதில் அச்சிறுவன் இறக்கிறான்.

இதே போன்று மற்றொரு சிறுவனும் அதே பகுதியில் உள்ள மற்றொரு தெருவில் காரை ஓட்டிச் செல்கிறான். குறித்த இடத்தைச் சென்றவுடன் கார் வெடிக்கிறது.

ஐ.எஸ்.தீவிரவாதிகள் சிறுவர்கள் தற்கொலை தாக்குதலுக்கு உட்படுத்துவது இது ஒன்றும் முதல் முறை இல்லை என்றும் கடந்த ஓகஸ்ட் மாதம் Baghdad பகுதியின் Kirkuk பகுதியில் சிறுவன் ஒருவனை அவர்கள் தற்கொலை படை தாக்குதலுக்கு உட்படுத்தியதாக கூறப்படுகிறது. (இ-12)

# சொகுசு விடுதியிலிருந்து என்னை காப்பாற்றுங்கள்

## கூவத்தூரிலிருந்து எம்.எல்.ஏ.கடிதம்

கூவத்தூர் சொகுசு விடுதியிலிருந்து என்னைக் காப்பாற்றுங்கள் என துண்டுச் சீட்டில் ஒரு எம்.எல்.ஏ. தமிழக ஆளுநருக்கு எழுதியுள்ள கடிதம் சமூக வலைத் தளங்களில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கூவத்தூர் சொகுசு விடுதியில் எம்.எல்.ஏக்கள் கட்டாயத்தின்பேரில் தங்க வைகக்கப்பட்டிருப்பதாகவும், அவர்களை விடுவித்து சுய விருப்பத்தின் அடிப்படையில் முடிவெடுக்கச் செய்ய வேண்டும் என்றும் ஓ.பன்னீர்செல்வம் வலியுறுத்தி வருகிறார். இந்நிலையில், தங்களை ரவுடிகள் அடித்து கொடுமைப்படுத்துவதாக, எம்.எல்.ஏ. ஒருவர் ஆளுநருக்கு எழுதியது போன்ற கடிதம் ஒன்று சமூக வலைத்தளத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

எம்.எல்.ஏக்கள் தங்கியிருக்கும் கோல்டன் பே விடுதி ரசீதில் எழுதப்பட்டு, அங்கு வேலை செய்யும் ஊழியர் வழியாக அனுப்பப்பட்டதாக கூறப்படுகிறது. ஆனால், கடிதத்தை யார் எழுதியது? என்ற விபரம் தெரியவில்லை

அந்தக் கடிதத்தில், "மரியாதைக்குரிய தமிழக ஆளுநர் ஐயா அவர்களே, நாங்கள் எம்.எல்.ஏக்கள் அனைவரும் இங்கு கூவத்தூரில் ரவுடிகளால் மிகவும் கொடுமைப்படுத்தப்படுகிறோம். டி.வி, செல், பேப்பர் என எதுவுமே கிடையாது, ரவுடிகள் அடிக்கடி அடித்து துன்புறுத்துகின்றனர். நேற்று ஒரு எம்.எல்.ஏ. நண்பரை அடித்ததில் வயிற்றுவலி, நெஞ்சுவலி ஏற்பட்டு உயிருக்கு போராடிக் கொண்டுள்ளார். எனவே ரவுடிகளிடமிருந்து எங்களை ஆளுநர் மீட்டு சொந்த ஊருக்கு அனு ப்பி வைக்கவும்" என எழுதப்பட்டுள்ளது.

இந்த கடிதம் இணையத்தில் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. ஆனால், கூவத்தூரில் உள்ள எம்.எல்.ஏக்கள், 'நாங்கள் யாரும் இதை எழுதவில்லை' எனக் கூறியுள்ளனர். (இ-12)

## பனையிலிருந்து தவறி விழுந்த தொழிலாளி பரிதாபமாக மரணம்

பனை மரத்தில் இருந்து தவறி வீழ்ந்த தொழிலாளி மரணமடைந்தார். நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை கொடிகாமம் கோயிலாமனை பகுதியில் தொழிலுக்காக பனை மரத்தில் ஏறியவர் தவறி வீழ்ந்ததில் படுகாயமடைந்தார்.

உடனே அவரை சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதித்தனர். அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அவர் சிகிச்சை பலனளிக்காமல் செவ்வாய்க்கிழமை இரவு உயிரிழந்தார். மந்துவில் கிழக்கை சேர்ந்த 57 வயதான வே.யோகராசா என்பவரே இவ்வாறு உயிரிழந்தவர் ஆவார்.

உயிரிழந்தவரின் சடலம் விசாரணைகளின் பின்னர் நேற்று மாலை உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. கொடிகாமம் பொலிஸார் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்று விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (இ-89)

# 104 செயற்கைக்கோள்களுடன் சீறிப்பாய்ந்த பிஎஸ்எல்வி சி.37

## இஸ்ரோ புதிய உலக சாதனை

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோவின் பிஎஸ்எல்வி சி-37 ராக்கெட் வெற்றிகரமாக விண்ணில் சீறிப் பாய்ந்தது. வரலாற்றில் முதல் முறையாக 104 செயற்கைக் கோள்களை சுமந்து சென்றது.

பிஎஸ்எல்வி - சி 37 ராக்கெட் 104 செயற்கைக் கோள்களுடன் விண்ணில் சீறிப் பாய்ந்தது. ஒரே நேரத்தில் 104 செயற்கைக் கோள்களை விண்ணில் வெற்றிகரமாக செலுத்தப்பட்டுள்ளதன் மூலம், ரஷ்யாவின் சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது.


இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனமான இஸ்ரோ செயற்கைக் கோள்கள் மற்றும் அவற்றை விண்ணில் செலுத்தப் ப்யன்படும் ராக்கெட்களையும் தயாரித்து வருகிறது. உள்நாட்டு செயற்கைக் கோள்கள் மட்டுமல்லாமல் வெளிநாடுகளின் செயற்கைக் கோள்களையும் வர்த்தக நோக்கில் இஸ்ரோ விண்ணில் செலுத்தி வருகிறது.

பிஎஸ்எல்வி - சி37 ராக்கெட் மூலம் 104 செயற்கைக் கோள்கள் ஆந்திர மாநிலம் ஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் முதலாவது ஏவுதளத்தில் இருந்து நேற்று புதன்கிழமை காலை 9.28 மணிக்கு விண்ணில் செலுத்தப்பட்டது. இதற்கான 48 மணி நேர கவுண்ட்டவுன் திங்கட்கிழமை காலை 9.28 மணிக்கு தொடங்கப்பட்டது.

இந்தியாவின் கார்டோசாட்-2 செயற்கைக்கோள், ஐஎன்எஸ்-1ஏ, ஐஎன்எஸ் 1-பி என 2 நானோ செயற்கைக் கோள்கள், இஸ்ரேல், கஜகஸதான், நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய நாடுகளுக்குச் சொந்தமான 5 நானோ செயற்கைக்கோள், அமெரிக்காவின் 96 நானோ செயற்கைக கோள்கள் என மொத்தம் 104 செயற்கைக் கோள்களை பிஎஸ்எல்வி ராக்கெட் சுமந்து செல்கிறது.

கார்டோசாட்-2 செயற்கைக்கோளின் எடை 714 கிலோ ஆகும். ஒவ்வொரு நானோ செயற்கைக்கோளும் 5 முதல் 10 கிலோ வரை எடை கொண்டுள்ளது. இந்த செயற்கைக்கோள்கள் அனைத்தும் பூமியில் இருநது 505 கி.மீ. தொலைவில் புவி சுற்றுவட்டப் பாதையில் நிலை நிறுத்தப்பட இருக்கிறது.

கார்டோசாட்-2 செயற்கைக்கோள் அனுப்பும் புகைப் படங்கள் படப்பயன்பாடு, நகர்ப்புற, ஊரகப் பகுதிகளின் பயன்பாடு, கடலோரப் பகுதி பயன்பாடு, சாலை இணைப்பு கண்காணிப்பு, நீர்விநியோகம், தரை பயன்பாட்டு வரைபடங்கள் உள்ளிட்டவற்றுக்கும் புவியியல் சார்ந்த அம்சங்களில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டறிவதற்கும் உதவிகரமாகவும், சிறப்புக்குரியதாகவும் இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.



முன்னதாக ஒரே நேரத்தில 20 செயற்கைக் கோள்களை விண்ணில் செலுத்தியது தான் அதிகபட்சமாக இருந்தது. ஒரே நேரத்தில் 104 செயற்கைக் கோள்கள் விண்ணில் செலுத்தப்பட்டது இஸ்ரோ வரலாற்றில் முதல்முறை ஆகும். இந்தியா தவிர அதிகபட்சமாக 37 செயற்கைக் கோள்களை ரஷ்யா ஏவியது தான் உலக சாதனையாக இருந்தது.

தற்போது 104 செயற்கைக் கோள்களை இஸ்ரோ விண்ணில் வெற்றிகரமாக செலுத்துவதன் மூலம், ரஷ்யாவின் சாதனை முறியடிக்கப்பட்டுள்ளது. இது புதிய உலக சாதனையாக அமைந்துள்ளது. (இ-12)

# சவுதியில் பெண்களுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கம்

## இளவரசி அதிரடி அறிவிப்பு

சவுதி அரேபியா பெண்கள் இனி தங்கள் எடையை குறைத்துக் கொள்வதற்கு உடற்பயிற்சி நிலையத்திற்கு சென்று பயிற்சி செய்து கொள்ளலாம் என்று இளவரசி ரீமா பின்ட் பண்டர் அதிரடியாக தெரிவித்துள்ளார்.

சவுதி அரேபியாவில் பெண்களுக்கு பல கட்டுப்பாடுகள் மற்றும் கொள்கைகள் உள்ளன. இதைத்தான் அவரகள் பின்பற்ற வேண்டும். மீறினால் கடுமையான தண்டனை விதிக்கப்படும்.

இந்நிலையில் பெண்களுக்கான கொள்கையில் சிறிய மாற்றம் ஒன்று செய்யப்பட்டுள்ளதாக பெண்கள் விவகார துணைத்தலைவரும், இளவரசியுமான Reema bint Bandar ஒரு அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

அதில், சவுதி அரேபியா பெண்கள் தங்கள் உடல் எடைகளை குறைத்து கொள்வதற்கு உடற்பயிற்சி நிலையத்திற்கு செல்லலாம், அங்கு அவர்கள் நீச்சல் செய்து கொள்ளலாம், ஓட்டப் பயிற்சி செய்து கொள்ளலாம். மற்றும உடற் பயிற்சிகளையும் செய்து கொள்ளலாம் என்று கூறப்பட்டுள்ளது. ஆனால் அப்பயிற்சியின் போது அங்கு ஆண்கள் யாரும் இருக்கக் கூடாது என்ற கட்டுப்பாடும் விதிக்கப்பட்டுள்ளது.

பெண்களுக்கான இந்த கொள்கை மாற்றம் இந்த வாரத்திற்குள் வரும் என்று கூறப்பட்டுள்ளது. இது தொடர்பாக புதிய உடற்பயிற்சி நிலையங்கள் திறப்பதற்கான உரிமங்கள் இந்த மாத இறுதியில் வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளது.



மேலும் பெண்கள் ஆரோக்கியமுடன் வாழவேண்டும் என்பதற்காகவே இந்த முடிவை எடுத்துள்ளதாக கூறப்படுகிறது. இதில் மட்டுமே பெண்களுக்கு தடை நீக்கப்பட்டுள்ளதே தவிர கரப்பந்து, கூடைப் பந்து மற்றும் கால்பந்து போன்ற விளையாட்டுகளுக்கு பெண்களுக்கு மீதான தடை அப்படியே உள்ளது எனவும் தெரிவித்துள்ளது. (இ-12)

# நூறு அமெரிக்க இராணுவக் கப்பல்களை பராமரிக்கும் பணியில் அம்பானி நிறுவனம்

நூறு அமெரிக்க இராணுவ கப்பல்களை பராமரிக்கும் பணிக்கு அம்பானி நிறுவனத்துடன் ஒப்பந்தம் கையெழுத்தாகியுள்ளது.

அனில் அம்பானியின் ரிலையன்ஸ் பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்ப பிரிவு அமெரிக்கக் கடற்படையைச் சேர்ந்த 7 ஆவது பிளீட்டில் உள்ள 100 கப்பல்களுக்கு ரிப்பேர் மற்றும் திருத்தியமைக்கும் பணியை மேற்கொள்கிறது.

அதற்கான ஒப்பந்தம் கடந்த 2016 ஆம் ஆண்டு கையெழுத்தானது. இக்கப்பல்கள் இந்து மகா கடல் பகுதியில் இயங்கக் கூடியவை. அவற்றை குஜராத்தில் உள்ள பிபாவாவ் கப்பல் தளத்துக்கு கொண்டு வந்து ரிப்பேர் மற்றும் திருத்தியமைக்கும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.



இந்தப் பணியை ரிலையன்ஸ் நிறுவனத்துக்கு வழங்க அமெரிக்க அரசு பிரதிநிதிகள் மிக விரிவான கருத்துக்கணிப்பு நடத்தினர்.

முடிவில் உலக தரம் வாய்ந்த அதிநவீன தொழில் நுட்ப வசதிகள் இருப்பதை உறுதி செய்து அதற்கான பணி வழங்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அமெரிக்க இராணுவத்துடன் இந்திய நிறுவனம் முதல் காண்டிராக்ட் (ஒப்பந்தம்) நேற்று முன்தினம் கையெழுத்தாகியிருப்பது குறிப்பிடத்தக்கது. (இ)

# வட கொரிய ஜனாதிபதி ஜாங் உன்னின் சகோதரன் மலேசியாவில் கொலை

(கோலாலம்பூர்)

வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் - உன்னின் சகோதரன் மலேசியாவில் கொலை செய்யப்பட்டுள்ளதாக தென்கொரியா உறுதிப்படுத்தியுள்ளது.

மலேசிய தலைநகர் கோலாலம்பூர் விமான நிலையத்தில் கடந்த திங்கட்கிழமை விஷ ஊசி தாக்குதலுக்கு இலக்காகி அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த தாக்குதலுக்கான காரணம் தெளிவாக குறிப்பிடப்படவில்லை என்பதுடன் தாக்குதல்தாரிகளும் அடையாளம் காணப்படவில்லை.

இவ்வாறிருக்க இந்த தாக்குதலின் பின்னணியில் வட கொரியா இருப்பதாக தென் கொரிய அரச தரப்பில் நம்பப்படுகின்றது.

மேலும், இந்த சம்பவம் வடகொரியாவின் மிருகத்தனமான மற்றும் மனிதாபிமானமற்ற கொடூர ஆட்சிக்கு அடையாளமாக இருக்க முடியும் என்று தென்கொரிய இடைக்கால ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (இ-12)



# 2 இலட்சம் பேர் வெளியேற்றம்

அமெரிக்காவில் இந்தியர்கள் அதிகம் வசிக்கும் கலிபோர்னியா மாகாணத்தில் முக்கிய அணை உடைந்துவிழும அபாயத்தில் இருப்பதால், அதன் அருகே வசிக்கும் சுமார் 2 இலட்சம் பேர் பாதுகாப்புக்கான இடத்துக்கு அப்புறப்படுத்தப்பட்டுள்ளனர். (இ-12)






# ஒரு அடியில் இருநூறு பேர்

...அரசே என் வீரத்திற்கு இதைப் போன்ற பெரிய வேலையைத்தான் எதிர்பார்த்தேன். நான் அந்தப் பூதத்தின் தலையைக் கொண்டு வருகிறேன். எனக்கு இளவரசியைத் திருமணம் செய்து வைப்பீர்களா? என்று கேட்டான் அவன்.

யாராலும் செய்ய இயலாத செயல் இது. நீ சொன்னபடி செய்து முடித்தால் இளவரசியை உனக்குத் திருமணம் செய்து வைக்கிறேன், என்றான் அரசன்.

நான் அந்தப் பூதத்தைக் கொன்றுவிட்டு வருகிறேன், என்று சொல்லி விட்டுக் கையில பிடித்த வாளுடன் காட்டிற்குள் நுழைந்தான் அவன்.

எவ்வளவு பெரிய கூர்மையான வாளும் பூதத்தை ஒன்றும் செய்ய முடியாது. எவ்வளவு வேகமாக வலிமையாக வெட்டினாலும் அதற்குச் சிறு காயம்தான் ஏற்படும். என்பதும் அவனுக்குப் புரிந்தது.

தன் கையில் இருந்த வெண்ணெயை மாவில் உருட்டிப் பந்து போலச் செய்து கொண்டான் அவன். பார்ப்பதற்கு அது உருண்டையான கூழாங்கல் போல இருந்தது. அதைத் தன் சட்டைப் பைக்குள் வைத்துக் கொண்டான்.

குருவி ஒன்றைப் பிடித்த அவன் அதையும் தன் பைக்குள் வைத்துக் கொண்டான்.

அருகே இருந்த பெரிய மரம் ஒன்றில் ஏறி அமர்ந்து கொண்டான்.

சிறிது நேரத்தில் பெரிய பூதம் ஒன்று அங்கே வந்தது. மூக்கை உறிஞ்சிய அது, இன்று எனக்கு நல்ல வேட்டை, மனித வாடை வீசுகிறதே! எங்கே இருக்கிறாய்? என்னிடம் இருந்து தப்ப முடியாது, என்று மகிழ்ச்சியுடன் கத்தியது.

தன் நடுக்கத்தை மறைத்துக் கொண்ட அவன், ஏ! பூதமே! என்னையா தேடுகிறாய்? நான் இந்த மரத்தை விட்டுக் கீழே இறங்கினால் என்ன நடக்கும் தெரியுமா? இந்த உலகத்திலேயே நான்தான் வலிமையானவன். சென்ற வாரம் கூட ஒரே அடியில் இருநூறு பேரை கொன்று முந்நூறு பேரைக் காயப் படுத்தினேன். உன்னைவிட நான் வலிமையானவன். என் ஒரு அடியைக் கூட நீ தாங்க மாட்டாய், என்று பெருமை பேசினான் அவன்.

(தொடரும்...)



## 02.2017 16 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1568 - நெதர்லாந்தின் அனைத்து மக்களுக்கும் ரோமன் கத்தோலிக்கத் திருச்சபையினரால் மரண தண்டனை விதிக்கப்பட்டது.
- 1646 - இங்கிலாந்தின் முதலாவது உள்நாட்டுப் போரின் கடைசிச் சமர் டெவன் நகரில் இடம்பெற்றது.
- 1796 - ஆங்கிலேயர் கொழும்பை டச்சுக்களிடம் இருந்து கைப்பற்றினர்.
- 1838 - தென்னாபிரிக்காவில் நாட்டல் என்னுமிடத்தில் சூலு இனத்தவரால் வூட்ரெக்கர்கள் எனப்படும் பிரித்தானிய குடியேறிகள் 300 பேர் வரையில் (பெண்கள், குழந்தைகள் உட்பட) படுகொலை செய்யப்பட்டனர்.
- 1918 - லித்துவேனியா ரஷ்யாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.
- 1934 - ஆஸ்திரியாவில் உள்நாட்டுப் போர் முடிவுக்கு வந்தது.
- 1937 - வொலஸ் கரோத்தேர்ஸ் நைலோனுக்கான காப்புரிமம் பெற்றார்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய அமெரிக்காவின் படைகள் பிலிப்பீன்சின் கொரெகிடோர் தீவில் தரையிறங்கினர்.
- 1945 - இரண்டாம் உலகப் போர்: முதல் தடவையாக அமெரிக்கப் போர் விமானம் டோக்கியோவைத் தாக்கியது.
- 1945 - அமெரிக்கப் படைகள் பிலிப்பீன்சின் பட்டான் குடாவை மீளக் கைப்பற்றினர்.
- 1947 - 80 ஆண்டுகளாக பிரித்தானியர்களாக இருந்த கனேடியர்கள் முதற்தடவையாக கனேடிய குடியுரிமையைப் பெற்றனர். பிரதமர் வில்லியம் லியோன் மக்கென்சி முதலாவது குடியுரிமையைப் பெற்றார்.
- 1959 - ஜனவரி 1 இல் புல்ஜென்சியோ பட்டிஸ்டாவை ஜனாதிபதி பதவியில் இருந்து அகற்றிய பிடல் காஸ்ட்ரோ கியூபாவின் புதிய தலைவரானார்.
- 1961 - எக்ஸ்புளோரர் 9 (S-56a) விண்ணுக்கு ஏவப்பட்டது.
- 1983 - ஆஸ்திரேலியாவின் விக்டோரியா மற்றும் தெற்கு ஆஸ்திரேலியா மாநிலங்களில் இடம்பெற்ற காட்டுத்தீயில் சிக்கி 71 பேர் கொல்லப்பட்டனர்.
- 1985 - ஹெஸ்புல்லா தீவிரவாத இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1986 - சோவியத் கப்பல் மிகைல் லெர்மொண்டொவ் நியூசிலாந்தில் மூழ்கியது.
- 1988 - சிங்களத் திரைப்பட நடிகர், அரசியல்வாதி விஜய குமாரதுங்க கொழும்பில் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.
- 2005 - கியோட்டோ உடன்பாடு நடைமுறைக்கு வந்தது.
- 2007: 2000 ஆம் ஆண்டில் தர்மபுரி பேருந்து தீவைப்பு நிகழ்வில் மூன்று மாணவிகளை உயிருடன் எரித்துக் கொலை செய்த அ.தி.மு.க.வினர் மூவருக்கு தூக்குத்தண்டனையும் மேலும் 25 பேருக்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் வழங்கித் தீர்ப்பளிக்கப்பட்டது.

### பிறப்புகள்

- 1834 - ஏர்ன்ஸ்ட் ஹேக்கல், செருமானிய உயிரியலாளர், மெய்யியலாளர் . (இ. 1919)
- 1909 - மு. நவரத்தினசாமி, பாக்குநீரிணையை நீந்திக் கடந்தவர். (இ. 1939)
- 1934 - தெளிவத்தை ஜோசப், ஈழத்து எழுத்தாளர்.
- 1941 - கிம் ஜொங்-இல், வட கொரிய தலைவர். (இ. 2011)
- 1978 - வசீம் ஜாஃபர், இந்தியத் துடுப்பாளர்.

### இறப்புகள்.

- 1656 - தத்துவ போதக சுவாமிகள் (றொபேட் டி நொபிலி), கத்தோலிக்கக் குரு, தமிழ்நாட்டில் சமயப்பணி ஆற்றியவர். (பி. 1577)
- 1835 - வீ. இராமலிங்கம், ஈழத்துப் புலவர்.
- 1944 - தாதாசாகெப் பால்கே, இந்தியத் திரைப்பட இயக்குனர், தயாரிப்பாளர் . (பி. 1870)
- 1954 - டி. கே. சிதம்பரநாத முதலியார், தமிழக எழுத்தாளர் . (பி. 1882)
- 1988 - விஜய குமாரதுங்க, சிங்களத் திரைப்பட நடிகர், அரசியல்வாதி. (பி. 1945)
- 1990 - கெய்த் ஹேறிங், அமெரிக்க ஓவியர். (பி. 1958)

### சிறப்பு நாள்

- லித்துவேனியா - விடுதலை நாள். (1918)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | நெல்லியடி ரூபா | கொடிகாமம் ரூபா | சுன்னாகம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா | மருதனார்மடம் ரூபா |
|---|---|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 100 | 160 | 70 | 120 | 120 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 140 | 100 | 100 | 100 | 120 | 100 |
| பச்சைமிளகாய் | 200 | 200 | 180 | 240 | 200 | 300 | 200 |
| தக்காளி | 50 | 100 | 70 | 50 | 80 | 80 | 70 |
| மரவள்ளிக்கிழங்கு | 50 | 100 | 60 | 60 | 70 | 60 | 60 |
| கோவா | 20 | 100 | 15 | 25 | 50 | 60 | 40 |
| கரட் | 30 | 100 | 80 | 60 | 60 | 120 | 50 |
| பூசணி | 50 | 50 | 50 | 60 | 60 | 80 | 60 |
| புடோல் | 50 | 80 | 80 | 60 | 80 | 60 | 70 |
| வாழைக்காய் | 60 | 80 | 60 | 50 | 80 | 80 | 70 |
| சின்ன வெங்காயம் | 100 | 160 | 120 | 120 | 100 | 120 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 120 | 100 | 100 | 100 | 100 | 100 |
| பாகற்காய் | 100 | 200 | 160 | 200 | 200 | 300 | 160 |
| வெண்டிக்காய் | 120 | 150 | 200 | 120 | 140 | 120 | 180 |
| கருணைக்கிழங்கு | 50 | 100 | 80 | 60 | 60 | 80 | 60 |
| பயற்றங்காய் | 100 | 100 | 70 | 120 | 200 | 120 | 120 |
| லீக்ஸ் | 50 | 100 | 160 | 80 | 60 | 80 | 60 |
| பீற்றூட் | 30 | 100 | 60 | 40 | 60 | 80 | 80 |
| கறிமிளகாய் | 250 | 200 | 120 | 140 | 150 | 240 | 160 |
| முருங்கைக்காய் | 600 | 600 | 500 | 600 | 600 | 800 | 600 |
| போஞ்சி | 120 | 100 | 80 | 120 | 120 | 80 | 100 |
| [illegible] | 80 | 100 | 60 | 100 | 200 | 100 | 100 |
| கீரை - 1பிடி | 30 | 50 | 80 | 30 | 20 | 30 | 25 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 120 | 160 | 120 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 60 | 60 | 30 | 60 | 60 | 55-60 | 50 |
| இராசவள்ளி | 200 | 100 | 200 | 150 | — | 200 | 180 |
| வெங்காயப்பூ | 80 | 50 | 60 | 50 | 60 | 100 | 40 |
| முள்ளங்கி | 40 | 100 | 60 | 60 | 50 | 80 | 70 |
| பொன்னாங்காணி | 40 | 50 | 30 | 30 | 30 | 20 | 30 |
| வல்லாரை | 15 | 20 | 20 | 20 | 20 | 20 | 20 |
| ஈரப்பலா | 80 | 60 | 60 | 60 | 60 | [illegible] | 60 |

பூனை கறுப்போ சிவப்போ
எலி பிடித்தால் சரி

– சீனப்பழமொழி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஜெனிவாவுக்கு செல்ல வேண்டும்

ஈழத் தமிழர்கள் தொடர்பில் சர்வதேசத்தின் கவனத்தை ஈர்ப்புச் செய்வதற்கான இறுதிச் சந்தர்ப்பம் இப்போது நிலவுகிறது.

எதிர்வரும் மார்ச் மாதம் ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தின் கூட்டத்தொடர் ஜெனிவாவில் ஆரம்பிக்கவுள்ளது.

2009ஆம் ஆண்டு நடந்த இறுதியுத்தத்தின் பின்னர் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட இழப்புகள், அழிவுகள் தொடர்பில் சர்வதேச சமூகம் கவனம் செலுத்தியிருந்தது.

வன்னி யுத்தம் தமிழின அழிப்பு என்பதை ஏற்றுக் கொள்ளக்கூடியதான சான்றுகள் மனித உரிமை அமைப்புகளாலும் சர்வதேச மன்னிப்புச்சபையாலும் முன்வைக்கப்பட்டன.

இவையாவற்றுக்கும் மேலாக சனல் – 4 ஊடகம் வன்னியில் நடந்த மனித வதையை மிகத்துல்லியமாக ஆவணப்படுத்தி வெளியிட்டது.

சுருங்கக்கூறின் சனல் – 4 வெளியிட்ட வன்னிப்போர் அவலங்கள் உலக நாடுகளை உலுக்கின. இலங்கையில் இப்படியொரு கொடுமையா? என்று சர்வதேச சமூகத்தை ஏங்க வைத்தது.

சனல் – 4 வெளியிட்ட ஆவணப்படங்கள் ஆதாரபூர்வமானவை என்று ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில், இலங்கை மீது சர்வதேச போர்க்குற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகள் வலுவடைந்தன. இது தொடர்பில் ஐ.நா மனிதவுரிமைகள் ஆணையகத்தின் கூட்டத்தொடரில் பிரஸ்தாபிக்கப்பட்டதுடன் போர்க்குற்றம் தொடர்பிலான விசாரணையை மேற்கொள்வதற்கான பரிந்துரைகளும் கால அவகாசங்களும் இலங்கை அரசுக்கு வழங்கப்பட்டன.

இருந்தும் கால அவகாசத்தை கோருவதில் இலங்கையின் ஆட்சியாளர்கள் கவனம் செலுத்தினரேயன்றி, ஜெனிவாக் கூட்டத்தொடரின் தீர்மானங்களை அமுல்படுத்துவதில் இம்மியும் கரிசனை கொண்டில.

இது ஒருபுறம் இருக்க, ஜெனிவாக் கூட்டத்தொடரில் பங்கேற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கொழும்புத் தலைமை தமிழர்களுக்கு எதிராகக் கதைப்பதிலும் செயற்படுவதிலும் கரிசனை காட்டிற்று. இஃது எங்கள் மீதான சர்வதேச சமூகத்தின் கவனத்தை கலைப்புச் செய்தது.

இந்நிலைமை யானது எங்களுக்குக்கிடைக்க வேண்டிய நீதியும், நியாயமும், தீர்வும் ஜெனிவாக் கூட்டத்தொடரில் கருக்கலைந்து போகச்செய்யப்படுகிறது. இந்நிலையில்

அடுத்தமாதம் ஜெனிவாவில் இடம் பெறும் ஐ.நா மனிதவுரிமைகள் கூட்டத்தொடரில் வடக்கு மாகாணத்தின முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் பங்கேற்று தமிழ்மக்களின் அவலத்தை எடுத்துரைக்க வேண்டும்.

இதைச் செய்வதற்கு முதலமைச்சருக்கு வடக்கு மாகாண அரசு எல்லையிடுவதாக இருக்கலாம் என்பதால்,

இன்று வடக்கு – கிழக்கு தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவை கொண்டுள்ள தமிழ் மக்கள் பேரவையின் இணைத்தலைவர் என்ற அடிப்படையில் வடக்கின் முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் அவர்கள் ஜெனிவா கூட்டத்தொடரில் கலந்துகொண்டு இலங்கை அரசுக்கு வழங்கப்படும் கால அவகாசத்தை தவிர்க்குமாறும் ஈழத்தமிழ் மக்களுக்கு நீதிகிடைக்கச் செய்யுமாறும் வலியுறுத்த வேண்டும்.

# சாயி மனித மேம்பாட்டுக் கல்விமுறைக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

சத்தியசாயி கல்வி நிறுவனம் நடத்தும் மனித உன்னதத்தை நோக்கிய சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்விமுறைக் கண்காட்சி எதிர்வரும் 19ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 21ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணி முதல் 4 மணி வரை யாழ். வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது.

முதலாம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக டாக்டர் வி.ஜெகநாதன், சிறப்பு விருந்தினர்களாக சத்தியசாயி சர்வதேச நிறுவன மத்திய சபையின் தலைவர் விக்கினராசா மனோகரன், வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் அதிபர் திருமதி எஸ்.பாலராணி ஸ்ரீதரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

2ஆம் நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ஆர்.இரவீந்திரன், சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலயக் கல்வி பணிப்பாளர் எஸ்.புஸ்பலிங்கம், சத்திய சாயி சர்வதேச நிறுவன தேசிய கல்வி அமைப்பாளர் என்.புகேந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மேலும் இறுதி நாள் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். வலயக் கல்வி பணிப்பாளர் என்.தெய்வேந்திரராசா, சிறப்பு விருந்தினராக கரவெட்டி கோட்டக்கல்வி அலுவலர் கே.கே. யோகநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# வயிற்றுக்குள் பஞ்சு வைத்த வைத்தியர் 10கோடி ரூபாய் நட்டஈடு கோரும் தாய்

வயிற்றுக்குள் பஞ்சை வைத்து தைத்து அறுவை சிகிச்சை மேற்கொண்ட மகப்பேற்று விசேட நிபுணத்துவ வைத்தியர் ஒருவரிடம், இரண்டு பிள்ளைகளின் தாய் 10 கோடி ரூபாய் நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

கொழும்பு மாவட்ட நீதிமன்றில் நேற்று முன்தினம் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மகப்பேற்றுக்காக கொழும்பின் பிரபல தனியார் வைத்தியசாலை ஒன்றில் சிகிச்சை பெற்றுக் கொண்ட எம்.சீ.ரீ.டி பெரேரா என்ற 23 வயதான இரண்டு பிள்ளைகளின் தாயே சட்டத்தரணியின் ஊடாக வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

சிசேரியன் அறுவை சிகிச்சை மூலம் இரண்டாவது குழந்தையை ஈன்றெடுத்த குறித்த தாய், கடந்த சில மாதங்களாக கடுமையான வயிற்றுவலி உள்ளிட்ட நோய்களினால் பாதிக்கப்பட்டிருந்தார்.

அறுவைச்சிகிச்சையின் பின்னர் குறித்த பெண் வயிற்று வலி குறித்து வைத்தியரிடம் கூறிய போதிலும் உரிய பரிசோதனை எதனையும் செய்யாது வலி நிவாரணிகளை மட்டும் வழங்கி வீட்டிற்கு அனுப்பி வைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

சில மாதங்களாக வயிற்று வலி மற்றும் ஏனைய உடல் உபாதைகளினால் அவதியுற்ற குறித்த பெண், வேறு ஓர் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்ட போது, அறுவைச் சிகிச்சையில் ஒரு தொகுதி பஞ்சை வயிற்றுக்குள் வைத்து தைத்துள்ளமை கண்டறியப்பட்டது.

கடந்த 2016ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 3ஆம் திகதி குறித்த சிசேரியன் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குடலின் ஒரு பகுதியையும் வெட்டி அகற்ற நேரிட்டதாகவும், சில மாதங்களாக தாய்ப்பால் ஊட்ட முடியாத நிலைமை ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமை காரணமாக பெருமளவு செலவிட நேரிட்டதாகவும் உடல் உளரீதியாக பாதிப்புக்களை எதிர்நோக்க நேரிட்டதாகவும் குறித்த பெண் மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார். இதற்காக தமக்கு பத்து கோடி ரூபாய் நட்டஈடு கோரி இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளார். (இ-7)

# இன்றைய போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் நடத்தும் Northern Challengers உதை பந்தாட்ட போட்டியில் இன்று வியாழக்கிழமை இரவு 7மணிக்கு மின்னொளியில் நடைபெறும் போட்டியில் குருநகர் பாடும்மீன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மன்னார் விடத்தல் தீவு விளையாட்டுக் கழகமும் தொடர்ந்து இரவு 8 மணிக்கு நடைபெறும் போட்டியில் இளவாலை பங்ஹென்றில் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மன்னார் ஜோசப்வாஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது.(கு)

# சாஸ்திரங்கள்

✦ சிங்கம், புலி, கரடி ஆகிய கொடிய மிருகங்களின் பொம்மைகளும் எதிரிகளிடமிருந்து உங்களைக் காப்பாற்றும். இந்தப் பொம்மைகளை வீட்டிற்குள் வைத்துக் கொண்டால் எதிரிகளிடமிருந்து காப்பாற்றப்படுவீர்கள்.

-ஓவிய சாஸ்திரம்

✦ வளர்பிறையில் சந்திரனை சாட்சியாக வைத்து நள்ளிரவுக் காலங்களில் செய்யப்படும் திருமணம் உத்தமமானதாகும். ஜோதிட சாஸ்திரத்தை வகுத்த 18 சித்தர்கள் சந்திர சித்தாந்தத்தைப் பின்பற்றியே கணக்கீடு செய்தனர். பூமியைச் சுற்றி சந்திரனின் ஆதிக்கமே அதிகம் உள்ளது. பூமியைச் சுற்றியுள்ள சந்திரப் பகுதிக்குப் பின் சூரியப் பகுதியுள்ளது. சந்திரன் உலகத்தின் தாய். இரவுக்கு அதிபதி சந்திரன். பகலுக்கு அதிபதி சூரியன். ஆகவே சந்திரன் ஆட்சி செய்யும் காலமான இரவில் திருமணம் செய்வது உத்தமம்.

-ஜோதிட கணிதாமிர்தம்

✦ சித்திரகுப்தர்- சித்திரை பௌர்ணமியன்று அவதரித்தவர். உமாதேவியை ஆச்சரியத்தில் ஆழ்த்துவதற்க வேண்டுமென்ற எண்ணத்தில் சிவபெருமானால் வடிக்கப்பட்ட ஓர் ஓவியம் உயிர் பெற்று எழுந்தது. சித்திரத்திலிருந்து உயிர்பெற்ற அவரே சித்திரகுப்தன் ஆனார்.

-சித்திரகுப்தர் புராணம்

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று வியாழக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 6.30 மணிவரை யாழ்.பிரதேசத்தில நாச்சிமார் கோவிலடி, இலந்தைக் காடு, கொற்றாவத்தை, பொலிகண்டி ஆலடி, நெடியகாடு ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில தெற்கிலுப்பைக் குளம் கிராமத்திலும் மன்னார் பிரதேசத்தில் நானாட்டானிலிருந்து அச்சங்குளம் வரை, நானாட்டானிலிருந்து வங்காலை வரை, வங்காலை கடற்படை முகாம், வங்காலை நீர்ப்பாசனத் திணைக்களம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# அன்றாட வாழ்வில் ஐஸ்வர்யம் அதிகரிப்பதற்கான ஆசாரங்கள்

**ஓய்வு உடலுக்கு அவசியமா?**




உடற்பயிற்சியைப்போலவே ஓய்வும் நமக்கு மிக அவசியமாகும். சிறிது நேரம் நடந்த பின்பு சிறிது ஓய் வெடுப்பது நல்லது. வியர்வையைப் போக்கிய பின்பே வேறு வேலைகள் செய்ய வேண்டும். ஓய்விற்குப் பின்னரே குளிப்பது, உணவருந்துவது, உறங்குவது போன்ற செயல்களைச் செய்திடல் வேண்டும்.

மனிதனின் வளர்ச்சிக்கு எளிமையான உணவு எளிமையான உடற்பயிற்சி, மிதமான உழைப்பு, மிதமானஓய்வுஆகியவை இன்றியமையாததாகும்.(தொடரும்)

# சத்திய தரிசனம்



## பெற்றோர், ஆசிரியர் கடமை


❖ உடல் பஞ்சபூதங்களால் ஆனது. இன்றோ, நாளையோ நிச்சயம் அழியப் போகிறது. ஆனால், உடலுக்குள் இருக்கும் ஆத்மா என்றும் நிலையானதாக இருக்கிறது. ஆகவே, ஆன்மாவின் மீது மட்டும் விருப்பம் கொள்ளுங்கள். அதைவிடுத்து உடல் மீது ஆசைப்படுவது எந்த பயனையும் தராது. மனிதன் தனது நேரத்தை உண்பதிலும், உறங்குவதிலும் மற்றும் விலங்குகள், பறவைகள் போல புணர்வதிலும் கழித்து வருவது சரியானதா என எவரும் அறிந்து கொண்டதாக தெரியவில்லை.

❖ இறைவனது சிந்தனையிலேயே, வாழ்வின் ஒவ்வொரு நொடியினையும் புனிதமாக்கிக் கொள்ள வேண்டும். இதையே, பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு சொல்லிக் கொடுக்க வேண்டும். நம்பிக்கை உள்ளவன் மனிதன். நம்பிக்கை இல்லாவிட்டால் ஒருகணம் கூட நம்மால் உயிர்வாழ முடியாது.

❖ செயல் எதுவானாலும் நம்பிக்கையோடு செய்தால்தான் அதில் முழு வெற்றி பெற இயலும். கடவுள் இருக்கிறார் என்ற முழு நம்பிக்கையோடு வழிபாடு செய்பவன் இறைவனை நிச்சயம் அடைவான். இன்றைய ஆசிரியர்கள், புத்தகத்தில் டுக்கப்பட்டிருப்பவைகளையே மாணவர்களுக்கு எடுத்துக்கூறுகின்றனர். மாணவர்களுக்கும் அத்தகைய அறிவில்தான் நாட்டம் உள்ளது. ஆசிரியர்கள் பள்ளிப்பாடங்களுடன் புனிதமான விடயங்களையும் மாணவர்களுக்கு போதிக்க வேண்டும்.

# மகாஜனா - ஸ்கந்தவரோதயா மோதும் வீரர்களின் கிரிக்கெட் போர் நாளை ஆரம்பம்





தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும் சுன்னாகம் ஸ்கந் தவரோதயாக் கல்லூரிக்கும் இடையிலான வீரர்களின் போர் என அழைக்கப்படும் கிரிக்கெட் போட்டி நாளை வெள்ளிக் கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து இரண்டு நாட்கள் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் போட்டி காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும்.

நண்பர்களின் போர் என வர்ணிக்கப்படும் இருபது -20 கிரிக்கெட் போட்டி எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஒரு மணியளவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு)

## பருத்தித்துறை பிரதேச செயலக உதைபந்தாட்டம் அரையிறுதியில் பருத்தித்துறை ஐக்கியம்



பருத்தித்துறை பிரதேச செயலக உதைபந்தாட்ட போட்டிகளில் கடந்த 12 ஆம் திகதி அன்று காலை முதல் போட்டிகள் அல்வாய் நண்பர்கள், மனோகரா விளையாட்டு மைதானங்களில் இடம்பெற்றன.

பருத்தித்துறை ஐக்கிய அணி முதலாவது போட்டியில் அல்வாய் நண்பர்கள் வி.கழக அணியை அவர்களின் சொந்த மைதானத்தில் எதிர்த்து விளையாடியது.

இரு அணிகளும் பலமான அணிகள் என்பதால் போட்டி விறுவிறுப்பாக அமைய அரைநேரம் வரை இரு அணிகளும் கோல்கள் அடிக்க வில்லை. மிகுதி அரைநேரம் தொடங்கியது.

இரு அணிகளும் கோல் அடிக்க வேண்டும் என்ற வேகத்தில் விளையாடிய போதும் ஐக்கியம் 32 ஆவது நிமிடத்தில் கோல் அடித்து முன்னணி வகித்தது. தொடர்ந்து விறுவிறுப்பாக போட்டி காணப்பட்ட போதும் 1:0 என்ற நிலையில் ஐக்கியம் வெற்றி பெற்றது.

தொடர்ந்து இரண்டாவது போட்டியில் சிவானந்தா விளையாட்டுக் கழகத்தை எதிர்கொண்ட ஐக்கியம் சிறப்பாக விளையாடியது. எதிர்பாராத விதமாக கையில் பந்துபட சிவானந்தாவுக்கு தண்ட உதை கிடைக்க அதைப் பயன்படுத்தி கோல் அடிக்க சிவானந்தா முன்னிலை பெற்றது.

வீறு கொண்ட ஐக்கியம் உடனே பதிலடி கொடுக்க 1:1 என அரைநேரம் முடிவடைந்தது. மிகுதி அரைநேரம் இரு அணிகளும் வேகமாக விளையாடிய போதும் கோல் பெறும் வாய்ப்புகள் இல்லை. தண்டஉதை மூலம் முடிவு தீர்மானிக்க ஐக்கியம் கழக சிறந்த கோல் கீப்பர் சந்துவின் சிறப்பான தடுகை மூலம் 3:1 என வெற்றி பெற்றது ஐக்கியம்.

தொடர்ந்து மூன்றாவது போட்டியில் பலமான அணியான பொலிகை பாரதி வி.கழக அணியுடன் எதிர் கொண்டது ஐக்கியம். போட்டி தொடக்கம் முதல் பல வாய்ப்புகள் கிடைத்தது. அதைத்தவற விட இடைவேளை வரை இரு அணிகளும் எந்தக் கோல்களையும் பெற முடியவில்லை. தொடர்ந்து விறுவிறுப்பாக போட்டி தொடர 23 ஆவது நிமிடத்தில் பாரதி முதலாவது கோலை போட்டு முன்னிலை வகித்தது. அதைத்தொடர்ந்து வறுகொண்ட ஐக்கியம் 36 ஆவது நிமிடத்தில் நீபனின் சிறப்பான பந்து நகர்த்த அதை சாரு கோல் ஆக்க போட்டி சமநிலை ஆனது. தண்ட உதை மூலம் முடிவு தீர்மானிக்க மீண்டும் சந்துவின் அற்புதமான கீப்பர் செயற்பாட்டின் மூலம் 4:2 என்ற அடிப்படையில் வென்று அரை இறுதிக்கு தகுதி பெற்றது (க)

## கராத்தே நடுவர்களுக்கான தேசிய பயிற்சிப் பட்டறை



உலக கராத்தே சம்மேளனத்தின் புதிய விதிமுறைகளை கற்பிக்கும் பயிற்சிப் பட்டறை கொழும்பின் டொரிங்டன் கேட்போர் கூடம் மற்றும் கலாசார மண்டபத்தில் இன்று, நாளை மற்றும் நாளை மறுதினம் நடைபெறவுள்ளது.

இலங்கை கராத்தே சம்மேளனத்தின் ஏற்பாட்டில் நடை பெறும் இந்த தேசிய பயிற்சிப் பட்ட றையை நடத்த உலக கராத்தே சம்மேளனத்தின் நடுவர் சபையின் உறுப்பினர் சென்செய். சுல்தான் மன்சூர் குவைத் தேசத்திலிருந்து வருகை தந்துள்ளமை குறிப்பிடத் தக்கது. இப்பயிற்சியில் விளக்க உரைகள் மற்றும் செய்முறை விளக்கங்களும் உள்ளடக்கப் பட்டுள்ளன. (கு)

# அரச அதிபர் வெற்றிக்கிண்ணம் கரைச்சி பிரதேச செயலகம் சம்பியன்





கிளிநொச்சி மாவட்ட செயலக நலன்புரிச் சங்கத்தினால் அரச அதிபர் வெற்றிக் கிண்ண துடுப்பாட்டப்போட்டி கடந்த 13 ஆம் திகதி அன்று கிளிநொச்சி பரவிப்பாஞ்சான் உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் மேலதிக அரசாங்க அதிபர் சி.சத்தியசீலன் தலைமையில் இடம் பெற்றது.

இப்போட்டிக்கு பிரதம விருந்திருந்தினராக கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம், சிறப்பு விருந்தினர்களாக கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச செயலாளர்களும் கலந்து சிறப்பித்தார்கள்.

வருடந்தோறும் நடைபெற்று வரும் இவ் அரச அதிபர் வெற்றிக்கிண்ணப் போட்டியில் இம்முறை மாவட்டத்திலுள்ள கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலக அணிகளும் மற்றும் மாவட்ட செயலக அணியும் போட்டியிட்டன.

இதில் அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்தை கரைச்சி பிரதேச செயலக அணி தட்டிக் கொண்டது.

பிரதம விருந்தினராக கலந்துகொண்ட அரச அதிபர், கருத்து தெரிவித்த போது, இப்போட்டியானது மாவட்ட மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்களுக் கிடையிலான நட்புறவை ஏற்படுத்தும் வகையிலும் உடல், உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும் வகையிலும் அமைந்தது என கூறியதோடு இனிவரும் காலங்களில் நடத்தப்படவுள்ள அரச அதிபர் கிண்ணப்போட்டி கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள சகல திணைக்களங்களையும் உள்ளடக்கி நடத்தவிருப்பதாகவும் தெரிவித்தார். (க-250)

## இரு வருட கால ...

வர் தும்லை மார்க் மற்றும் ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதி மக் கோலே ஆகியோருக்கும் வட மாகாண முதலமைச்சருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் வட மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்றது.

அதன்போது மேற்குறித்த விடயம் தொடர்பாக அவர்களுடன் கலந்துரையாடியுள்ளதாக முதலமைச்சர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா. இலங்கைக்கு 2 வருட கால அவகாசம் கொடுப்பதில் எமக்கு உடன்பாடில்லை என தெரிவித்திருந்தேன். அவர்கள் அதை ஏற்றுக்கொண்ட போதும் இலங்கைக்கு இதுவரை காலமும் ஒரு வருடம்தான் கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

அதில் குறிப்பிட்ட அளவு விடயங்களை செய்துள்ளார்கள். தொடர்ந்து கால அவகாசம் கொடுப்பதால் நன்மைதான் ஏற்படும் என தெரிவித்தார்கள்.

இதுவரை கால அவகாசம் கொடுத்தபோது எந்த அளவில் மக்களுக்கு நன்மை தரக்கூடியதாக இருந்தது என்பதை ஆராய்ந்து பார்த்து கால அவகாசம் கொடுப்பதில் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர்களிடம் தெரிவித்திருந்தேன்.

ஏனெனில் இதுவரை ஐ.நாவின் நேரடி கண்காணிப்பு இருக்கவில்லை. இலங்கைக்கு கால நிர்ணயம் கொடுத்து அதில் முன்னேற்றத்தை காட்டவேண்டும் என ஐ.நா எதிர்பார்த்திருந்தது.

எனவே அதனால் எந்த அளவு மாற்றம், நன்மை போன்றன மக்களிடம் இருந்துள்ளது என பரிசீலித்து பார்க்க வேண்டிய கடமை ஐ.நாவுக்கு உள்ளது. அதை அவர்கள் செய்வார்கள் என நம்புகிறோம்.

ஆனால் இரண்டு வருடங்கள் கால அவகாசம் கொடுப்பதில் எனக்கு உடன்பாடில்லை. கொடுப்பதாயின் குறுகிய காலம் கொடுத்து கூடிய ஐ.நாவின் மேற்பார்வை இருப்பது முக்கியம் என அவர் மேலும் தெரிவித்தார். (செ-9)

## போர்க்குற்ற ...

களை விடவும், நல்லாட்சி அரசாங்கத்திற்கு முன்பாக அதிகளவான சவால்கள் இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

கொழும்பில் செயற்பட்டு வருகின்ற வெளிநாட்டு ஊடகங்களின் ஊடகவியலாளர்களை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நேற்றுமுன்தினம் மாலை சந்தித்தார்.

வன்னியில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் மற்றும் மனித உரிமை மீறல் விவகாரங்கள் குறித்து விசாரணை நடத்துவது தொடர்பிலான போர்க் குற்ற நீதிமன்றம் அமைப்பது குறித்து இதன்போது ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

இதற்கு பதிலளிக்கையிலேயே முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

"தனது ஆட்சிக்காலத்தில் இருந்ததை விடவும் சவால்கள் அதிகம். அந்தக் காலத்தில் கடும்போக்கு அமைப்புகள் இருக்கவில்லை. முன்னாள் ஜனாதிபதி தலைமையிலான கூட்டு எதிரணி போன்ற பிரிவுகளும் இருக்கவில்லை. அந்த வகையில் புதிய அரசாங்கத்திற்கு சவால்கள் அதிகம் உள்ளன.

எவ்வாறாயினும் புதிய அரசியலமைப்பு தொடர்பாக வெணதாமரை திட்டம் போன்று மக்கள் ஆதரவு திரட்டும் திட்டமொன்று முன்னெடுக்கப்படுவது அவசியமாகும்.

இதுதொடர்பில் விரைந்து செயலாற்றுவது தற்காலத்தின் தேவையுமாகும்.

எனவே தற்போதைய சூழ்நிலையில் போர்க்குற்ற நீதிமன்றங்களை அமைப்பது குறித்த பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்தால் அது புதிய அரசியலமைப்பின் உருவாக்கத்தில் பாரிய பாதிப்பை உண்டு பண்ணும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் புதிய அரசியலமைப்பு தொடர்பாக மேலும் கருத்துக்களை வெளியிட்ட முன்னாள் ஜனாதிபதி, அரசாங்கத்திடம் உள்ள பலரிடம் புதிய அரசியலமைப்பு மீது சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது குறித்து அச்சம் காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டால் அதனூடாக இலங்கை இரண்டாகப் பிளவுபடும் என்றும், தமிழ்த் தலைவர்கள் எதிர்பார்க்கின்றபடி சமஷ்டி தீர்வும் வடக்கு, கிழக்கு இணைப்பும் வழங்கப்பட்டுவிடும் எனவும் தென்னிலங்கையிலுள்ள சில பேரினவாத அமைப்புக்களும் சில அரசியல்வாதிகளும் கூறிவருகின்றனர்.

மேலும் பௌத்த சாசனத்திற்கு உரிய இடம் அளிக்கப்பட்டுவிடாது என்றும் இதனால் பௌத்த தர்மமும், பௌத்த மக்களும் தாழ்ந்து விடுவார்கள் என்றும் குறித்த பிரிவினர் சுட்டிக்காட்டி வருகின்றனர்.

இந்த நிலையில் புதிய அரசியலமைப்பு தொடர்பில் இவ்வாறான தவறான பிரசாரங்கள் இடம் பெற்று வரும் நிலையில் உத்தேச புதிய அரசியலமைப்பு தொடர்பில் மக்களைத் தெளிவுபடுத்துவதன் அவசியத்தையும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வலியுறுத்தியுள்ளார். (செ-11)

## யாழில் நேற்று ...

கைகளுக்காக வீதிகளில் இறங்கியதால் அனைவரிடத்தேயும் ஒரு அச்ச நிலை ஏற்பட்டு காணப்பட்டிருந்தது.

நல்லூர் ஆலயத்திற்கு அருகாமையிலும் கல்வியங்காட்டிலும் இந்த சோதனை நடவடிக்கைகளில் இராணுவம் ஈடுபட்டிருந்ததாக தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

எனினும் இதற்கான காரணம் ஏதும் தெரியவரவில்லை. நேற்று இரவு எட்டு மணி தொடக்கம் இந்த சோதனைகள் நடைபெற்றதாக சோதனைக்கு உள்ளான சிலர் கூறியுள்ளனர்.

வீதியால் செல்லும் வாகனங்களை வழிமறித்து அவர்களுடைய வாகன அனுமதிப்பத்திரங்கள், வாகனத்தில் கொண்டு செல்லப்படும் பொருட்களை அவதானித்து சோதனைக்குப் பின் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளது.

இதில் சில வாகனங்களின் இலக்க தகடுகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. மேற்படி நடவடிக்கையில் இராணுவமும் அருகில் நின்றுகொண்டு கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தது.

இந்த திடீர் சோதனையால் அப்பகுதியால் செல்வோர் ஒருவித பய உணர்வுடன் பயணித்திருந்த போதும் கைது நடவடிக்கைகள் எதுவும் இடம்பெறவில்லை. (செ-4)

## மாத்திரையை ...

த்திற்கு பயன்படுத்தப்படும் மாத்திரையும் யாழ்.போதனா வைத்தியசாலையில் வழங்கப்பட்டுள்ளது.

இரு மாத்திரையும் மஞ்சள் நிறத்தில் இருந்தமையினால் 13ஆம் திகதி மாலை வேளையில் குழந்தையின் தாய் இரத்த அழுத்தத்திற்கு பயன்படுத்தும் மாத்திரையை குழந்தைக்கு தவறுதலாக கொடுத்துள்ளார்.

இதனையடுத்து மறுநாளான நேற்று முன்தினம் குழந்தை கடுமையாக சுகயீனமடைந்த நிலையில் தெல்லிப்பழை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளது.

இதேவேளை பிறந்து 14 நாட்களே ஆன பச்சிளம் குழந்தைக்கு எப்படி மாத்திரைகளை வைத்தியசாலை வழங்கியது என உயிரிழந்த குழந்தையின் உறவினர்கள் மரண விசாரணையின் போது கேள்வி எழுப்பியுள்ளனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மரண விசாரணை மேற்கொண்டதன் பின்னர் குழந்தையின் சடலம் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (செ-9)

## குற்றப்புலனாய்வு ...

ஆஜரான சட்டத்தரணி வி.எஸ். நிரஞ்சன் தெரிவிக்கையில்,

கடந்த வருடம் நவம்பர் மாதம் 7ஆம் திகதி குறித்த மனித புதைகுழி தொடர்பான விசாரணை மன்னார் நீதிமன்றத்தில் இடம்பெற்றது.

இதன்போது விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதவான் குறித்த வழக்கு விசாரணைகளை இன்றைய தினம் (நேற்று) வரை ஒத்தி வைத்தார்.

இதன்போது ஏற்கெனவே குற்றப்புலனாய்வுப்பிரிவிற்கு மன்னார் நீதிமன்றம் வழங்கிய உத்தரவிற்கு அமைவாக குற்றப்புலனாய்வுப் பிரிவினர் வெளிநாட்டில் உள்ள சிறந்த தடவியல் நிபுணர் குழுவிற்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்பி இருந்தனர்.

குறித்த மின்னஞ்சலில் மாந்தை மனித புதைகுழி வழக்கு தொடர்பில் உதவியை வழங்குமாறு குற்றப்புலனாய்வு பிரிவினர் கோரியிருந்தனர்.

இந்த நிலையில் தாம் அனுப்பிய மின்னஞ்சலுக்கு எவ்வித பதிலும் கிடைக்கவில்லை என மன்றில் முன்னிலையாகிய குற்றப்புலனாய்வுப்பிரிவினர் மன்றிற்கு தெரிவித்தனர்.

இதன்போது பாதிக்கப்பட்ட மக்கள் சார்பாக ஆஜராகி இருந்த சட்டத்தரணிகள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு குறித்த வெளிநாட்டு தடவியல் நிபுணர் குழுவினர் பதில் வழங்கியுள்ளமை குறித்து மன்றின் கவனத்திற்கு கொண்டு வந்தனர்.

மேலும் தடவியல் நிபுணர் குழுவினர் மார்ச் மாதம் அளவில் குறித்த மனித புதைகுழி தொடர்பில் தேவையான உதவிகளை செய்வதாக தெரிவித்துள்ளனர்.

"ரேடியோ காபன்" பரிசோதனை இறுதிக்கட்டத்தில் செய்யப்பட வேண்டும் என்றும் இந்த மனித புதைகுழியின் வயதையும் மரணம், சம்பவத்தை அளவிடுவதற்கு இப் பரிசோதனை உடனடியாக தேவை இல்லை என்றும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இதற்கான பூரண ஒத்துழைப்பை தாம் வழங்க தயாராக இருப்பதாகவும் இப் பரிசோதனைகளுக்கு தேவையான நிதி வசதிகளை தாமே மேற்கொள்வதாகவும் அவர்கள் அனுப்பி வைத்துள்ள மின்னஞ்சலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த தடவியல் நிபுணர் குழுவினர் அனுப்பிவைத்துள்ள மின்னஞ்சல் தொடர்பில் நீதிமன்றின் கவனத்திற்கு கொண்டு வந்த நிலையில் நீதிமன்றம் வழக்கினை ஒத்திவைத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பிலான முழுமையான அறிக்கையினை சமர்ப்பித்து இச்சம்பவம் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான பழமுறைகளை மேற்கொள்ளுமாறு விசேட குற்றப் புலனாய்வுப் பிரிவிற்கு நீதிமன்றம் கட்டளை ஒன்றை பிறப்பித்துள்ளது.

அதனடிப்படையில் குறித்த வழக்கு மீண்டும் எதிர்வரும் 27 ஆம் திகதி விசாரணைகளுக்காக எடுத்துக்கொள்ளப்படவுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (செ-11)

கேப்பாப்பிலவு போராட்டம் தொடர்பில்

# அரச அதிபருடனான சந்திப்பில் முடிவுகள் எடுக்கப்படவில்லை

### போராட்டத்தை வலுப்படுத்த வெளியில் ஆராய்வு

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு கேப்பாப்பிலவு மற்றும் புதுக்குடியிருப்பு மக்கள் போராட்டங்கள் தொடர்பில் நேற்று மாவட்டச் செயலகத்திற்குள் அரசாங்க அதிபருடன் நேரடியாக பேசப்பட்டுள்ள போதிலும்,

பேசி எடுக்கப்பட்ட முடிவுகளின் படி போராடும் பொதுமக்களுக்கு சாதகமான முடிவுகள் எதுவும் கிடைக்கப் பெறவில்லை.

இதன் காரணமாக வட மாகாணம் முழுவதும் பணிபகிஷ்கரிப்பு போன்ற போராட்டங்கள் தொடர இருப்பதாக அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரனிடம் மக்கள் பிரதிநிதிகள் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பாக பேசுவதற்கு மாவட்டச் செயலகத்திற்குள் இடம் கேட்கப்பட்ட போது, அரசியல் சார்ந்து போராட்டம் தொடர்பில் மாவட்டச் செயலகத்திற்குள் பேசுவதற்கு இடம் கொடுக்கமுடியாது என்று அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் மாவட்டச் செயலகத்திற்குள் இருந்து வெளியேறிய அரசியல் பிரதிநிதிகள். அதில் பாராளுமன்ற உறுப்பினர் சி. சிவமோகன் மாவட்ட செயலக வாசல் படிக்கட்டில் இருந்தபடியே பணிபகிஷ்கரிப்பு போராட்டம் தொடர்பாக இங்கு பேசலாம் என்றார்.

அதற்கு பாராளுமன்ற உறுப்பினர் சாந்தி சிறீஸ்கந்தராசா, இவ்வாறான செயல் அரசாங்க அதிபரை அவமதிப்பது போலாகி விடும் என்று அறிவுறுத்தினார்.

சரி வேறு இடம் பார்ப்போம் என்று கூறிய சிவமோகன் எம்.பி. மாவட்டச் செயலக வளாகத்தில் கூட்டம் கூட ஒழுங்கு செய்துள்ளார்.

பின்னர் ஒன்றுகூடிய மக்கள் பிரதிநிதிகள் வட மாகாணம் முழுவதும் எதிர்வரும் 20ஆம் திகதி தொடக்கம் பணி பகிஷ்கரிப்பு போன்ற பல்வேறு போராட்டங்களை முன்னெடுக்கவுள்ளதாக முடிவெடுத்துள்ளனர். (செ-281)

## இலங்கைக்கு ...

ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் தும்லை மார்க் மற்றும் ஐக்கிய நாடுகளின் இலங்கைக்கான நிரந்தர வதிவிட பிரதிநிதி மக்கோலே ஆகியோருக்கும் வடமாகாண முதலமைச்சருக்கும் இடையிலான கலந்துரையாடல் ஒன்று நேற்றைய தினம் வட மாகாண முதலமைச்சர் அலுவலகத்தில் நடைபெற்றது.

மேற்படி கலந்துரையாடலில் எதிர்வரும் மார்ச் மாதம் இடம்பெறவுள்ள ஐ.நாவின் ஜெனிவா மனித உரிமைகள் கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பாக முன்வைக்கப்படப் போகும் பிரேரணை மற்றும் அதன் சார்ந்த விடயங்கள் ஆராயப்பட்டன.

இதில் கடந்த 2015ஆம் ஆண்டு இலங்கை மீது நிறைவேற்றப்பட்ட ஜெனிவா பிரேரணையை முழுமையாக இலங்கை அரசு அமுலாக்குவதற்கு ஒரு வருட கால அவகாசம் ஏற்கெனவே வழங்கப்பட்டு அந்த அவகாசம் முடிவடைந்தமை சுட்டிக் காட்டப்பட்டது.

இந்நிலையில் இலங்கை அரசு மேற்படி பிரேரணையை இன்னமும் முழுமையாக அமுல்படுத்தாத போதிலும் ஏற்கத்தக்க மாற்றங்களை மேற்கொண்டு வருகிறது என கருத்துரைத்த ஐரோப்பிய மற்றும் ஐ.நா பிரதிநிதிகள் இதற்காக இலங்கை அரசுக்கு மேலும் இரு வருட கால அவகாசத்தை நீடிப்புச் செய்வதில் என்ன இடர்பாடுகள் ஏற்படும் என வடக்கு முதல்வரிடம் வினவியுள்ளனர்.

இதற்கு, கால அவகாசத்தினை கொடுக்கும் போது இவ்வளவு காலமும் எடுத்த நடவடிக்கைகள் எந்தளவிற்கு மக்களுக்கு நன்மை கிடைத்துள்ளதென ஆராய்ந்து பார்க்க வேண்டுமென குறிப்பிட்ட வடக்கு முதல்வர்,

வாராந்தம் மற்றும் மாதாந்தம் என்ன செய்கின்றார்கள் என்பதனை ஐ.நா. அறியக்கூடியவாறு ஏதாவது ஒரு செயற்திட்டத்தினை வகுக்குமாறு கூறமுடியுமா என மேலும் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் கால அவகாசம் வழங்குவதில் தமக்கு எவ்வித உடன்பாடு இல்லையென தெரிவித்த வடக்கு முதல்வர், குறுகிய காலமும் அதிகளவான மேற்பார்வையே முக்கியமானதென வலியுறுத்தியுள்ளார்.

இதேவேளை இலங்கைக்கு கால அவகாசம் வழங்குவதாக இருந்தால், ஐ.நாவின் நேரடி கண்காணிப்பிலேயே வழங்கப்பட வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் முன்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

# கூரையைப் பிரித்து பணம் திருட்டு

யாழ்ப்பாணம், கைலாசபிள்ளையார் கோயில் பகுதியில் உள்ள கடை ஒன்றின் கூரையைப் பிரித்து உள்ளே இறங்கிய திருடர்கள், 25 ஆயிரம் ரூபாய் பணத்தை திருடிச் சென்ற சம்பவமொன்று நேற்று அதிகாலை இடம்பெற்றுள்ளது.

கடை உரிமையாளர் வழமை போன்று நேற்று முன்தினம் இரவு 9 மணியளவில் வர்த்தக நிலையத்தை மூடிவிட்டு வீட்டுக்குச் சென்றுள்ளார்.

நேற்று காலை, கடையினைத் திறந்து உள்ளே சென்றபோதே, கூரை பிரிக்கப்பட்டமை தெரிய வந்துள்ளது.

இதனையடுத்து கடைக்குச் சென்று பார்த்தபோது, காசுப்பெட்டியில் வைக்கப்பட்டிருந்த 25ஆயிரம் ரூபாய் பணம் திருடியுள்ளமை தெரியவந்துள்ளது.

இது தொடர்பில், யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைய, பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (செ-11)

## வடக்கு - கிழக்கு...

கியமானதோ, அதேயளவு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதும் அவசியம் என கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நசீர் அஹமட் தெரிவித்துள்ளார்.

வடக்குக் கிழக்கு இணைப்பு தொடர்பில் பேச கிழக்கு மாகாண முதலமைச்சர் முன்வந்தால், அவருடன் பேச்சு நடத்த தயாராக இருப்பதாக வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

மட்டக்களப்பில் தமிழ் மக்கள் பேரவைக்கும், முஸ்லிம் சிவில் அமைப்புகளுக்கும் இடையில் கடந்த 10-ம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சந்திப்பின் பின்னர் அவர் இந்த அழைப்பை விடுத்திருந்தார்.

இந்நிலையில், வடமாகாண முதலமைச்சர் விக்னேஸ்வரனின் இந்த அழைப்பு தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

அதியுச்ச அதிகாரப் பகிர்வை பெற்றுக் கொள்வதற்காக தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் தலைமைத்துவங்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். ஆனால் இந்த இரு சமூகங்களும் ஒன்றிணைந்து செயற்படுவதை அரசாங்கம் ஒருபோதும் விரும்பாது. இதனை நான் பலமுறை வலியுறுத்தியுள்ளேன். சிறுபான்மை இன மக்களின் உரிமைகளுக்கான போராட்டம் அவசியமாகியுள்ளது.

அரசாங்கம் நேர்மையுடன் செயற்பட்டிருந்தால் குறைந்தபட்சம் அரசியலமைப்பில் மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை கடந்த இரண்டு ஆண்டுகளில் வழங்கியிருக்கலாம்.

ஆனால் அரசாங்கம் அவ்வாறு செய்யாது. மாகாண சபைகளின் அதிகாரங்களை மேலும் குறைக்கும் வகையிலேயே செயற்பட்டு வருகின்றது. அரசாங்கத்தின் இந்த செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது.

சிறுபான்மை இன மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்காக தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல் தலைமைத்துவங்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்பதே எமது கட்சியின் நிலைப்பாடாகவும் உள்ளது என கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் மேலும் தெரிவித்தார்.

முன்னதாக, மட்டக்களப்பில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற எழுக தமிழ் நிகழ்வில் உரையாற்றிய விக்னேஸ்வரன், தமிழ், முஸ்லிம் ஒற்றுமை முயற்சிகளை முன்னெடுப்பதற்குத் தமிழ் மக்கள் பேரவை தன்னாலான அனைத்து முயற்சிகளிலும் ஈடுபடுவதுடன் சகல இனங்களின் பாதுகாப்பிற்காகவும் நாம் பாடுபடுவோம்.

எம்முடன் நீங்கள் அனைவரும் கட்சி பேதம் இன்றி, பிரதேசவாதம், வர்க்க பேதம் இன்றி, பால் பேதமின்றி, மத பேதமின்றி அரசாங்கத்தின் தவறான நடவடிக்கைகளைக் கண்டிக்க முன் வரவேண்டும்.

தமிழ் பேசும் மக்களுக்கு ஒரே அரசியல் தீர்வாக விளங்கக் கூடிய சமஷ்டி அரசியல் அமைப்பின் தேவையை வலியுறுத்த வேண்டும். முஸ்லிம் மக்களுக்கும் ஒரு சமஷ்டி அலகு வழங்கப்பட வேண்டும் என்பதில் நாம் உறுதியாக இருக்கின்றோம்.

எமது ஒற்றுமையை கிறிஸ்தவ, இந்து தமிழ் மக்களும், தமிழ் பேசும் இஸ்லாமிய மக்களும் உலகறியச் செய்ய வேண்டும். இதற்காக எமது குரல்கள் யாவும் ஒருமித்து ஓங்கி ஒலிக்கட்டும் எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## இலங்கை அர...

நகரில் இடம்பெறவுள்ள தொடர் போராட்டம் தொடர்பில் அவர்கள் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இறுதியுத்தத்தில் வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாம் இது வரை அரசியல்வாதிகளையும் நல்லாட்சி அரசு என்று கூறப்படும் இந்த அரசாங்கத்தையும் நம்பி ஏமாந்துவிட்டோம்.

எமது பிள்ளைகளைக் கண்டுபிடிக்க நாம் தான் போராட வேண்டும் என்ற முடிவுக்கு வந்ததன் காரணமாக இம்மாதம் 20 ஆம் திகதி போராட்டத்தை தொடங்கவுள்ளோம். அன்றைய தினம் ஒரு கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்று அடுத்த நாள் 21 ஆம் திகதி எம்மால் ஐக்கிய நாடுகள் செயலாளர் நாயகத்திற்கு மகஜர் கையளிக்கப்படுவதைத் தொடர்ந்து கவனயீர்ப்புப் போராட்டத்தை நடத்தவுள்ளோம்.

நாம் சடப்பொருளையோ? அசையும் அசையா சொத்தையோ? கோரி நிற்கவில்லை. எமது இரத்தத்தின் இரத்தங்களை கோரி நிற்கின்றோம். உயிர்களைக் கோரி நிற்கின்றோம். அவர்களை மறைத்து வைத்திருக்கும் இடங்களை வெளிப்படுத்தி அவர்களின் பெயர்ப் பட்டியலை வெளியிடும்படி கோரி நிற்கின்றோம்.

இதன்மூலம் இந்த அரசாங்கத்திற்கு ஐ.நாவால் அழுத்தம் பிரயோகிக்கப்படவேண்டும். இலங்கைக்கு மீண்டும் கால அவகாசம் வழங்கக்கூடாது எனக் கோரி நிற்கின்றோம்.

நாம் எட்டு வருடங்களாக எமது பிள்ளையை கணவனை தந்தையைக்காணாது உடல், உள,பொருளாதார ரீதியில் நலிவடைந்த நிலையில் அநாதரவாக எல்லோராலும் கைவிடப்பட்ட நிலையில் உள்ளோம்.

தற்போது நாம் நம்பியிருப்பது அரசியல் வாதிகளை அல்ல. எமது இந்நிலையை உணரக்கூடிய எங்களில் ஒருவராக இருக்கின்ற எங்கள் மக்களையேதான்.

எனவே தயவு செய்து மக்களாகிய நீங்கள் தனிப்பட்ட ரீதியிலும் பல்வேறுபட்ட சமூக அமைப்புக்களாலும் பல்கலைக்கழகம் சமூகக்குழுக்களாவும் தொழிற் சங்கங்களாகவும் மத குருமார்களாகவும் எமக்கு ஆதரவு தந்து எமது போராட்டம் மூலம் எமது உறவுகளை மீட்டெடுக்க தோள்கொடுக்க வேண்டும் என்று மன்றாட்டமாக இரு கரம் கூப்பி கேட்டுக் கொள்கின்றோம் என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (செ-9)

## 24 கிலோ கஞ்சா...

முறியடிக்கும் வகையில் விசாரணை நடவடிக்கைகள் இளவாலை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

நேற்றுக் காலை 6.30 மணியளவில் மாதகல் பிரதேசத்தின் சந்தேகத்திற்கு இடமான முறையில் பயணம் செய்த முச்சக்கர வண்டியொன்றை பொலிஸார் சோதனையிட்டிருந்தனர். இதன்போது குறித்த முச்சக்கர வண்டியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் குறித்த கஞ்சா பொதிகளானது கைப்பற்றப்பட்டதுடன் முச்சக்கரவண்டியில் இருந்த மூவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

மேலும் குறித்த கஞ்சாவினை கொழும்பிற்கு கடத்தி செல்வதற்கே திட்டமிட்டிருந்ததாக ஆரம்பகட்ட விசாரணைகளூடாக தெரிய வந்துள்ளது. கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் மொத்த நிறையானது 24கிலோ எனவும், அதன் பெறுமதி 24இலட்சம் இலங்கை ரூபாய்கள் எனவும் இளவாலை பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் கைது செய்யப்பட்ட மூவருடன் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சா மற்றும் முச்சக்கரவண்டியை மல்லாகம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இளவாலை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார். (செ-4)


### பிரதேச செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்

வலம்புரியின் பிரதேச செய்தியாளராகப் பணியாற்ற விரும்புகிறீர்களா? உங்கள் விருப்பத்தை நிறைவு செய்ய உங்கள் சுய விபரம் அடங்கிய விண்ணப்பத்தை பிரதம ஆசிரியர், வலம்புரி, இல.03, 2ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

உங்கள் விண்ணப்பத்தில் முழுப்பெயர், பால், பிறந்ததிகதி, நிரந்தர முகவரி, தபால்முகவரி, தொலைபேசி இலக்கம், தொழில், தே.அ.அ.இல, திருமண நிலை, கல்வித்தகைமை, தங்களைக் கேட்டறியக்கூடிய இருவரின் பெயர், விலாசம் என்பவற்றுடன் எதிர்வரும் 20.02.2017 இற்கு முன்பாக தபாலிலோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்
வலம்புரி

### மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

அனைத்து புத்தகங்களுக்கும் 10% - 30% வரையான விசேட விலைக்கழிவுகள்
இடம் : முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரி,முல்லைத்தீவு
காலம் : 16.02.2017 - 22.02.2017 வரை

ஏற்பாட்டாளர்கள் : யாழ்.புத்தகசாலை
22, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7568, 077 834 9507
(A-7551)

### பணிநிலை வேண்டுகை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள நிறுவனத்துக்கு
01. Heavy Vehicle Driver (Colombo - Jaffna)
02. Marketing Sales & Executives for Distribution
03. Accounting Staff (MS Office, MS Excel, Quick book)
தேவை. மேலதிக விபரங்களுக்கு:

KINGS ELECTRONICS (PVT) LTD
No.12,Point Petro Road, Jaffna.
T.P : 021 454 6699
(A-7559)

### கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்

இடம் : கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி
காலம் : 19.02.2017 ஞாயிற்றுக்கிழமை
நேரம் : பிற்பகல் 2.30 மணி

அனைத்து பழைய மாணவர்களையும் வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நன்றி
பழைய மாணவர் சங்கம்
கிளி/தருமபுரம் மத்திய கல்லூரி.
(7956)

### சிவபூமி முதியோர் இல்ல 10வது ஆண்டு நினைவாக புதிய கட்டடம் திறப்பு விழா

இடம்
சிவபூமி முதியோர் இல்லம், வழக்கம்பராய், சுழிபுரம்.

காலம்
16.02.2017 வியாழக்கிழமை முற்பகல் 9.30 மணி

தலைமை
கலாநிதி ஆறு.திருமுருகன்
(தலைவர் – சிவபூமி அறக்கட்டளை)

பிரதம விருந்தினர்
திருமதி ஜெயலக்ஷ்மி சாரட்
(மெல்போன் – அவுஸ்ரேலியா)

சிறப்பு விருந்தினர்
திரு.S.P.ஏஞ்சல்
(நீர்கொழும்பு)

அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம். நன்றி

சிவபூமி முதியோர் இல்லம், வழக்கம்பராய், சுழிபுரம். 021 225 0085
sivapoomi@gmail.com
சிவபூமி அறக்கட்டளை, கோண்டாவில், இலங்கை. 021 222 7938
(7958)

### கணினி திருத்தம்

உங்களது வீடுகளுக்கே வந்து கணினிகள் திருத்தி தருகிறோம். Computer Repair
GUNA BEST PC 077 9086737
லப்டொப் கணினிகள் திருத்தம் விற்பனை பாவித்த கணினிகள் வாங்குதல்
50/12,Hospital Road Jaffna. 522,Manipay Road Jaffna.

### விரைவு பொதிகள் சேவை, விமான பயணச்சீட்டுகள் விசா சேவைகள்

● அனைத்து சேவைகளும் மிக குறைந்த கட்டணத்தில்



UK-550/=Kg
மற்றும் அனைத்து நாடுகளுக்கும் குறைந்த விலையில்
DELIVERY IN 3 - 5 DAYS

V2 TRAVELS- 0768226240
● யாழ்ப்பாணம் ● கிளிநொச்சி ● நெல்லியடி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை

### கணினி தொழில்நுட்பவியலாளர்கள் தேவை

Computer Technician

எமது நிறுவனத்தில் முழு/பகுதிநேரமாக இணைவதற்கு சிறப்புத்தேர்ச்சிமிக்க கணினி தொழில்நுட்பவியலாளர்கள் தேவை

❖ வவுனியா ❖ கிளிநொச்சி ❖ முல்லைத்தீவு ❖ மன்னார்
❖ திருகோணமலை ❖ மட்டக்களப்பு ❖ அம்பாறை

மேற்குறித்த பிரதேசங்களில் வசித்து எமது அணியில் இணைவதற்கு சுயவிபரக்கோவையை உடன் அனுப்புங்கள்

GUNAA BEST PC Computer Repair & Sale
52,Hospital Road, Jaffna. T.P. 0779086737
e.mail : gunaabestpc@gmail.com
(A-7562)

### கணக்கீடு

A/L 2018 பிரிவு I - 6 am, பிரிவு II - 2 pm
நிதிக்கூற்றுக்கள்
ஆரம்பம் : சனி 18.02.2017
A/L 2019 – 3 pm
கணக்கீட்டுச் சமன்பாடு
ஆரம்பம் : சனி 18.02.2017
A/L 2017 Day – 4 pm
கிரயக்கணக்கீடு
ஆரம்பம் : சனி 18.02.2017
A/L Day பிரிவு I- திங். – வெள்ளி 6 am
பிரிவு II- சனி, ஞாயிறு 6 pm
S.தவா
Universal கந்தர்மடம்
(7968)


இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.02.2017 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.